
கல்கி
KALKI 24.11.2002
ரூ. 6.00
மாணவர் உலகம்
மருவத்தூர்

புட்டபர்த்தி

(நவம்பர் 23, ஸ்ரீ சத்ய சாயி பாபா ஜயந்தி)



கருணையைப் பிலிற்றும்
கண்கள்;
துன்பங்களைத் துடைக்கும்
கைகள்;

மாசற்ற அன்புக்கும்
வழுவறு பக்திக்கும்
இளகிடும் ஈர
உளம்;

அவரிடம் உண்டு
அளப்பரிய கரிசனம்;
கண்ணிரண்டும் காணப்
போதுமோ அத்தகு
மகானின் தரிசனம்;
பாபாவின் எண்ணத்
தராசில் யாவரும்
சரிசமம்;

விதைக்க வந்தவனின்
குலம் கோத்திரம்
விசாரித்த பிறகா
நெடுவயலில் வளர்கிறது நாற்று;
வனசங்களின்
நிறை குறைகளை ஆராய்ந்து
முடித்த பின்பா
முகையை மலர்த்துகிறது காற்று;

பாபாவின்
கழலினைச் சேர்ந்தால்
தொல்வினை தோஷங்கள்
தீர்ந்து போகும்;
வேரோடு வேராய்
பேர்ந்து போகும் — நமை விட்டு
ஓரமாய் அவை
ஊர்ந்து போகும்;
இதனை
ஓர்ந்து போகும்
எவ்வுயிரும் ஒப்பரிய
வீட்டரசுக்கு ஏகும்.

— ரா. நிரஞ்சன் பாரதி

(கவிஞர் பற்றிய குறிப்புக்கு 87-ம் பக்கம் பார்க்க)


கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
புதிய ஈ மெயில் முகவரிகள் : எடிடோரியல் : kalki@kalkiweekly.com
சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com



உற்சாக ஊற்றின் ஓய்வு!

அரன்ட்க்ஸா சான்செஸ் விகாரியோ என்றவுடனே அவரது சிரித்த முகம்தான் டென்னிஸ் ரசிகர்களுக்குத் தோன்றும். 1996 ஒலிம்பிக்ஸில் விம்பிள்டன் இறுதிச் சுற்றில் ஸ்டெபி க்ராஃபிடம் தோற்றபோது கூட முகம் நிறையப் புன்னகைதான். விளையாட்டாக வெற்றிக் கோப்பையை ஸ்டெபியிடமிருந்து பறித்துக்கொண்டு சில நொடிகள் போஸ் கொடுத்தார். ஸ்டெபியும் அதை சிநேகத்துடன் ஏற்றுக்கொண்டார் என்றால் அது சான்செஸின் நட்பான அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றி.

அப்படிப்பட்ட சான்செஸ் சமீபத்தில் கண்ணீர் வழியக் காட்சி தந்தார். 'நான் டென்னிஸ் விளையாடுவதிலிருந்து ஓய்வு பெறுகிறேன்' என்றபோதுதான் கண்ணீர்!



மிகவும் உற்சாகமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் சான்செஸ். அப்பா மாரிஸா விகாரியோதான் இவருக்கு டென்னிஸ் பயிற்சி அளித்தவர். அம்மாவின் பெயர் எமிலி சான்செஸ். ஆக இவருக்கே உரித்தான பெயர் அரன்ட்க்ஸா மட்டுமே.

பிறந்தது ஒலிம்பிக்ஸ் நடைபெற்ற ஓர் இடத்தில். ஸ்பெயின் நாட்டில் என்றும் க்ளூ கொடுத்தால், உடனே பார்சிலோனா என்று கண்டுபிடிப்பீர்கள்.

தனக்கு டென்னிஸ் தவிரப் பிடித்தவை மிருகங்கள் (மனித மிருகங்கள் அல்ல) என்பதை ஏற்கெனவே பேட்டிகளில் கூறியிருக்கிறார் சான்செஸ். அவரது வீட்டில் எப்போதும் குறைந்தது இரண்டு நாய்களாவது இருக்கும். புத்தகங்கள் வாசிக்கப் பிடிக்கும்.

ஒன்றிரண்டல்ல, ஐந்து மொழிகளை வெகு சரளமாகப் பேசக் கூடியவர். அந்தப் பாக்கியம் பெற்ற மொழிகள் ஸ்பானிஷ், இத்தாலியன், பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் ஆங்கிலம்.

தமது பதினேழாவது வயதிலேயே முதல் கிராண்டஸ்லாம் பட்டத்தைப் பெற்றார், பிரெஞ்சு ஓபனில். மீண்டும் அதே களிமண் களத்தில், 1994ல் அதே போன்ற சாதனை படைத்தார். 1994ல் யு.எஸ்.ஓபன் பட்டமும் அவருக்கே சொந்தமானது.

1995 நவம்பர் 26 இவருக்கு ஒரு பொன்னாள். அன்றுதான் டென்னிஸ் உலகின் நம்பர் ஒன் ராங்கைப் பெற்றார்.

ஒலிம்பிக்ஸில் இருமுறை இரு விதமாகப் பதக்கங்கள் பெற்றவர். பார்சிலோனாவில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் ஒற்றையர் ஆட்டத்தில் வெண்கலமும், இரட்டையர் ஆட்டத்தில் வெள்ளியும் பெற்றார். அட்லாண்டா ஒலிம்பிக்ஸில் இதற்கு நேரெதிர். ஒற்றையர் ஆட்டத்தில் வெள்ளி; இரட்டையரில் வெண்கலம். இரு ஒலிம்பிக்ஸிலும் இரட்டையர் ஆட்டத்தில் இவரோடு இணைந்து ஆடியவர் காஞ்சிடா மார்டின்ஸ்.

நான்கு கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றவர் சான்செஸ்.

- குல்லூ

பதவி போனாலும் பங்களாவை விடலாமா...!

ஒன்பதாவது முறையாக அமைச்சரவை மாற்றம். இதுவரை 48 எம்.எல்.ஏக்கள் அமைச்சர்களாக பொறுப்பேற்று இருக்கிறார்கள். அதில் 21 பேர் அம்மாவின் பாசத்தை இழந்து விட, 26 பேர் தொடர்கிறார்கள், நாளைய நிலையைப் பற்றிய கவலையுடன்.

''அமைச்சர்களை நீக்குவதும், நியமிப்பதும் முதல்வரின் பிரத்யேக உரிமை என்றாலும், நிர்வாகமே ஸ்தம்பித்துப் போகுமளவுக்குச் செய்யப்படும் மாற்றங்களைப் பற்றி, கேள்வி கேட்க பொதுமக்களுக்கு உரிமை உண்டு. இரண்டு காரணங்களுக்காக இது போன்ற தடாலடி மாற்றங்களை முதல்வர் கைவிட வேண்டும். முதலாவது, அமைச்சர்களுக்கு ஸ்திரத்தன்மை பற்றிய நம்பிக்கை வராது; அது அவர்களது செயல்பாடுகளில் பாதிப்பை உண்டாக்கி நிர்வாகத்தை ஊனப்படுத்தும். அடுத்தபடியாக, அதிகாரிகள் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று தங்கள் இஷ்டத்துக்குச் செயல்பட இந்த அதிரடி மாற்றங்கள் வழி வகுக்கும். 'இந்த அமைச்சர் சொல்வதை ஏன் கேட்க வேண்டும்?' இவர் நாளையோ, நாளை மறுநாளோ இடத்தைக் காலி செய்துவிடுவார் என்ற நிலை இருக்குமானால், அதிகாரிகளை யார் தட்டிக் கேட்டு நிர்வாகத்தை விரைவுபடுத்துவது?'' என்கிறார் ஒரு முன்னாள் அரசு அதிகாரி.

அமைச்சர்கள் பொன்னையன், தம்பித்துரை, பன்னீர்செல்வம் ஆகியோரது இலாகாக்களில்தான் 'அதிகாரிகள் - அமைச்சர்கள்' வேலைச் சூழல் விதிகளின்படி அமைந்திருக்கிறது. ஜெயக்குமார் போன்ற ஓரளவு செல்வாக்கு இருப்பவர்கள்கூட, அதிகாரிகளைக் கட்டி ஆள முடியவில்லை. இந்த நிலையில் 'எதற்கு சார் இந்தப் பொறுப்பு. எம்.எல்.ஏவாகவே இருந்து விட்டுப் போயிருப்போம்'' என்கிறார் பதவியேற்ற சில நாட்களில் அமைச்சர் பொறுப்பை இழந்த ஒருவர்.

''திறமையைத் தேடி அலைகிறார் முதல்வர். செயல்பாடுகள் ஏமாற்றம் அளிக்கையில் மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்கிறார் மற்றொரு ஆளும் கட்சி எம்.எல்.ஏ.



பன்னீர் செல்வம் அமைச்சரவையில் இருந்த அன்வர் ராஜா மீண்டும் ஜெ. வந்த போது நீக்கப்பட்டார். இப்போது மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட நிலையில், சிறுபான்மையினரைச் சமாதானப்படுத்த இஸ்லாமியரான அன்வர் ராஜாவை மீண்டும் சேர்த்திருக்கிறார்கள். ராமநாதபுரம் மாவட்ட உட்கட்சிப் பூசலில் இவர் கரம் ஓங்கி, அமைச்சர் பதவியை இழந்த வ.து. நடராஜனின் செல்வாக்கு இனி சரியும்.

அமைச்சர், பொறுப்பை இழந்த பிறகு குறிப்பிட்ட காலத்துக்குள் பங்களாவைக் காலி செய்ய வேண்டும். ஆனால் பதவியிழந்த ஓர் அமைச்சர், நண்பர்களிடம் ''எதற்குக் காலி செய்ய வேண்டும்...? சிறிது காலம் பொறுப்போம்; மீண்டும் அமைச்சராகப் போட்டால் இதே பங்களாவில் தொடரலாமே'' என்றாராம். ஜெயலலிதாவின் செயல்பாட்டில் அவர் வைத்திருக்கும் நம்பிக்கை இது!

கௌசி

ஓ ஹோ ஹோ இயக்குனர்கள்!



• ஏ.ஆர். முருகதாஸ்

கைவசமிருக்கும் படங்களின் எண்ணிக்கை அடிப்படையில், நடிகைகளில் யாருக்கு முதலிடம் என்கிற ஆக்கபூர்வ (ஹி..ஹி..) ஆராய்ச்சியில் இறங்கியதில் கிடைத்த ரிசல்ட்! திரிஷா! அறிமுகப்படமான 'லேசா லேசா'கூட இன்னும் வெளிவராத இவரது கரங்களில் மொத்தம் ஏழு படங்கள். சூர்யா, ஸ்ரீகாந்த், தருண் என்று கொழு கொழு அமுல் ஹீரோக்களுக்கு ஜோடி. பம்பர் பரிசாக கமலோடும் ஜோடி சேரப் போகிறார். திரிஷாவுக்கான கதைகளைத் தேர்வு செய்வதில் அவரது தாய்க்குலம் இரண்டாவது ஞாயிறுதோறும் வட்டமேஜை மாநாடே நடத்துகிறாராம். கதை சொல்ல வரும் உதவி இயக்குனர்களிடம் இதெல்லாம் ஒரு கதையா? என்று சூடான தேநீரோடு, கடு சொற்களையும் பரிமாறி அனுப்பி வைக்கிறாராம்... இப்படி திரிஷாவின் கால் ஷீட்டுக்காகக் கதை சொல்லப் போய், சுவரில் அடித்த பந்து மாதிரி திரும்பி வந்த ஒரு நகைச்சுவை பட இயக்குனர், 'திரிஷா மாதிரியே ஒரு கதாநாயகியைத் தேடிப் பிடித்து அறிமுகப்படுத்துகிறேனா இல்லையா பார்?' என்று வெகுண்டு எழுந்திருக்கிறார். திரிஷாவுக்கு மாற்றாக அவரது சாயலில் அறிமுகமாகும், அந்தப் புதிய முகம் நேகா! 'இனிது இனிது காதல் இனிது' படத்தின் கதாநாயகி... ஹைதராபாத்திலிருந்து தெலுங்கில் மாட்டலாடியபடி கோடம்பாக்கம் வந்திருக்கும் நேகாவின் தோற்றத்தைப் பார்த்தால் இட்ஸ் ஓகே என்பது மாதிரிதான் தெரிகிறது. படத்தின் தலைப்பைச் சொல்லியாகிவிட்டது. அப்போ அந்த புரட்சிகர இயக்குனர் யாரென்று இந்நேரம் உங்களுக்குப் புரிந்திருக்கும்?



• 'இனிது இனிது காதல் இனிது' • நேகா

தீபாவளிப் படங்களில் வியாபார ரீதியாகவும், விமர்சனப் பார்வையிலும் முதலிடத்தைப் பிடித்திருக்கும் 'ரமணா' படத்தின் இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ், தோற்றத்தில் கல்லூரி இரண்டாமாண்டு மாணவரைப் போல எளிமையாக இருக்கிறார். இத்தனை பெரிய வெற்றியைக் கொடுத்துவிட்டு, வழக்கம் போல தமது பழைய டி.வி.எஸ்.50



• 'ராமச்சந்திரா'• சத்யராஜ்



• திரிஷா

வாகனத்திலேயே போய்க் கொண்டிருக்கிறார்.

''பக்கம் பக்கமாய் வசனம் பேசி, ரத்தம் கக்க வில்லன்களைப் புடைக்கும் விஜயகாந்தின் ஆக்ஷன் இமேஜை சுக்கல் சுக்கலாய் உடைத்து, உங்களால் இப்படியொரு படம் எப்படி முடிந்தது?'' என்றால்...

''அவருக்கு இருபது வருஷமா இருந்த ஆக்ஷன் இமேஜ்தான் இந்தப் படத்துக்கு எதிர்மறையா உதவியிருக்கு. அநியாயத்தைத் தட்டிக் கேட்கிறவர், அவர் சொன்னா சரியா இருக்கும்ன்னு மக்கள் நம்பறாங்க. அந்த நம்பிக்கையை வெச்சுக்கிட்டு 'ரமணா' பாத்திரத்தை உருவாக்கினேன். கதையைக் கேட்ட பிறகு விஜயகாந்த் சாருக்கே ஒரு தெளிவு வந்துடுச்சு. இந்த கேரக்டர் இதுக்கு மேலே பேசக் கூடாதுன்னு அவரே சொல்ல ஆரம்பிச்சார்'' எனும் முருகதாஸ், அடிப்படையில் ஒரு சிறுகதை எழுத்தாளர்... முருகதாஸுக்கு இப்போது பெண் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் வெளிவந்து தயாரிப்புச் செலவைப் போல இரு மடங்கு லாபம் சம்பாதித்த இரண்டு படங்களின் இயக்குனர்கள் ('ஓ' போட வைத்த படமும், 'ஓட்டமா'ய் ஓடிக் கொண்டிருக்கும் படமும்), அடுத்த படத்திற்குத் தலா ஒரு கோடி சம்பளம் கேட்டதில் முன்னணி ஹீரோக்களின் காதுகளிலிருந்து ரயில் எஞ்சின் அளவுக்குப் புகை... ஓ...! இது இயக்குனர்களின் காலம்!



• 'பல்லவன்'- மனோஜ், ரதி

'**ரொ**ம்ப நாளைக்குப் பிறகு மாறன் படம் எனக்கு

ரொம்ப திருப்தியா அமைஞ்சு நிறைய பாராட்டும் குவிஞ்சது... சரி, கொஞ்சம் ஓய்வெடுத்துக்கலாம்ன்னா, உங்களுக்கு உடம்புலே முறுக்கு குறையலே. வந்து போலீஸ் அதிகாரியா நடிங்கன்னு ராமச்சந்திரா படத்துக்குக் கூட்டி வந்துட்டாங்க... மரத்தைச்சுற்றி டூயட்டெல்லாம் பாட மாட்டேன்கிற நிபந்தனையோடத்தான் நடிக்கிறேன்" என்று சிரிக்கும் தொப்பையில்லாத சத்யராஜ், மாறனுக்குப் பிறகு மறுபடியும் பிஸியாகிவிட்டார். ராமச்சந்திரா படத்தில் காக்கிசட்டை போடாத போலீஸ் அதிகாரி என்று தகவல்... பெரிய புதுமை போங்க!

பாரதி ராஜாவின் வாரிசு என்ற பலமான அஸ்திவாரம் இருந்தும், வெற்றி படம் தர முடியாத மனோஜ் கே. பாரதிக்கு, 'பல்லவன்' படம் திருப்புமுனையாக அமையும் என்கிறார்கள். காரணம் லாஜிக் பற்றிய கவலையின்றி இரண்டரை மணி நேரம் ஜாலியாக கவலை மறந்து சிரிக்க ஏற்பாடு செய்திருக்கிறாராம் படத்தின் இயக்குனர் பத்மா மகன். அப்படி என்னதான் இருக்கு படத்தில்?

'மனோஜின் அம்மா பல்லவன் பஸ்ஸில் போகும்போது பிரசவமாகி மனோஜ் பிறக்கிறார்! அதனால் அவரது ஆயுட்காலம் வரைக்கும் இலவச பஸ் பயணம் செய்துக்கலாம். இதனால் எங்கே வேண்டுமானாலும் ஏறுவது, இறங்குவதென்று விட்டேத்தியாகத் திரிகிற மனோஜுக்கு, காதலித்துத் திருமணம் செய்வதுதான் இலட்சியம். கதாநாயகி ரதியை ஒரு சந்திப்பில் காதலிக்கத் தொடங்குகிறார்... காதல் நிறைவேறியதா இல்லையா என்பதுதான் கதை" என்கிறார் இயக்குனர் மூச்சு வாங்கியபடி.

பிரபல மூலிகை சோப்பு விளம்பரம் ஒன்றில் நடித்திருக்கும் சிம்ரன், இப்போது அந்த சோப்பு பிடித்துப் போய் அதைப் பயன்படுத்துகிறாராம். தகவல் உபயம் சிம்ரனின் ஹேர்டிரஸ்ஸர். (ஆஹா! இதுவல்லவோ தகவல்!)

கொசுறு:

அற்புதம் படத்தின் இயக்குனர் தமது பெயரை அற்புதன் என்று வைத்துக் கொண்டதைப் போல 'ஒளி' படத்தின் இயக்குனர் தமது பெயரை ஒளிச்சந்திரன் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்.!

'ராட்சசன்', 'ரெடி' என்று படமெடுப்போருக்கு இந்த விபரீத ஆசை வந்துவிடாமல் இருக்க வேண்டும்!



மேல்மருவத்தூர் நெடுஞ்சாலையில் செல்லும் போது ஆதிபராசக்தி கோயிலை நினைத்துக் கொண்டு கன்னத்தில் போட்டுக் கொள்கிறீர்களா..? கோயிலின் பின்னால் கல்விக் கோயில்களும் இருக்கின்றன. பொறியி



மாணவர் உலகம் மருவத்தூர்!

யல், பாலிடெக்னிக், நர்ஸிங், பார்மஸி, பிஸியோ தெரபி கல்லூரிகள் சப்தமில்லா சாதனைகள் செய்து வருகின்றன. பல் மருத்துவக் கல்லூரி தயாராக இருக்கிறது. வரும் கல்வி யாண்டிலிருந்து செயல்படும். மருத்துவக் கல்லூரிக்கான கட்டட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றைத் தவிர மேல் மருவத்தூரிலிருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ள கலவை என்ற கிராமத்தில் மற்றொரு பெரிய கல்வி வளாகம் உருவாகி வருகிறது. அந்த வளாகம் உருவான விதம் வித்தியாசமானது என்கிறார்கள் அடிகளாரின் பக்தர்கள்.

மேல்மருவத்தூரில் நடைபெற்று வரும் கல்விப் பணியின்







புகழ் பரவி வந்த கால கட்டம் அது. வேலூர் சென்று விட்டு மேல் மருவத்தூர் திரும்பிக் கொண்டிருந்தார் அடிகளார். அப்போது கலவையில் அவர் பக்தர்கள், காரை நிறுத்தி தரிசனம் செய்தது மட்டுமல்லாமல் ஒரு கோரிக்கையையும் வைத்தார்கள். "மேல்மருவத்தூரைப் போன்றே இங்கேயும் ஒரு கல்வி வளாகம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கைதான் அது. 'நிலம் வேண்டுமே" என்றார் அடிகளார். காஞ்சி மடத்துக்குச் சொந்தமாக 75 ஏக்கர் நிலமிருப்பதாகச் சொன்ன கிராம மக்கள், மகா பெரியவரிடம் அந்த நிலங்களைக் கேட்டுப் பார்க்கலாம் என்ற ஆசையைத் தெரிவித்தார்கள். 'சரி' என்று வந்து விட்டார் அடிகளார். காஞ்சிக்கு சென்று விஷயத்தைச் சொன்னார்கள். மகா பெரியவர் உடனே அந்த நில சம்பந்தமான பத்திரங்களைக் கிராம மக்கள் கையில் ஒப்படைத்து, "அவர் அம்பாளின் ஸ்தூல வடிவமல்லவா, நன்றாகச் செய்வார்" என்று ஆசீர்வதித்து அனுப்பினாராம்.

காஞ்சி மடம் கொடுத்த 75 ஏக்கரில் பணிகள் துவங்கி இன்று அங்கு ஒரு பெரிய கல்வி வளாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மகளிருக்காக பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி ஆகியவை கலவையில் தற்போது உள்ள கல்லூரிகள். கால்நடை மருத்துவம், மற்றும் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளுக்கான ஆரம்ப கட்ட வேலைகள் துவங்கியிருக்கின்றன.

மேல்மருவத்தூர் கல்வி வளாகத்தில் மட்டும் ஐயாயிரம் மாணவ, மாணவிகளுக்கு மேல் படிக்கிறார்கள். கல்வி நிலையங்களை நிர்வகிப்பதில் முக்கியப் பொறுப்பில் இருக்கும் அடிகளாரின் மூத்த





மகன் அன்பழகன், "இங்கு தொண்டு தான் முக்கியம்" என்று ஐயா சொல்லுவார்கள். இங்கு வரும் ஒவ்வொரு பக்தரும் ஏதாவது சமூக, ஆன்மிகப் பணியில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும்" என்கிறார். அடிகளார் நினைத்திருந்தால் ஆன்மிகப் பணியோடு தம் கடமையை நிறுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் அதையும் தாண்டி அவருக்கிருந்த சமுதாயப் பொறுப்புதான் இந்தக் கல்வி வளாகங்களுக்கு அடிப்படை என்கிறார்கள் மருவத்தூர் பக்தர்கள்.

''இன்று மூன்று பிரச்னைகள்தான் மக்களை ஆட்டிப் படைத்து வருகின்றன. உணவு, மருத்துவம், கல்வி. மக்களின் குறை களைக் களைய அடிகளார் எடுத்த முயற்சி களின் பலனைத்தான் இன்று மருவத்தூரில் நாம் பார்க்கிறோம்" என்கிறார் அன்பழகன்.

அடிகளார் பக்தர்கள் வட்டாரத்தில் அரசியல்வாதிகள் உண்டென்றாலும், வளாகத்தில் அரசியல் காற்றுக்குத் தடை உண்டு.



• லக்ஷ்மண்



• காயத்ரி



• சங்கவி

அன்னதானம் என்பது மருவத்தூரோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. ஆடிப் பூரத்தின் போதும் அடிகளாரின் பிறந்த தினத்தின் போதும் மருவத்தூருக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களுக்கு 24 மணி நேரமும் அன்னதானம் உண்டு...

கோயிலின் பின்னால் பஞ்சபூதங்களைப் பிரதிலிக்கும் வகையில் பளிங்குக் கல்லில் சிறு மருத்துவமனை இருக்கிறது. 42 டாக்டர் கள் பணி புரிகிறார்கள். கேஷ் கவுண்டர், உண்டியல் இல்லாத மருத்துவமனை அது. தினசரி ஆயிரம் பேர் மருத்துவ வசதியை அனுபவிக்கிறார்கள். இதயம், சிறுநீரகம், மூளை பற்றிய அறுவை சிகிச்சைகள் தவிர மற்ற எல்லா அறுவை சிகிச்சைகளும் செய் யப்படுகின்றன. எல்லாம் இலவசம்.

"கோயிலில் சின்ன அறையில் எங்கள் மருத்துவ சேவையைத் துவங்கினோம். அந்தச் செடி இன்று மரமாய் வளர்ந்துள்ளது. மருத்துவக் கல்லூரியை ஒட்டி இரண்டா யிரம் படுக்கைகள் கொண்ட மருத்துவமனை உருவாகும் போது, எங்கள் சேவை ஆலமர மாய் பரவி நிற்கும். அப்போது இந்த ஊருக்கு மருத்துவத்தூர் என்று கூட பெயர் மருவி விடும்!'' என்கிறார் டாக்டர் சக்திதாசன்.

கல்வியைப் பொறுத்த மட்டில் முதலில் துவக்கப்பட்டது மெட்ரிகுலேஷன் பள்ளி. துவக்கி வைத்தவர் ராஜீவ் காந்தி. அதன் பிறகு எம்.ஜி.ஆரால் திறந்து வைக்கப்பட்டது பாலிடெக்னிக். தொடர்ந்து பொறியியல், நர்ஸிங் என்று விரிந்தன கல்விப் பணிகள். இந்தப் பணிகளுக்காக நிறுவப் பட்டதுதான் ஆதிபரா சக்தி மருத்துவ, கல்வி, பண்பாட்டு அறக்கட்டளை. கல்வி நிலை யங்களுக்கான கட்டடங்கள் ஒவ்வொன்றும் தனிச் சிறப்போடு திகழ்கின்றன. உருவாகி வரும் மருத்துவக் கல்லூரியை மேலே ஆகாய விமானத்திலிருந்து பார்த்தால் 'அம்மா' என்ற எழுத்து வடிவத்தில் இருக்குமாம். இது தவிர கட்டடத்தின் முன்புறம் உள்ள நிலச் சீர மைப்பு, பிறை, சூலம், சிலுவை ஆகியவை களை காட்டுமாம்.

"கட்டுப்பாடு, சிறந்த கட்டுமானம், இவை தான் எங்கள் கல்லூரியின் வெற்றிக்கு அடிப் படைகள். இதற்கு மேல் அடிகளாரின் அருட் பார்வையும் இருக்கிறதே'' என்கிறார் பொறியியல் கல்லூரியின் முதல்வரான

என். கிருஷ்ணசாமி.

"இங்கு ஜாதி மதம் போன்ற வேறுபாடுகள் எதுவும் கிடையாது. கேபிடேஷன் ஃபீஸ் என்ற சொல்லே இங்கு தலைகாட்டக் கூடாது. நுழைவுத் தேர்வு மூலம், கட்டண சேர்க்கை, கட்டணமில்லாத சேர்க்கை என்று இருப்பதைத் தவிர பத்து சதவீதம் நிர்வாகக் கோட்டாவும் உண்டு. நிர்வாகக் கோட்டா முழுவதும் ஏழை எளியவர்களுக்குத்தான். மேலும் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தை விட ஒரு பைசா கூட அதிகமாக வசூலிக்க மாட்டோம்" என்கிறார் அவர். ஒவ்வொரு வருடமும் பல்வேறு துறைகளில் கிட்டத்தட்ட பதினைந்து மாணவ, மாணவிகள் யுனிவர்சிடி ரேங்க் எடுக்கிறார்கள். வெள்ளிக் கிழமைகளில் மட்டும் வளாகமே சிவந்து காணப்படும். ஆம்! அன்று பிரின்ஸிபால், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் என்று ஒருத்தர் விடாமல் சிவப்பு நிற உடையை அணிந்து வருவார்கள்.



• உதயசந்திரிகா

"இதுவும் கட்டாயம் அல்ல; ஆனால் இங்கு வந்து மாணவ மாணவிகள் இயல்பாவே இந்தச் சூழலுடன் ஒட்டிக் கொண்டு விடுகிறார்கள்" என்கிறார் கிருஷ்ணசாமி. இங்கு படித்த நூற்றுக் கணக்காணவர்கள் பெரிய நிறுவனங்களில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டு மின்னணுவியல் படிக்கும் ஒரிஸாவைச் சேர்ந்த லக்ஷ்மண் "I am amma's devotee" என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார். மேல்மருவத்தூருக்கு வரும் முன் ஆதி பராசக்தி கோயிலைப் பற்றியோ அல்லது அடிகளாரைப் பற்றியோ அவர் கேள்விப் பட்டது கூட கிடையாதாம்.

வேலை நாட்களில் வளாகத்தைச் சுற்றிப் பார்த்தால் இங்கு ஐயாயிரம் மாணவ, மாணவிகள் படிக்கிறார்களா என்று எண்ணும் அளவுக்கு அங்கு அமைதி குடி கொண்டிருக்கிறது. கட்டடங்களுக்கு வெளியே ஒருவரையும் பார்க்க முடிவதில்லை. 'மாணவிகளுடன் பேசக் கூடாது; அவர்களைப் பார்க்கக் கூடாது' என்ற அறிவிக்கப்படாத 144 போடப்பட்டிருப்பது போல, மாணவர்கள் 'உர்'ரென்று சீரியஸாக லஞ்ச் பிரேக்கில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். சிரிப்புக்கும் அவர்களுக்கும் இடைவெளி அதிகம் இருக்கும் போலிருக்கிறதே என்று பார்மஸி நான்காவது ஆண்டு படிக்கும் ராம்பிரசாத், இளவரசி, இந்திரா தேவி ஆகியோரை மடக்கினோம். "இந்தச் சூழ்நிலை எங்களுக்கு மிகவும் பிடிச்சிருக்கு. படிக்க மிகவும் உதவியாக இருக்கு. பாய்ஸ் கூட அரட்டை அடிக்கணும்னு கட்டாயம் இல்லையே. ஏதாவது 'நோட்ஸ்' தேவையென்றால் வகுப்பறையிலேயே பேசி வாங்கிக் கொள்ளுவோம்" என்றார்கள் இளவரசியும், இந்திரா தேவியும். "ஒரு பைசா டொனேஷன் வாங்காமல் அட்மிஷன் கிடைக்கும் கல்லூரி இதுவாகத்தான் இருக்கும்" என்றார் ராம்பிரசாத். சூழ்நிலையைக்



• ராம்பிரசாத், இந்திரா தேவி



• கிருஷ்ணசாமி



• அன்பழகன்

கல்வி வளாகம் ஏற்படுத்திய பிரமிப்பு நம்மை விடுவிக்காத நிலையில் அடிகளாரைச் சந்தித்தோம்.

"குடத்திலிட்ட விளக்காக இருக்கிறோம்; அம்மா (கோயிலின் கருவறையைச் சுட்டிக் காட்டுகிறார்) உத்தரவு... வேலைக்காரனா. செயல்படறேன்'' என்கிறார் அடிகளார்.

தினசரி அவரைத் தரிசிக்க வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் காணிக்கையில் தான் மருத்துவமனை இயங்குகிறது. கல்வி வளர்ச்சிக்கு 'பசை'யுள்ள பக்தர்கள் தாராளமாகவே உதவுகிறார்கள்.

"படித்து முடித்து வருபவர்களுக்கு வேலை கிடைப்பது பெரிய பிரச்னையாக இருக்கிறதே'' என்று சொன்ன போது, "ஒரு நல்ல இளைஞனை உருவாக்குவதில் மூன்று தரப்பினரின் பங்கு இருக்கிறது. அருமையான வீட்டுச் சூழல்; நல்ல நட்புச் சூழல், மூன்றாவதாகச் சுற்றுப்புறங்களும் சட்ட திட்டங்களும் அவனை வழி நடத்த வேண்டும். அதற்கு 'அரசு உதவ வேண்டும்' என்றார் அடிகளார். "அன்பு, பண்பு, பாசம், உழைப்பு, தர்மம் முக்கியம். இதில் தர்மம் மிக முக்கியம். ஜாதியும், மதமும் ஒரு பொருட்டல்ல; தாவரங்கள், மிருகங்கள் ஆகியவற்றுக்கு இடையில் வேறுபாடு உள்ளதா என்ன?"

"ஆக்கபூர்வமான ஆன்மிகச் சூழலுடன் இந்தக் கல்வி வளாகம் அமைந்திருக்கிறது. ஆனால் கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்குத்தான் இங்கு இடமா?"


"முதலில் கடமை; பின்னர் கடவுள் நம்பிக்கை. யாராக இருந்தாலும் கடமையைச் செய்யணும். தொண்டு செய்தா தொல்லை தீரும். தோண்டத் தோண்ட (ஆழ உழுதால்) பயிர் நன்றாய் விளையும். கவலை என்ற களையைப் பிடுங்கி எடுத்தால் வாழ்க்கை செழிக்கும்" என்றார் முத்தாய்ப்பாக.

கொஞ்சம் கலகலப்பாக்க, மாணவிகள் சங்கவியிடமும், உதயசந்திரிகாவிடமும் ஒரு ஜோக் சொல்லச் சொன்னோம். "எங்கள் பார்மஸி படிப்பைப் பொறுத்த வரை ஒரு மருவத்தின் தன்மையை கண்டு பிடிக்க அதன் சுவைத் தன்மை, நிறம், வாசனை ஆகியவற்றை உதவியாகக் கொள்வோம். ஆனா பாருங்க ஸார், ஒரே ஒரு பொருளின் சுவைத் தன்மை மட்டும் இது வரை யாரும் அனுபவித்துச் சொன்னதில்லை, அது என்ன தெரியுமா? என்றார்கள் அவர்கள். நாம் மண்டையைச் சொறிய "சயனைட் சுவைத் தன்மை தான் இதுவரைத் தெரியாமல் இருக்கு. ஏன் என்றால் வாயில் போட்டவுடனேயே ஆள் 'மேலே' போயிடறாங்களே'' என்றார்கள் அவர்கள்.

"மரத்துக்கு மரம் பாய்ஸ் கூட நின்று பொண்ணுங்க பேசறதையெல்லாம் இந்த கேம்பஸ்லே பார்க்க முடியாது. இங்கு வந்து சேரும் எல்லோருக்கும் சில நாட்களிலேயே சுயமான கட்டுப்பாடு உருவாகிவிடும். அந்தக் கட்டுப்பாடு எங்களைப் படிப்பிலும் பளிச்சிட வைக்கிறது'' என்கிறார் பிஸியோ தெரபி காயத்ரி. பெரும்பாலான மாணவ, மாணவிகள் தினமும் ஒரு வேளை கோயிலுக்குச் சென்று விடுகிறார்கள். இது தவிர விசேஷ நாட்களில் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவது, போக்குவரத்தைச் சரி செய்வது போன்றவற்றிலும் ஈடுபடுகிறார்கள்.

— ப்ரியன்

அட்டை, படங்கள்: வெங்கடேஷ்





கல்கி


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

முஃப்தியின் கருணை


துயரத்தில் முடியும்!

காஷ்மீரின் புத்தம் புது முதல்வரால் விடுதலை செய்யப்பட்டுள்ள பொடா கைதி யாசீன் மாலிக் பேசுவதைக் கேட்டால் நமக்குப் புதிய நம்பிக்கை ஏதும் பிறக்கவில்லை. முதல்வர் முஃப்தி முகமது சயீதின் நல்லெண்ணத்தை, மாலிக்கின் அணுகுமுறையும் பேச்சுக்களும் எதிரொலிப்பதாகத் தெரியவில்லை.

காஷ்மீர் தேர்தலுக்கு முன் பயங்கரவாத அமைப்புகளின் தலைவர்கள் பலர் சிறை வைக்கப்பட்டது அவர்களைப் புண்படுத்தியிருப்பது இயல்புதான். இதன் காரணமாக, இத் தலைவர்களையும் பயங்கரவாத அமைப்புகளையும் மிக எச்சரிக்கையுடன் அணுக வேண்டியது முன்னிலும் அவசிய



2002 நவம்பர் 24
சித்ரபானு கார்த்திகை 8
மலர் : 61
இதழ் : 17



மாகிறது.


பயங்கரவாதம் முற்றுப் பெற வேண்டுமானால், பேச்சுவார்த்தைகள் தொடங்கியாக வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை. பயங்கரவாதம் நிற்கட்டும், அப்புறம் பேசலாம் என்று கூறிக் கொண்டிருந்தால் இரண்டுமே நிகழாது. பேச்சுவார்த்தைக்கான முதல் படியாகத்தான் முதல்வர் கைதிகளை விடுவித்திருக்கிறார்.

ஆனால், அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் உடனே நன்றிப் பெருக்கில் பேச்சு வார்த்தைக்கு வந்து விடுவார்கள் என்றோ, மனம் மாறித் திருந்திவிடுவார்கள் என்றோ எதிர்பார்ப்பது வெகுளித்தனம்.

இஸ்லாமிய தீவிரவாத, பயங்கரவாத அமைப்புகளைக் கட்டுப்படுத்துவது பாகிஸ்தான் என்பதை அறிவோம். பாகிஸ்தானுடைய ஒத்துழைப்பு இல்லாமல் காஷ்மீரில் நிச்சயமாக அமைதி திரும்ப முடியாது.

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த, காஷ்மீர் மாநில அரசு முற்பட முடியாது; அதை மத்திய அரசுதான் செய்தாக வேண்டும். ஆனால், மத்திய அரசோ, காஷ்மீரில் மாற்றுக் கட்சி ஆட்சியைப் பிடித்துவிட்டது என்ற ஏமாற்றத்தில், எல்லைப் பகுதியில் நிறுத்தியிருந்த ராணுவப் படைகளைப் பெருமளவில் வாபஸ் பெற்றுவிட்டது. அதேசமயம்; பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள எந்தவித முயற்சியும் நடக்கவில்லை.

இந்நிலையில் முஃப்தி முகமது சயீத் எடுத்துள்ள 'அமைதி' முயற்சிகள் புதிய ஆபத்துகளுக்கு வழி வகுக்கக்கூடும். மாநிலத்தின் பாதுகாப்பையும் கண்காணிப்பையும் உளவுத் துறையையும் தீவிரமாக முடுக்கிவிட்ட பிறகே, பயங்கரவாதிகளை விடுதலை



செய்திருக்க வேண்டும். ஆனால், அவரோ பொடாவைப் பயன்படுத்தப் போவதேயில்லை என்று சூளுரைக்கிறார்! விளம்பரப்படுத்தாமலும், பிரகடனப்படுத்தாமலும், பாதுகாப்பு நடவடிக்கைகளை காஷ்மீர் முதல்வர் எடுத்திருப்பார் என்று நம்புவதற்கு, இதுவரை எந்த முகாந்திரமும் இல்லை. இச் சூழலில், அங்கு வாழும் சராசரி மக்களின் அன்றாட வாழக்கை மிகவும் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.

தமது அரசு பலமான மெஜாரிட்டி அரசு அல்ல என்பதையும் முஃப்தி மறக்கலாகாது. இன்று அவருடைய நடவடிக்கைகளை மௌனமாக ஏற்கும் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ், நாளை ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால், தயங்காமல் முஃப்தி மீதும் அவருடைய கட்சி மீதும் பழி சுமத்திவிட்டுத் தப்பிக்கும். காங்கிரஸ் பிரதிநிதி முதல்வராகிற நேரத்தில், முஃப்தியின் நடவடிக்கைகளை அதே உத்வேகத்துடன் தொடர்வாரா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவுகளையும், கொடுத்த சலுகைகளையும் காஷ்மீர் முதல்வர் திரும்பப் பெற முடியாது. உடனடியாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மிகத் தீவிரமான கவனம் செலுத்துவதுடன், மத்திய அரசோடு நல்லுறவு அமைக்கவும், அதன் மூலம் விரைவாக பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைக்கு வழி வகுக்கவும் உழைக்க வேண்டும்.

கருணை என்பது உயர்ந்த குணம்தான். ஆனால், அதை எங்கே, எந்த அளவுக்குக் காட்டலாம் என்பதில் மிகக் கவனமாய் இருக்க வேண்டும். இல்லாவிடில் எதிர்பார்த்ததற்கு நேர் மாறான விளைவுகளே ஏற்படும்! ○



• அனுமன்!



• ஜார்டின்

மலேசியாவைச் சேர்ந்த ரூடி ஹானா தான் ராமர். தாய்லாந்தைச் சேர்ந்த சிரிலக் சாங்லிப் சீதை! ராவணனாக இந்தோனேஷியாவைச் சேர்ந்த சில்விஸ்டார் பாமார்டி. லாவோஸ் நாட்டுக்காரரான சாவெங் செங்பே அனுமனாக வருகிறார். இன்னும் பரதன், லட்சுமணன், தசரதர், கைகேயி, வாலி, சுக்ரீவன் என்று அனைத்து கேரக்டர்களும் உண்டு. கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், புருனே,

மலேசிய ராமர்; லாவோஸ் அனுமன்!



• கைகேயி!

சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் என்ற பத்து நாடுகளைச் சேர்ந்த நடனக் கலைஞர்கள் ராமாயணத்தை நாட்டிய நாடகமாக உலகம் முழுவதும் நடத்தி வருகிறார்கள். இது ஒரு முழுமையான நாட்டிய நாடகம் என்பதால், மொழிப் பிரச்னை இல்லை.

பல்வேறு நாட்டுக்காரர்களையும் ஒருங்கிணைத்து, ராமாயணம் நடத்தும் எண்ணம் எப்படி வந்தது இவர்களுக்கு?

"இது பத்தாண்டுகளுக்கு முன் உருவான விதை. தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலும் ராமாயணம் சிற்சில மாற்றங்களுடன் வழங்கப்படுகிறது. எனவேதான் ராமாயணத்தைத் தேர்ந்தெடுத்தோம். பிறகு, அந்தந்த நாட்டின் பாரம்பரிய மற்றும் நவீன நாட்டியத்தில் அனுபவம் வாய்ந்த நடனக் கலைஞர்களைக் கேரக்டர்களுக்கு ஏற்றபடி தேர்ந்தெடுத்து, 1998ல் வியட்நாமில் கூடி ஒத்திகை நடத்தினோம். ஆண்டுக்கு ஒருமுறை உலகின் சில நாடுகளுக்குச் சென்று, இந் நிகழ்ச்சியை வழங்குகிறோம்'' என்கிறார் இந் நிகழ்ச்சியை நடத்தி வரும் தகவல் மற்றும் கலாசாரத்துக்கான ஆசிய கமிட்டியின் ஒருங்கிணைப்பாளரும், நாடகத்தின் இயக்குனருமான ஜார்டின்.

இந்திய அனுபவம் எப்படியாம்?


"ராமாயணம் பிறந்த மண்ணில், நிகழ்ச்சி வழங்கப் போகிறோம் என்பதால், கொஞ்சம் பயம் இருந்தது. ஆனால், நிகழ்ச்சியை ரசித்து, அரங்கமே எழுந்து நின்று கைத்தட்டிய போது, பூரித்துப் போனோம்!"

— மௌலி

படங்கள் : யோகா

• சீதையும் - ராமனும்





புலிகளின் ராஜ்யத்தில் சிறுத்தை!

விடுதலைப் புலிகளின் ராஜ்யத்தில் உலவிவிட்டு வந்திருக்கிறார் 'விடுதலை சிறுத்தை' திருமாவளவன்.

"கொழும்புவிலிருந்து வவுனியாவை அடைந்தவுடன் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரியா துவங்குகிறது. மணல் சாலைதான். இருபுறமும் சாய்ந்த பனை மரங்கள், இடிந்த கட்டடங்கள், ஆளில்லா வீடுகள். கொண்டு செல்லும் சாமான்களுக்குப் புலிகள் வரிகள் போடுகிறார்கள். புலிகள் நிர்வாகத்தில் நிதித்துறை, நீதித்துறை, காவல் நிலையம் எல்லாம் வன்னிப் பிரதேசத்தில் இருக்கின்றன. வன்னிப்பிரதேசத்தைத் தாண்டியவுடன் யாழ்ப்பாணம் மாவட்டம் வருகிறது. இது இலங்கை அரசு கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் புலிகள் சாதாரண உடையில் யாழ் வளைகுடாவில் வளைய வருகிறார்கள்.

"யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 'உலக அரங்கில் தமிழ்' என்ற தலைப்பில் பேசினேன். அவர்கள் அழைப்பின் பேரில் தான் சென்றேன். மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என்று கலப்படமாக இருந்தார்கள். நமது மேடைத் தமிழைப் புரிந்து கொள்வதில் அவர்களுக்குச் சற்று சிரமம் இருந்திருக்கும் என்று கருதுகிறேன்.


அதன்பின், கலைப் பண்பாட்டுக் கழகம் என்ற அமைப்பு நடத்திய மானுடத்தின் "தமிழ் கூடல் 2002" என்ற விழாவிலும் கலந்து கொண்டேன். இவற்றில் சிங்களப் பத்திரிகையாளர்கள், எம்.பி.க்கள் ஆகியோரும் கலந்து கொண்டது ஆச்சர்யமாக இருந்தது. ஒரு சிங்களப் பத்திரிகையாளர், புலிகளின் போராட்டதை மானுடத்தின் பேராட்டம் என்று வர்ணித்தார்.

"இப்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் துவங்கிவிட்ட நிலையில் மக்கள் முகங்களில் நம்பிக்கை தெரிகிறது. இந்த அமைதி நீடிக்க வேண்டுமே என்ற கவலையும் பேச்சில் தொனிக்கிறது. யாழ்ப்பாணத்தில் நடந்த விழாக்களுக்குப் புலிகளின் ஆதரவு இருந்த போதிலும், மற்ற தமிழ்ப் போராட்டக் குழுக்கள் மூலம் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்பதால் எங்கள் நடமாட்டம் முடக்கப்பட்டது. இப்படி இருந்தும் 'ப்ளாட்' இயக்கத்தைச் சேர்ந்த ஒரு போராளி, எங்களைத் தாக்கத் தயார் நிலையில் வந்தபோது பிடிபட்டான் என்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் மின் வசதி இல்லை. ஜெனரேட்டர்தான். யாழ் பாழாகிப் போய் ஒரு சிதிலமடைந்த நகராக இருக்கிறது. போரில் இறந்த புலிகளைப் புதைத்த இடத்தை 'மாவீரர் துயிலும் இல்லம்' என்கிறார்கள். அந்த இடத்தை நன்கு பராமரிக்கிறார்கள். புலிகளின் வன்னிப் பிரதேசத்தில் பெண் புலிகளின் நிர்வாகத் திறமை பளிச்சிடுகிறது.

மலையகத் தமிழர்கள் படும் துயரம் இன்னும் மோசமானது. கொழும்புத் தமிழர்களின் கண்களில், 1983ல் நடைபெற்ற இனக் கலவரத்தின் கொடூரம் இன்னமும் தெரிகிறது."

- கௌசி


காதல்

இதற்குப் பின்பும்
இருப்பேன்
இதற்கு முன்பும்
இருந்தேன்
இருந்து கொண்டிருக்கிறேனா?
தெரியாது

பொருள் தேடி வரப் போகிற தலைவனுக்காக தேகம் மெலிந்து, வாடி உருகுகிற தலைவிகள், சங்கப் பாடல்களில் அநேகம். போருக்குப் புறப்பட்டே ஆக வேண்டிய கட்டாயத்தில், கண்ணீரோடும், ரத்தத்தோடும் ததும்பத்ததும்ப பிரியத்தைப் பகிர்ந்து கொள்ளும் காட்சிகள் மெய்சிலிர்க்கும் அனுபவங்கள்.

எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து அமைதியிழந்த ஈழத்தின் பல கவிதைகள், போரினால் சிதறுண்ட காதலைப் பேசின. மிக சமீபத்து உதாரணமாக அவற்றைக் கருதலாம். கவிதைக்கான சந்தோஷம் ஒருபுறமிருக்க, பெருகி வழியும் கண்ணீரை என்ன செய்வது? உறவுகளைத் தொலைத்தவர்களின் உள்ளத்தில் கவிதை, அழகல்ல, அழுகுரல்.

போரிஸ் பாகட்கல் எழுதினான். ருஷ்ய மண்ணிலிருந்து வேர்விட்ட எத்தனையோ கவிதைகளில், இது என்னை மிகவும் கவர்ந்தது. அகமும் புறமும் தமிழில் தனித்தனியாக வகுக்கப்பட்டிருக்கிறது. காதலை அகமாகவும், வீரத்தைப் புறமுமாகவும் பகுத்த மரபு தமிழ் மரபு. இந்தக் கவிதையோ, வீரத்துக்கும் காதலுக்கும் இடையில் மையமிடுகிறது. படைக்களத்தில் நிற்கிறான் கவிஞன் / காதலன். பக்கத்தில் இவன் பிரியத்துக்குரிய காதலி.

படை அணிவகுப்பின்
பக்கத்தில் நின்று நாம்
தழுவிக் கொள்கிறோம்
உண்மையான காதலை
வெளிப்படுத்தும் உன்
பெரிய விழிகளின்
சுடரொளியைத்
துயரம் கவ்வி மறைக்கிறது
பிரிய மிக்க உன் கரங்களை,
பிரியப் போகும் என் கைகளால்
இறுத்திக் கொள்ள,
என் உதடுகள் உச்சரிக்கின்றன;

எனதன்பே நான் திரும்புவேன்...
திரும்ப வேண்டும்... ஆனால்
ஆனால், ஒருக்கால் எனக்கு
ஏதேனும் நேரிட்டால்
உறுதிமிக்க என் தாயகத்தை மீண்டும்
காண இயலாது என்னால்

ஒரே ஒரு வேண்டுகோள்
உனது இதயத்தை வேறொருவருக்கு



அளிக்க வேண்டும் நீ
போரிலிருந்து திரும்பி வரும்
மதிப்பும் கௌரவமும் மிக்க
ஒருவருக்கு
அதை அளிக்க வேண்டும் நீ.

சதா சர்வ காலமும் தன்னையே நினைத்திருக்கும் ஒருத்தியிடம் ஒருவன் இப்படியா பேசுவான்? சிதறி, சுக்கு நூறாகப் போனாலும் காதல் முழுமையாகத் தன்னிடம் ஒட்டிக் கிடக்கும் என்பதற்கு இக்கவிதையே சாட்சி. அந்தப் போருக்குப் போனவன் திரும்பினானா? மறுபடியும் சந்தித்திருப்பானா? அல்லது போரிலின் வேண்டுகோளுக்கு இணங்க மதிப்பும் கௌரவமும் மிக்க ஒருவனை அவள் ஏற்றுக் கொண்டாளா? என்பதெல்லாம் மனசை அதிரவைக்கும் கற்பனைகள். வாழ்ந்தாலும் மரித்தாலும் ஒன்றாகவே, என்கிற தமிழ் மரபை அதிர்ச்சியுற வைக்கிறது. எனினும், இதுதான் காதல், உறுதிமிக்க தனது தாயகத்தை, காதலுக்காக இழந்துவிடாத



யுகபாரதி

வனே உயர்ந்தவன். அவன் நம்புகிறான், நான் திரும்புவேன், திரும்ப வேண்டும்.

திரும்பாமல் போன காதலிக்காகத் தற்கொலை செய்து கொண்ட காதலனைப் பார்த்திருக்கிறார்களா? ஒரு பெண்ணைக் காதலிப்பதென்றால்,

அவளைக் கல்லினுள்ளிருந்து
உயிர்ப்பிப்பது என்று பொருள்
அடி முதல் முடி வரை காதலால் நீவி,
சாபமேற்று உறைந்து போன ரத்தத்தில்
கனவுகளில் சூடேற்றுவது என்று பொருள்.

– இது மலையாளக்கவி சச்சிதானந்தனின் கவிதை. அவளைக் கல்லினுள்ளிருந்து உயிர்ப்பிப்பது என்கிறார். அவள் இதயம் கல்லென்று இதற்கு அர்த்தமில்லை. தெய்வ வடிவமாய் இருக்கிறவள் பேசத் தொடங்குதல் என பொருள். உயிர்த் தீயிலே; வளர் ஜோதியே... உயர்த் தீயினால் தெரியும் வெளிச்சத்தில் என்ன செய்யலாம்? காதலியின் நாசிக்கு மூக்குத்தி போடலாம். கண்களுக்கு மேலும் மெருகூட்டலாம். சச்சிதானந்தனே 'இன்னொரு கவிதையில் நீ என்னைக் காதலித்திருந்தால்' எனத் தொடர்கிறார்.



நீ என்னைக் காதலித்திருந்தால்
உன் மின்னும் பவளப்
பாறைகளுக்கிடையில்
நான் ஒரு தங்க மீனாய் ஆகி இருப்பேன்
இப்போது நான் கடற் பாசிகளுக்குள்
சிக்கிக்கொண்டு செத்த ஒரு
கண்ணின் மணி மட்டுமே.

கல்லினுள்ளிருந்து உயிர்பிப்பது எனப் பொருள் காணும் அதே மனம், பவளப்பாறைகளுக்கிடையில் மீனாகவும் ஆசைப்படுகிறது. பவளப்பாறை எனும் சொல் கடற்பாசிகளையும் கவனிக்க வைக்கிறது. மார்க்சியத் தத்துவத்தால் உரம்பெற்ற கவிஞராகத் தமிழுக்கு அறிமுகமான சச்சிதானந்தனின் இக்கவிதை, கவிஞர் சிற்பியால் மொழிபெயர்க்கப்பட்டது.

வைத்துக் கொண்டு மறைக்கிற பண்பு பெண்களுக்கானது. வாய் திறந்து சொன்னால் சேதமாகும் நெஞ்சென்று, பொத்திப் பொத்தி காப்பவள் பெண். பொட்டென்று போட்டு உடைத்துவிட்டால் பாதகமில்லை. காதல் வயப்படுகிற பெண் பாதி ஆணாகவும், காதல் வயப்படுகிற ஆண் பாதி பெண்ணாகவும் மனத்தால் மாறிவிடுவதுண்டு. 'ராஸகான'த்தில் ஊத்துக்காடு ஸ்ரீ வெங்கடசுப்பையர் சொல்வது போல்

உண்டென்றால் உண்டென்று
உள்ளத்தைச் சொல்லடி
உயிர் போலும் காதல் வழியேகும் மானே
உனை நாடி நானும்
துணையாகுவேனே.

நீ சிரித்த சிரிப்புக்கான அர்த்தத்தை; நீ பார்த்த பார்வைக்கான பொருளை; நீ தீண்டிய தீண்டலுக்கான உட்தொனியை எவ்விதம் புரிந்து கொள்வது? உண்டா, இல்லையா – சொல்லித் தொலைத்தால் என்ன? அலைபாயும் மனத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு தான் அல்லல்படுவது? துளித்துளியாய்க் கசிகிற உயிரை உன் முந்தானையால் அல்ல, கைக்குட்டையாலாவது துடைத்துவிட மாட்டாயா?

இன்றைய நவீனக் கவிஞர்களுக்குக் காதலை எழுதுவதென்றால் கவுரவக் குறைச்சலான காரியம். காதல் கவிதைகள் தற்போது எழுதப்பட்டாலும் வாசிக்கப்படுவதில்லை. வாசிக்கப்பட்டாலும் போற்றப்படுவதில்லை. மிகுதியும் முரண்களால் மட்டுமே புனையப்படுகிற இன்றையக் காதல் கவிதைகளில், சொற் கட்டு மாத்திரமே இருக்கிறது; கவிதை இல்லை என்பவர்கள் தம்வாழ்வில் ஒருமுறை கூட காதலுக்கான சந்தர்ப்பம் வாய்க்காதவர்கள். மலட்டு மனத்தை வைத்துக் கொண்டு கவிதை மகசூலுக்குக் காத்திருப்பவர்கள்.

என்பால் கொண்ட காதலின் பொருட்டு
ஞானியாகிவிடாதே
முடிந்தால் வெள்ளமாகிவிடு
உனது வலிய ஓட்டத்திலிருந்து
நான் அகத்தூண்டுதல் பெற்று
துன்பக் கரையை உடைத்துவிடுவேன்

காதல் இன்னொரு இதயத்தை இனாம் கேட்பதல்ல. இன்னொரு இதயத்துக்காக ஏங்கிக் கிடப்பது. இந்தக் காதலால் வீரத்தின் பொருள் உணரப்படும். கரண்டும் வர்க்கத்தின் பிடி நெருப்பைக் கொண்டு, இருண்ட பூமிக்கு விளக்கேற்றலாம். முராரி முகோபாத்யாயாவின் கவிதை, வங்கத்து வீதிகளில் கிடந்த / கிடக்கும் புழுதியைப் பெருக்கித் தள்ள வல்லது. காதலால் அதிகமாகும் வலிய ஓட்டத்திலிருந்து, துன்பக் கரையை உடைக்க முயல்வது. அகம், புறம் என்ற பாகுபாட்டை விடுத்து, பக்தியிலும் காதலைக் காணலாம். திருவருட்பாவில் கிடைக்கும் காதல் சுவை அடுத்த இதழில்.

(தொடரும்)

முகம்

அப்பா, அம்மா, மாமா உட்பட அவர்கள் ஒன்றாக வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்களோடு ரமணனும் சேர்ந்து வந்தான். அவர்களைக் கண்டதும் பீடியைக் கீழே போட்டு, மிதித்து நசுக்கி, புகையை வெளியே விட்ட பிறகு கார் கதவைத் திறந்து வைத்தார் டிரைவர். எல்லோரும் காரில் ஏறி உட்கார்ந்த பிறகு காரை ஸ்டார்ட் செய்தார். மெல்லிய நாதஸ்வர இசை காருக்குள் மிதந்தது. அது அப்பாவின் ஏற்பாடு என்பது ரமணனுக்குத் தெரியும்.

கார் ஓடத் தொடங்கியது. டிரைவருக்குப் பக்கத்தில் ரமணனின் மாமா உட்கார்ந்திருந்தார். அவர் அம்மாவின் கூடப் பிறந்த தம்பி. அப்பாவுக்கு அவர் மைத்துனர் என்பதைவிட 'அந்தரங்க காரியதரிசி' என்பதே மிகவும் பிடித்தமானது...

காரில் நாதஸ்வர இசையைத் தவிர வேறு ஒலி எதுவும் இல்லை. எவரும் பேசவில்லை. பேச்சை எவர் தொடங்குவது என்பதே ஓர் பெரிய முயற்சியாக இருந்தது. முன்னால் உட்கார்ந்திருந்த மாமா அல்லது அம்மா பேச்சைத் தொடங்கட்டும் எனக் காத்திருந்தான் ரமணன்.

கார் ஒரு தெருவைத் தாண்டி வேறு தெருவுக்குள் நுழைந்ததும், எதிர்ப்பட்ட பிள்ளையார் கோயிலைப் பார்த்து மாமா 'அரைகுறை'யாய் எழுந்து இரு கன்னத்திலும் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். அதுவே ஒரு 'பிள்ளையார்' சுழி போட்டது போலாயிற்று. அதற்குப் பிறகுதான் அப்பா பேசினார்....

"தாமு! அவங்க தயாரா இருப்பாங்க இல்ல.."

தாமோதரன் என்பது முழுப் பெயரான போதும் 'தாமு' என்பதே பிரசித்தமாகிவிட்டது.

"நேத்து நைட், இன்னைக்குக் கார்த்தால ஃபோன் போட்டு சொல்லிட்டேன். ரெடியா இருப்பாங்க. பொண்ணு வேற அரை நாள் லீவு போட்டு நிக்குதாம்!"

"பொண்ணு என்ன வேலை செய்யுது?"

"கம்ப்யூட்டர் கம்பெனியில வேலை பார்க்குதாம். தேர்ட் மானேஜர்.."

"அப்படியா?" என்று மட்டும்தான் பதில் சொன்னார். ஆனால் அவர் மனத்துக்குள் என்ன நினைப்பார் என்பது ரமணனுக்குத் தெரியும். 'கம்பெனியில் பெரிய வேலை என்றால் சொன்னதைக் கேட்பாளா வருகிறவள்?' என்று நினைத்திருப்பார். இதுவரை பல இடத்தில் பெண்கள் பார்த்தும் சரி வரவில்லை. சில பெண்களை அவன் விரும்பவில்லை. கடைசியாகப் பார்த்த பெண் அவனுக்குப் பிடித்தது. ஆனால் அப்பா ஏனோ 'வேணாம்னு' சொல்லிவிட்டார். ரமணனால் எதுவும் செய்ய முடியவில்லை. நேரிடையாக அப்பாவை எதிர்க்க முடியவில்லை. அவனை மனிதனாக்கியவர் அவர். அவரின் 'நல்லாசி'யோடு மனைவியைத் தெரிவு செய்ய விரும்பினான் அவன். ஆனால் அது நடக்கக் கூடியதாகத் தெரியவில்லை. இருவரின் சம்மதமும் ஒரே நேர்க் கோட்டில் வர வேண்டுமே!

வேலை பார்க்கும் நிறுவனத்து நண்பர்களோடு ரமணன் பேசிப்

பார்த்தபோது பால்ய சிநேகிதன் மகேந்திரன் மட்டுமே ரகசியமாக அவனுக்குச் சொன்னான். ''வாழ்க்கை உனக்குத் தான்... அப்பாவுக்கு இல்லை. அவர் பார்வைக்கும் உன் பார்வைக்கும் வித்தியாசம் உண்டு. அப்பாவைப் பகைக்காமல் ஒரு பெண்ணைப் பார்த்து முடிவு செய்... அதற்கான வியூகத்தை நீயே அமைத்துக் கொள்!''

அவன் வார்த்தைகளை வேத வாக்கியமாக எடுத்துக் கொண்டுதான் இன்று பெண் பார்க்கப் போகின்றான்.



மாத்தளை சோமு

அது ஒரு புதிய நகர். அந் நகரில் கட்டப்பட்ட முதல் வீடாய் அந்த வீடு கம்பீரமாய் நின்றது. காரிலிருந்து இறங்கிய அவர்கள் துளசி மாடத்தைத் தாண்டி வீட்டுக்குள்ளே போனார்கள். அவர்களில் கடைசியாக, மெதுவாக ரமணன் போனான். வாசலிலேயே பெண்ணின் அப்பாவும் அம்மாவும் புன்னகையோடு, "வாங்க...வாங்க" என்ற வார்த்தைகளோடு கைகுவித்து வரவேற்றார்கள். அவர்களைப் பார்த்ததும் ரமணனுக்குப் பிடித்தது.

புத்தம் புதிய வசதியான சோபாவில் உட்கார்ந்தார்கள் அவர்கள். பெண்ணின் அப்பா, "அஞ்சு நிமிசம் பொறுங்கோ... பொண்ணை வரச் சொல்றேன்" என்றார்.

ரமணனின் கண்கள் மட்டும் அங்கும் இங்கும் அலைந்தன. விநாடிகள் நிமிடங்களாக நகர்ந்தது போன்ற ஓர் உணர்வு அவனுக்கு. பெண், பார்க்க அழகாக இருக்க வேண்டும் என்று தனக்குள் பிரார்த்தித்துக் கொண்டான். குனிந்த தலையுடன் பட்டுச் சேலை இசையமைக்க, நடை பயின்று வருவாள் அவள், என கற்பனைக் குதிரையில் சவாரி வேறு செய்தான் அவன்.

அவரின் மகள் புன்னகையோடு வந்தாள். "இவதான் எங்க டாட்டர்... மாலதி" என்றாள் சோபாவில் உட்கார்ந்திருந்த அம்மா... கமதியின் கைகளில் தட்டு இல்லை. கால்களில் தயக்கம் இல்லை... சாதாரண கைத்தறிச் சேலை.... முகத்தில் ஒரு கவர்ச்சி புன்னகை... ரமணன் நினைத்தது போலவே நல்ல நிறம்... அவளின் அழகில் ரமணன் மயங்கித்தான் போனான்.

ரமணனின் அப்பா, அம்மா, மாமா ஆகியோருக்கு கை குவித்து 'வணக்கம்' சொன்ன மாலதி, ரமணனைப் பார்த்து "ஹலோ" என்றாள்.

"கம்ப்யூட்டர் கம்பெனியில் வேலை பார்க்கிறா... அமெரிக்காவுக்குப் போகக் கூடிய சான்ஸ் இருக்கு" என்று பெண்ணை அறிமுகம் செய்த மாலதியின் அப்பா ரமணனின் பக்கம் திரும்பி, "டாட்டரோட நீங்க நேரா பேசுங்க" என்றார். அவரின் அந்த வார்த்தைகள் ரமணனின் அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. அதனை அவர் முகத்தின் மூலமறிந்த ரமணன், அதைப் பற்றிக் கவலைப்படாமல் பெண்ணின் அப்பாவைப் பார்த்தான். அவர் அவனைப் பார்த்து, "டாட்டரோட பேசுங்க...ம்..." என்று அழுத்தமாகச் சொன்னார். அதன் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது.

சோபாவை விட்டு எழுந்த ரமணன் மாலதியோடு தனியே பேச விரும்பியவன் போல் நின்று, "தனியே பேசலாமே!" என்று சொன்னபோது புன்னகையோடு மாலதி சொன்னாள்: "ரகசியம் எல்லாம் வேணாம்... ரெண்டு பேரும் அப்பா, அம்மா முன்னுக்கே பேசலாமே!"

மாலதி அப்படிச் சொல்வாள் என்று ரமணன் எதிர்பார்க்காவிட்டாலும் அவள் அப்படிச் சொன்னதை விரும்பினான். ஒளிவு மறைவு இல்லாத வார்த்தைகள். வாழ்க்கைக்குத் தேவையானது.

"உங்களை எனக்கும் புடிச்சிருக்கு.... இனி மத்த விஷயங்களைப் பேசலாம். எனக்கு மாசம் பத்தாயிரம் சம்பளம். கார்த்தால எட்டரைக்குக் கெளம்பிடுவேன். டீ, காப்பி போட டைம்

இருக்குமா தெரியல... ஆடம்பரம் பிடிக்காது. ரெண்டே பட்டுச் சேலைதான் என்கிட்டே இருக்கு. எப்பவாவது சினிமா பார்ப்பேன். பி.பி.ஸி., சி.என்.என். புரோகிராம் தான் பிடிக்கும். தமிழ்ச் செய்தி பார்ப்பேன். என் சம்பளத்தில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பணம் குடுப்பேன். நீங்க உங்க சம்பளத்தில் அம்மா அப்பாவுக்கு குடுங்க. புதுசா கார் வாங்கியிருக்கேன். அந்த லோன் நான் கட்டணும். மேரேஜுக்குப் பிறகு பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்கலாம். இதெல்லாம் கண்டிஷன் இல்ல... நடைமுறை விஷயங்கள்... எல்லாத்தையும் கல்யாணத்துக்கு முன்னமே சொல்லிட்டா நல்லதில்லே!"

மாலதி புன்னகையோடு பேச்சை நிறுத்திவிட்டு ஒரு விநாடி மௌனமாக இருந்த பிறகு சொன்னாள்... "இது என் பக்கத்து விஷயங்கள். இனி உங்க பக்கத்து விஷயங்களச் சொல்லுங்க..."

'கல்யாணத்திற்கு முன்பே இப்படி பேசுகிறாளே! கல்யாணத்திற்குப் பிறகு என்ன பேசுவாளோ?' என்று நினைத்துக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தார் ரமணனின் அப்பா... ரமணனோ மாலதியின் ரகசியமற்ற பகிர்வு வார்த்தைகளில் மயங்கி பேசத் தொடங்கினான்.

"நீங்க வெளிப்படையா பேசினதை நான் விரும்புறேன். எனக்கும் மியூசிக் சினிமா பிடிக்கும். இன்டர்நெட் பிடிக்கும். நானும் கம்ப்யூட்டர் கம்பெனியில் மேனேஜரா வேலை செய்யறேன். சம்பளம் பத்துக்கு மேல வரும். வீடு கட்ட மனை வாங்கியிருக்கேன். நானும் அப்பா அம்மாவுக்குப் பணம் கொடுக்கணும். மற்ற பிரச்னைகளை மேரேஜுக்குப் பிறகு பேசித் தீர்த்துக் கொள்ளலாம்..."

"பிழைக்க ஒரு வழி சொல்லுடா மச்சி."

"அந்தக் கட்சியில தற்கொலைப்படைக்கு ஆள் எடுக்கிறாங்களாம்; போறியா?"

— சீர்காழி வி. ரேவதி



'ரமணா' என்று கத்த வேண்டும் போலிருந்தது அப்பாவுக்கு. பெற்றவர்களிடம் எதுவும் கேட்காமல் என்னென்னவோ பேசுறானே!

"அப்ப என்ன உங்களுக்குப் பிடிச்சிருக்குதா?"

மாலதிதான் கேட்டாள் திரும்பவும். ரமணன் வெகு ஆர்வத்தோடு சொன்னான்... "புடிச்சதுனாலதான் பேசிக்கிட்டிருக்கேன்.."

மாலதியின் முகத்தில் புன்னகையோடு வெட்கமும் சேர்ந்து பூத்தது.

ரமணனின் அப்பா மௌனமாக இருப்பதைப் பார்த்து விட்டு மாலதியின் அப்பா, "மாப்பிள்ளை பொண்ணு ரெண்டு பேருக்கும் புடிச்சிருந்தாலும் வீட்டுக்குப் போயி முடிவு சொல்லுங்க... கல்யாணம் அவசரப்பட்டு முடிவு எடுக்கிற விஷயமில்ல" என்றார். அதற்காகவே காத்திருந்தவர் போல ரமணனின் அப்பா, "ஆமாம். நீங்க சொல்றதுதான் சரி.. வீட்டுக்குப் போய்ப் பேசி முடிவு சொல்றோம்..." என்றார். அது ரமணனுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் மௌனமாக இருந்தான்.

அந்த வீட்டை விட்டுப் புறப்பட்ட போது ரமணனுக்கு தன் மனத்தை மாலதியிடம் விட்டு வந்ததைப் போல் இருந்தது..

கார் ஓடத் தொடங்கியது. காருக்குள் மௌனம்... நாதஸ்வர இசையைக் கூட நிறுத்தி விட்டார் அப்பா... "ஒரு பொண்ணுக்கு உள்ள அடக்கம் கூட இல்ல. இப்பவே கண்டிஷன் போடுறா.... நீ அவளைப் புடிக்குதுன்னு சொல்ற? உனக்குப் புத்தி சரியில்லையா?"


அப்பாவின் குமுறலைக் கண்டு கொள்ளாமல் மிக மெதுவாக ரமணன் பேசினான். "அவ நடிக்கல்ல... வெளிப்படையாப் பேசினா.. நீங்க உங்க அப்பா அம்மாவ பாருங்கன்னு சொன்னாளே! எத்தனை பேர் இப்படி சொல்லுவா? பொண்ணு பார்க்கிற போது தாலி கட்டுற வரைக்கும் வாயில்லாப் பூச்சியா இருந்திட்டு, அப்புறம் விஸ்வரூபம் எடுக்கிறதை விட இப்பவே எல்லாத்தையும் நேரில பேசிடறது நல்லதுப்பா... இவ தான் என் மனைவி. இவ வேணாம்னா எனக்குக் கல்யாணமே வேணாம்!" அப்பா கோபத்தில் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது அம்மா அவரைத் தடுத்தாள்.

அப்போது தாமு சொன்னான்... "அப்பாடா! இனிமே பொண்ணு தேடுற, பார்க்கிற வேலை இல்ல..." அப்பாவுக்குக் கோபம் மூக்கின் நுனியில் நின்றது. தாமுவை அந்தக் கோபத்துடன் பார்த்தார்.... ஏனோ அவருக்கு அவன் முகமே பிடிக்காமல் போய்விட்டது.

புன்னகை பூமி 4

புத்த மதத்தைத் தழுவிய தாய்லாந்தில் மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரம்மா, விநாயகர், இந்திரன், வருண பகவான், கருடன், வாயு பகவான் என்று அத்தனை இந்துக் கடவுள்களின் வழிபாடுகளும் நடக்கின்றன.

சைவ வழிபாட்டின் ஓர் அங்கமாய் சிவ பெருமான் பூமியில் வந்து தங்குவதாய் நம்பப்படும் பத்து நாட்களில், சிவனை வரவேற்க, Festival of the swing என்னும் ஓர் ஊஞ்சல் விழா, ஜனவரி மாதம் நடக்கும். பாங்காக்கில் Wat Suthat என்னும் புத்தர் கோயிலின் முகப்பில், முப்பது மீட்டர் உயரம் இருக்கும் பிரம்மாண்டமான ஊஞ்சலில் தான் இந்த விழா நடக்கும். இது வெறும் சிவ பூஜை மட்டுமல்ல. விளைச்சல் பெருக, சிவன் தயவால் நல்ல மழை பெய்ய வேண்டும் என்று பிரார்த்திப்பதால் இது விவசாயம் சம்பந்தப்பட்ட ஒரு விழாவும் கூட. தாய்லாந்து மன்னர் நியமிக்கும் ஓர் அதிகாரி சிவனாகப் பொறுப்பேற்பார். விழா ஊர்வலமாய் (தாய்லாந்து) சிவனைச் சுமந்தபடி, ஒரு புத்தர் கோயிலிலிருந்து தொடங்கி, இந்த ராட்சத ஊஞ்சல் இருக்கும் இடத்திற்கு வரும். இந்தியாவில் நடராஜ மூர்த்தியின் சன்னிதானம் வடகிழக்குத் திசையில் இருப்பதைப் போன்று, இந்த அதிகாரி வட கிழக்குத் திசை வழியாக நுழைந்து, சிவனுக்கு ஒதுக்கப்பட்ட நடுநாயகமான இடத்தில், வலது காலைத் தரையிலும், இடது காலை வலது கால் தொடையிலும் வைத்தபடி, சிவனைப் (தக்ஷிணாமூர்த்தி) போலவே அமருவார்.



• பிரம்மா கோயிலில் வழிபாடு



• இந்திரன் கோயில்



தேசிய மலர் ஆன பிள்ளையார் பூ!

ஆனந்த் ராகவ்

நான்கு பேர் அடங்கிய மூன்று குழுக்கள் நாகம் போல் உடை அணிந்து, சிவனை வணங்கிவிட்டு ஊஞ்சலில் ஆடத் துவங்குவார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பண முடிப்பு, மூங்கில் கழியில், ஊஞ்சல் கம்பத்தின் மேற்குப் பகுதியில் கட்டப்படுகிறது. ஊஞ்சலைக் கீழே இழுத்து இழுத்து ஆட்டுவார்கள். ஊஞ்சல் ஆடுபவர்கள் ஆடி ஆடி, உயரமும் வேகமும் கூட்டி, பண முடிப்பை வாயால் கவ்வி எடுக்க வேண்டும். சுற்றியிருக்கும் மக்கள் உற்சாகமாய்க் கூக்குரல் எழுப்ப, சங்கொலியின் இடையே ஊஞ்சல் ஆட்டம் நடக்கும். இந்தியாவில் கிருஷ்ணஜயந்திக்கு நடக்கும் உரியடி விழா, இங்கே சற்று உருமாறியிருக்கிறது. முப்பது மீட்டர் உயர ஊஞ்சலில் ஆடும் ஆக்ரோஷமான ஆட்டம், சில விபத்துகளில் முடிந்ததால் இந்த ஊஞ்சலாட்டத்தை இப்போது நிறுத்தி விட்டார்கள்.



விஷ்ணு வழிபாடு

தேவராஜா சித்தாந்தத்தில் விஷ்ணு வழிபாடும் அடக்கம். கெமர் ராஜ்யத்தின் இரண்டாம் சூரியவர்மன் (கி.பி 1113 - 1152) ஒரு வைஷ்ணவன். சூர்யவர்மன் தன்னை விஷ்ணுவின் அவதாரமாகப் பிரகடனப் படுத்திக் கொண்டான். சூர்யவர்மன் கட்டிய கோயில்தான் ''அங்கோர்வட்'. இந்தக் கோயில் விஷ்ணு கோயிலாகத்தான் கட்டப்பட்டது.

மன்னரைக் கடவுளாக உருவகப்படுத்தும் தேவராஜா சித்தாந்தம் இன்னும் இருக்கிறது. தாய்லாந்து மன்னர்களின் மகுடம் சூட்டும் விழாச் சடங்குகளில் மன்னர் சிவனாகவும், விஷ்ணுவாகவும் போற்றப்படுகிறார்.

விஷ்ணு வழிபாட்டின் தொடர்ச்சியாய், கருடன் தாய்லாந்தில் ஒரு விசேஷ அந்தஸ்து பெற்றிருக்கிறது. தாய்லாந்தின் அரசு முத்திரை, தாய்லாந்தின் அரசுக் கட்டடங்களிலும், பிரதான வங்கிகளின் முத்திரையாகவும், அரசு ஆவணங்களின் நெற்றியிலும் கருடன் கம்பீரமாய்க் காட்சியளிக்கும்.

* வேர்ல்டு டிரேட் சென்டரில் பிள்ளையார்





* கருடன் மீது நாராயணன்

* ஊஞ்சலாட்டம் நடைபெற்ற இடம்



த்ரியம்பவே த்ரிபாவே

சிவனுக்கான ராட்சஸ ஊஞ்சலாட்டம் நடப்பதில்லையே தவிர, அதன் எதிரில் உள்ள "பிராமணர்கள் கோயில்" என்று அழைக்கப்படும் இந்துக் கோயிலில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஊஞ்சலாட்டம் சிறிய அளவில் நடக்கிறது. இந்தப் பூஜைக்குத் தாய் மொழியில் 'த்ரியம்பவே த்ரிபாவே' என்று பெயர். இந்த ஊஞ்சலாட்டம் ஒவ்வொரு மார்கழி மாதமும் பதினைந்து நாட்கள் நடக்கிறது. நீங்கள் யூகிப்பது சரிதான். இது நம் 'திருவெம்பாவை-திருப்பாவை'தான். இது சென்ற நூற்றாண்டுவரை தாய்லாந்தின் தேசியத் திருவிழாவாகவே நடைபெற்று வந்தது.

பாங்காக்கில் இருக்கும் 'ராச குரு' என்னும் தலைமைப் பூசாரி, இந்தப் பூஜைகளை நடத்துகிறார். தாய்லாந்திலுள்ள அத்தனை பிராமணர்களும் திருவிழாவின்போது இங்கு வருகிறார்கள். ஒன்றாக அமர்ந்து திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுகின்றனர். இந்த தமிழ்ப் பாடல்களுக்கு அவர்களுக்கு அர்த்தம் தெரியாது. ஆனாலும் அவற்றைக் கடவுள் பெயரில் சொல்லும் மந்திரமாக சிரத்தையுடன் ஓதுகிறார்கள்.



* பிரம்மா கோயிலில் நடனப் பெண்கள்

"இந்த விழா நடக்கும் நேரம் தமிழ்நாட்டில் ஆருத்ரா தர்ஷன் நடக்கும் நேரத்தோடு பொருந்தியிருக்கிறது. நாம் திருப்பாவையையும் திருவெம்பாவையையும் பாடுகிறோமே தவிர, அதை ஒரு விழாவாக நடத்துவதில்லை. மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் தாய்லாந்தில், அதைப் பாராயணம் செய்வது ஒரு விழாவாகவே இருக்கிறது." இதை வியந்து பாராட்டியவர்கள் காஞ்சி காமகோடி மஹா பெரியவர். 1952 ஆம் ஆண்டு மாயவரத்தில் உள்ள ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி மடத்தில், திருப்பாவை திருவெம் பாவை விழாவில் இப்படிப் பேசியதாக டாக்டர் பத்மா சுப்ரமணியம் தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இஷ்ட தெய்வம்

மும்மூர்த்திகளில் தாய்லாந்தில் பிரபலமானவர் பிரம்மாதான். பெரிய கட்டடங்கள், பூங்காக்கள், பொது இடங்கள் என்று முச்சந்திப் பிள்ளையார் மாதிரி, பிரம்மாவுக்குச் சின்ன மண்டபம் கட்டி வழிபாடு நடக்கும். பெரிய அளவிலான பிரம்மா கோயில் ஒன்று, பாங்காக்கின் பிரதான சாலையில் இருக்கிறது. கோயிலைச் சுத்தம் செய்ய மட்டும் சிலர். மற்றபடி கோயில் எப்போதும் திறந்திருக்க, பிரம்மாவுக்கும் பக்தர்களுக்கும் இடையே எந்தப் பூசாரியும் இல்லாமல், பக்தர்களின் இயல்பான பிரார்த்தனையில் வழிபாடு நடக்கிறது.

விநாயகருக்குச் சிறிய அளவில் வழி பாட்டு ஸ்தலங்கள் இருக்கின்றன. விநாயகருக்குச் சார்த்தும் எருக்கம்பூதான் தாய்லாந்தின் தேசிய மலர். இதைத் தவிர, நாகதேவன், மழை வருவதற்காக தாய்லாந்தில் வணங்கப்படுகிறார். பஞ்ச பூதங்களில் நிலம், நீர், காற்று மூன்று பூதங்களையும் தாய்லாந்தவர்கள் பூஜிக்கிறார்கள். நில மாதா 'மே தௌரனி' (சமஸ்கிருத மாதரசி) நல்ல அறுவடை கௌரி வணங்கப்படுகிறாள். நீரை 'மே கொங்கா' (கங்கா) என்றும் வாயு பகவானை 'ப்ர பாஜ்" என்றும் பூஜிக்கிறார்கள். வீட்டுப் பூஜைகளிலும், வியாபாரத் தொடக்க விழாவிலும், மற்ற பூஜைகளிலும், இந்து மத தேவதைகள் வணங்கப்படுகிறார்கள். புத்த பிட்சுக்கள்கூட தங்கள் பிரார்த்தனையில் இந்து தேவதைகளைப் பூஜிப்பது வழக்கம்.

இந்த வழிபாடெல்லாம் சிறிய அளவில்தான் நிகழ்கின்றன. ஆனால் இன்னொரு இந்துக் கடவுளுக்கு நடக்கும் வழிபாடு, மெய்சிலிர்க்க வைக்கிறது. பாங்காக்கின் பிரதான சாலை அடைக்கப்பட்டு, தாய்லாந்தவர்கள் ஊர்வலமாய்த் தேர் இழுக்கும் அற்புதம் அது...

(தொடரும்)

நெஞ்சு பொறுத்திருத்தல்...

இளம்பிறை

நிராதரவு நாட்களில்
ஒரு பொழுதில் வந்து
நானுண்டு என்பாய்
பூவுக்குள் கிடப்பேன்
அடுத்த நாள் பிரிவாய்
முளைகளில் பாயும் கொதிநீர்.
அக்கம் பக்கத்தின்
கிண்டல் உரையாடல்
காயத்தில் கத்திக்குத்து
பெருமூச்சின் வெப்பம்
ஆவியாக்கும் ஆயுளை
வெறித்தபடி..
உன்சிறு மறுதலிப்பும்
தாங்காத நெஞ்சுடன்
தாங்கிக் கொண்டிருக்கிறேன்
அனைத்தையும்.



அற்புதமான பூப்பந்து!



• வகார் யூனுஸ்

★ வெறிபிடித்த ரசிகர்கள் சின்னத் திரைக்கு உண்டு என்பதற்கு இன்னொரு உதாரணம்: கும்பகோணத்திலிருந்து வேலை மெனக்கெட்டு ஒருவர் நீளமான (பட்டு?) துணியை அனுப்பியிருந்தார். அதில் மயில்களின் உருவம் (மயில்சாமிக்கு அடையாளமாம்) மற்றும் 'காமெடி டைம்' (சன் டீ.வி.) ஆகிய வார்த்தைகள் நெய்யப்பட்டு இருந்தன. தாம் வசதியில்லாதவர் என்று தொலைபேசியில் கூறிய இவருக்கு, இதை நெய்ய சுமார் ஒரு மாதமானதாம். எப்படி சார் வசதி வரும்?



• நம்பி

★ பாகிஸ்தான் அணி கேப்டன் வகார் யூனுஸ் கையில் காணப்பட்டது ஒரு மிக அற்புதமான பூப்பந்து - அவரது குழந்தை. இ.எஸ்.பி.என்.-ல். இதைச் சற்று அதிக நேரம் காட்டியபோதும் அலுக்கவில்லை. வெகு அழகு. இந்த உலகின் கள்ளம் கபடுகள் ("இந்தியா எதிரி நாடு" என்பது உட்பட) எதுவும் புகாத தூய்மை. அம்மா கூப்பிடக் கூப்பிட மறுத்து அப்பாவிடமே ஒட்டிக் கொண்டது. வருங்கால கேப்டன்?

★ 'கதையல்ல நிஜத்'தில் மனவியல் மருத்துவர் டாக்டர் நம்பி கூறியவை கவனத்தில் கொள்ள வேண்டியவையாக இருந்தன. "எக்காரணம் கொண்டும் சிறுவயதுக் குழந்தைகள் பெற்றோரை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாது. அதுவும் அம்மாவின் பிரிவு குழந்தையின் மனநலத்தை நிச்சயம் பாதிக்கும். இதனால் நாளடைவில் அந்தக் குழந்தையின் குண நலன்களில் கோளாறு ஏற்படும்." நடிகை லட்சுமி புன்னகையுடன் திறமையாக நிகழ்ச்சியைத் தொடர்ந்தார்.

★ கந்தசஷ்டியை அதிகம் கொண்டாடியது பொதிகைதான். முருக பக்திப்பாடல்கள், ஒரு பக்திப்படம், முருகனின் சிறப்புகளைப் பட்டியலிடும் திரைப்படப் பாடல்கள் என்று சங்கிலித் தொடராய் சரவணனின் புகழ்.

★ ராஜ் டீ.வி.யில் வந்தார் ஒரு 'பெண் பெயரியல் மாமேதை'. "சோமசுந்தரம்ங்கிற உங்க பெயரை சோமையான்னு மாத்திக்குங்க. வேலுமணிங்கற உங்க மனைவி பெயரை தங்கம்னு மாத்துங்க. மாத்தின பெயர்களை, தினமும் நீங்க 23 தடவையும் அவங்க 41 தடவையும் எழுதிப் பழகணும். 'எஸ்'ன்ற உங்க குழந்தையின் இனிஷியலை 'பி.எஸ்'ன்னு மாத்துங்க" என்றார் அதிரடியாக. நல்லவேளை, அந்த 'எஸ்'ஸையாவது இருக்கவிட்டாரே. இல்லையென்றால் விபரீதக் குழப்பமல்லவா வந்திருக்கும்!

— சேனல் பாய்

வட்டமேஜை



✉ 'நெஞ்சம் உண்டு' சிறுகதை இயல்பான நடை. மனத்தைக் கனமாக்கும் நிகழ்வுகளின் பின்னணி. மிகச் சிறந்த படைப்பு...
பெருமாள்புரம், தா. பகவதி

✉ ஜயேந்திரர் அளித்துள்ள பேட்டியில்

50% ஓ.கே 50% நோ!

ஏற்புடையது ஐம்பது சதவிகிதம். ஏற்க முடியாதது ஐம்பது சதவிகிதம் என்கிற கணக்கில் தான் உள்ளது. அனைத்தையும் சிந்தித்து – சீர்தூக்கிப் பார்த்திட வேண்டியது மக்கள் கடமை.
பெங்களூர் - 72, ப. மூர்த்தி

✉ 'கள்ளச்சாராயத்துக்கு கல்தா' கட்டுரை படித்தேன். குடி குடியைக் கெடுக்கும் என்பதை, ஒரு பெண்ணாக இருந்து புரிந்து கொண்டு, கள்ளச்சாராயத்தை ஒழித்து 'காந்தி விருது' வாங்கிய உதவி ஆணையாளர் ஹேமாவை எத்தனைப் பாராட்டினாலும் தகும்.
கோவை – 1, டி. ஜெய்சிங்

✉ லஞ்சம் கொடுப்பவர், வாங்குபவர் இருவரும் ஒரே குற்றத்தின் சமபாதி உரிமையாளர்கள். சட்டத்தின் நிலை இதுவே. எனவே லஞ்சம் கொடுப்பவர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் உணர்ச்சிக் குழப்பல் எதுவும் கூடாது. அரசு பல துறைகளிலும் கொடுப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்தால், லஞ்சத்தின் வீச்சு குறையும். நிலை இப்படி இருக்க தங்களது 10.11.2002 இதழில் ஆர். அப்துல் சலாம் (திருச்சி) கேட்ட கேள்விக்கு 'தராக' அளித்த பதில் சரியானதல்ல. நக்கலும், இண்டலும் தேவைப்படாத கேள்வி அது.

✉ சமயத்துல வள்ளலாகிடுறீங்க, சமயத்துல படுகருமியாகிடுறீங்க. வட்ட மேஜை இரண்டு பக்கம். 'நீங்கள் கேட்டவை' மூணுபக்கம்ன்னு அள்ளி விட்டுருக்கீங்க. இதையே ரெகுலரா மெயின்டெய்ன் பண்ணினா பரவாயில்லை.



ஆனா நீரும் அம்மா மாதிரியில்ல, சமயத்துல வாரிவிடுறீங்க.
கருப்பம்புலம், பஞ்சவண்ண மகன்

✉ ஜயேந்திரரின் பேட்டி கண்டேன். ஆணித்தரமான பொறுப்புணர்வுடன் கூடிய, அசத்தல் பதில்கள். உங்கள் குண்டக்க மண்டக்க கேள்விகளால் கூட, அவர் பொறுமையிழக்காதபோது, அட்டையில் 'சாடுகிறார்' என்று போட்டிருப்பது அபத்தமானது.
மதுரை – 1,
பாலசுப்ரமணியம் ஹேமலதா

✉ தமிழக முதல்வர் ஜெ.வுக்கும், சசிகலாவுக்கும், கற்பனைப் பட்டி மன்றம் மிக அருமை. ஒவ்வொருவராக மட்டுமே சொற்பொழிவாற்றியுள்ளதால் அதை 'வழக்காடு மண்டபம்' என்பதே பொருத்தமானது.
மதுரை – 2 இரா. சக்கரபாணி

✉ யுகபாரதியின் 'காதல் பிசாசே' வாசித்தேன். சொல்லும் விதமும், தேர்ந்தெடுத்த வார்த்தைகளும் அருமை. வாழ்த்துக்கள்...!

சென்னை - 117, வன்னி. குமரகுருபரன்

✉ சென்ற ஓராண்டுக் காலமாக, என் மனத்தில் ஏற்பட்ட ஆதங்கம் காரணமாக, நான் ஹரிகதை நிகழ்ச்சிகள் செய்ய வில்லை. ஆனால், எனது கவலையைத் தீர்க்கும் வண்ணம் ஹரிகதையைக் கற்பிக்க ஏற்பாடாகியிருப்பதால், அதைக் கற்கும் மாணவர்கள், வகுப்பில் கற்பதைத் தவிர, ஹரிகதை நிகழ்த்துவது பற்றி அறிய (practical training) நான் தொடர்ந்து மேடை நிகழ்ச்சிகளும் செய்ய வேண்டிய அவசியத்தை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் வலியுறுத்தியதால், இனித் தொடர்ந்து ஹரிகதை நிகழ்ச்சிகளும் செய்ய முடிவு செய்துள்ளேன்.

தஞ்சை, கல்யாணபுரம் ஆராவமுதன்



✉ ராஜாஜியின் 'ராமகிருஷ்ணர் வரவேண்டும்' கட்டுரையைப் படிக்கும்போது மெய்சிலிர்த்தது. அழகு தமிழில், ஆற்றொட்டம் போன்ற கட்டுரையைப் படித்துப் படித்துப் பெரிதும் உவகையுற்றேன். மொத்தத்தில் ஒரு நிறைவான மலரைப் படித்த அனுபவம் எப்போதும் என் நினைவில் இருக்கும். A thing of beauty is a joy forever என்ற மொழியின் அர்த்தத்தை உணர்த்தியது கல்கி தீபாவளி மலர்.

சென்னை, கே. சுந்தரம்

✉ கல்கி தீபாவளி மலர் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள், புகைப்படங்கள் என்று முழுவதும் புரட்டப் புரட்ட பொக்கிஷப் புதையலாக இருக்கிறது.

மயிலாடுதுறை, சின்னஞ்சிறுகோபு

✉ ரமணமகரிஷியைப் பற்றிய சொற்சித்திரம் பாங்குற அமைந்திருந்தது. ஒரு ஸ்பூன் காவிரி, தண்ணீர் கஷ்டத்தையும் மறந்து கண்களில் நீர் ததும்ப சிரிக்க வைத்தது. எங்கள் எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற சிறப்பான மலர்.


திருச்சி – 21, இந்திரா பத்மநாபன்

✉ தீபாவளியை விட தித்திப்பைத் தந்த கல்கி தீபாவளி மலர் – 2002, மலர் உலகில் ஓர் குறிஞ்சிப்பூ. எழில், யோகா, தனுஷ், ராஜம், பத்மவாசன் போன்றோர்களின் கை வண்ணத்தில் உருவான ஒவ்வொரு தேர்த்திக் கலை அழகும், சவால் விடும் வண்ணம் தத்ரூபமாய் காட்சி தந்தது.

கோபிசெட்டிப் பாளையம், ஜி.கே.எஸ். மூர்த்தி

✉ அமரர் கல்கியின் 'மாலதியின் தந்தை' நெடுங்கதை கல்கி மலருக்கு ஒரு தனிச் சிறப்பு. எப்போதுமே தீபாவளி மலர்களில் தேடிப்பிடித்து, தாங்கள் வெளியிடும் கல்கியின் கதைகள் எங்களை அந்தக் காலத்துக்கே அழைத்துச் சென்று அசர வைக்கின்றன.

மயிலாடுதுறை, இரா. வெங்கடேஸ்வரன்.



✉ ஆன்மிகத்துக்கு சுகி சிவம், அன்றாட வேதாந்தத்துக்கு லா.சு. ரங்கராஜன் (ரமண மகரிஷி) சமூக யதார்த்தத்துக்கு சோ, தர்மன், குடும்பப்பாங்கான கதைக்கு வாஸந்தி, நகைச்சுவைக்கு முகுந்தன் என்று தீர்மானமாகச் சொல்லலாம்.

சென்னை – 90, ச. லக்ஷ்மணன்

U

காதல் அழிவதில்லை



'தமிழ் ரசனையைத் தொடர்ந்து சிலுவையில் அறைந்து வரும் கோடம்பாக்கத்து ஆசாமிகளில் எனக்குத்தான் முதலிடம்' என்பது போல படமெடுத்திருக்கிறார் டி. ராஜேந்தர்.

ரஜினிகாந்துக்கு அடுத்த சூப்பர் ஸ்டார் என்பது போல சிலம்பரசனைப் படம் நெடுகிலும் பில்ட்அப் செய்திருக்கும் இயக்குனர், கொஞ்சமாவது புதுவிதமாய்ப் படத்தை எடுத்திருந்தால் பாராட்டியிருக்கலாம்.

ஆனால் கடுகளவும் கருணையின்றி, தமது மூர் மார்கெட் பாணியிலிருந்து ஒரு சென்டிமீட்டர் கூட விலகிவிடாமல், கடை விரித்திருக்கிறார். இடைவேளைக்கு முன்னதாகவே பாதி இருக்கைகள் காலி.

நாயகன் சிம்புவும், நாயகி சார்மியும் ஒரே கல்லூரியில் படிக்கிறார்கள். பிறகென்ன! முதலில் மோதிக்கொள்கிறவர்கள் பிறகு காதலர்கள் ஆகிறார்கள். காதல் தீயாகக் கொழுந்து விட, மாணவர்கள் முன்னிலையில் இருவரும் போட்டி போட்டு இடித்துக்கொள்கிறார்கள். இது போதாதென்று, அந்தக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் பாண்டுவும், கணக்கு டீச்சர் (எந்தக் கல்லூரியில் கணக்கு டீச்சருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள்?) சர்மிளியும் இடிப்பதும், உரசுவதுமாக இருந்து, விதவிதமான முனகல் ஒலிகளை எழுப்பி, மாணவர்களுக்கு நல்ல (?) முன் மாதிரியாக இருக்கிறார்கள்.

மகளின் காதலுக்கு எதிராக குண்டர்களையும், ஆசிட்வாலாக்களையும் அனுப்புவதைத் தவிர, நாயகியின் தந்தையான மத்திய மந்திரி ராதாரவிக்கு வேறு அரசுப் பணிகளே இருப்பதாகத் தெரியவில்லை.

மகளைப் பார்த்து காதலனுக்குப் பிறந்தவளே, எனக் கேட்கும் பிரகாஷ்ராஜ் பாத்திரமும், கணவன் சந்தேகப்பட்டு கொட்டும் ஆசிட் வார்த்தைகளுக்குக் கொஞ்சமாய் அழுது விட்டு, அடங்கிப் போகும் சீதா பாத்திரமும் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போன சீப் சென்டிமென்ட் செதுக்கல்கள்.

பார்ப்பதற்கு பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் போல, விடலைப் பையன் தோற்றத்தில் வரும் சிம்பு, கையில் சவுக்குக் கட்டையை ஏந்தி, தனியொரு ஆளாக இருபது ரவுடிகளைப் பந்தாடுவது, குருவித் தலையில் பனம் பழம்.

பாவம், அறிமுக நாயகி சார்மி! இயல்பாகவே நடிக்க அடம்பிடிக்கும் அவர் மீது, தமது நடிப்புப் பாணியைத் திணித்து, அமெச்சூர் நாடக நடிகை மாதிரி ஆக்கிவிட்டார் இயக்குனர். சிலம்பு - சார்மி காதலைச் சேர்த்து வைக்க, வக்கீல் தாதாவாக வரும் டி. ராஜேந்தர் மட்டும் அடுக்குமொழி வசனங்கள் பேசியிருந்தால் பரவாயில்லை. ஆளாளுக்குப் பேசுவதால் அய்யோடா சாமி என்று, அடிக்கடி காதுகளைப் பொத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

படத்தில் ஆறுதலான விஷயம் சிலம்பரசனின் நேர்த்தியான நடனம் மட்டும்தான். காதல் என்னவோ அழிவதில்லைதான். ஆனால் இது மாதிரி படங்களுமா?

— விஷுவல்தாசன்

● ஃபெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரெஜ் ○ அபவ் ஆவரெஜ் ○ டிஸ்டிங்ஷன்


என்ன, மழை நீர் அறுவடை பண்றீங்களா?
எஸ்.மோகன்

அங்கே தண்ணீர் வெள்ளம்; இங்கே அன்பு வெள்ளம்!

• மலைகா

மாநிலங்களெல்லாம் பில் கேட்ஸை நோக்கி 'அம்மா தாயே!' என்று 'கேட்'டைத் திறந்து கொண்டு நின்றனவா...? அவர் நூறுமில்லியன் டாலரை அனாயாசமாக எடுத்துப் போட்டதும், எல்லோர் மனசிலும் ஒரு திமிர் தாராளத்துவம் பரவி விட்டது. எங்கள் முதல்வர் தேஷ்முக் என்னடாவென்றால் "பிடியுங்கள் இரண்டாயிரம் கோடியை; ஓர் ஆயிரம் கோடியை நாங்கள் தருகிறோம்; இன்னொரு ஆயிரம் கோடியை நீங்கள் தாருங்கள். மும்பையின் போக்குவரத்து, குடியிருப்பு, தண்ணீர் எல்லாப் பிரச்னைகளையும் போக்கி, அதை ஒரு சுவர்க்க பூமியாக மாற்றிக் காட்டுவோம்" என்று மார்தட்டுகிறார்.

ஓராயிம் கோடியில் சைபர்கள் மட்டுமே இவர் கண்ணுக்குத் தெரிகிறதா? டீச்சர்களுக்குச் சம்பளமில்லை; மும்பை முனிசிபல் ஊழியர்களுக்கு



போனசில்லை; கஜானாவில் கால் காசு இல்லை; எதை வைத்துக் கொண்டு வாய்ப் பந்தல் போடுகிறார்? குழம்புகின்றனர் குடிமக்கள். அரசியல்வாதிகள் எல்லோரும் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையார் களுக்கு உடைப்பவர்கள் தானே?

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார் களுக்கு உடைப்பவர்கள் நாங்கள் இல்லை, என்று ஆணித்தரமாகச் சொல்கிறார் எங்கள் எம்.பி.

மனோகர் ஜோஷி. அவர் 'பாவ் – பீஜ்' (மராத்திய ரக்ஷா பந்தன்) பண்டிகையை மாதுங்காவிலுள்ள ஓர் அனாதை மகளிர் ஆசிரமவாசிகளுடன் தான் கொண்டாடினார். உடல் ஊனமுற்ற சகோதரிகளுக்கு, அவருடைய "கோஹினூர் ஹோட்டலி"ல் ஃபைவ் ஸ்டார் விருந்து! இந்தச் சகோதர பாவத்தை அனாதை ஆசிரமத்துடன் நிறுத்தாமல், அரசு கட்டில் வரை கொண்டு சென்றிருக்கிறார். 'எதிர்க்கட்சி என்றால் எல்லாவற்றிற்கும் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை; விலாஸ்ராவ் தேஷ்முக் மும்பையை வளப்படுத்த முயற்சிக்கும் போது, நீங்களும் அவருக்குக் கை கொடுங்கள்' என்று தமது சிவசேனை – பி.ஜே.பி. தம்பிகளுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறாரே? உங்கள் ஊரில் தண்ணீர் வெள்ளம்; எங்களூரில் அன்பு வெள்ளம்!



• டாக்டர் ஊர்மிளா



• ஜகதீஷ் காந்தி

அன்பு வெள்ளம் அடித்துக் கொண்டு பாயும் போது, அது மனிதர்கள் மிருகங்கள் என்று இனம் பிரித்துப் பார்ப்பதில்லை! பாருங்களேன்.. முலுண்டிலுள்ள ஹோமியோபதி டாக்டரான ஊர்மிளா சுரியா, மிருகங்களை குணப்படுத்தவும் அக்குபங்சரை உபயோக்கிறார். இது நாள் வரை மனிதர்களைத் தான் இம்முறையில் குணப்படுத்திக் கொண்டிருந்தார்கள். போர்விலி பார்க்கிலிருந்து தப்பித்த புலி ஒன்று, தெருநாய் ஒன்றைக் கடித்துப் போட, அது பட்ட பாட்டை காணச் சகிக்காமல், ஊர்மிளா அதனை அக்குபங்சர் முறையில் மூன்றே நாட்களில் குணப்படுத்திக் காட்டினார். அதிலிருந்து இவ்வரை ஒரு வெட்ரினரி டாக்டராக நினைத்துக் கொண்டு தங்கள் 'செல்லப் பிராணிகளை இவரிடம் சிகிச்சைக்கு அழைத்து வருகின்றனர். இந்தியாவில் மிருகங்களுக்கு அக்கு பங்சர் அளிக்கும் ஒரே டாக்டர், அனேகமாக இவராகத்தானிருக்கும்; மனமிருந்தால் மார்க்கம் இல்லாமலா?

மனமிருந்தால் மார்க்கம் நிச்சயம் உண்டு என்பதற்குப் பிரத்யட்ச உதாரணம் மும்பைக்காரரான ஜகதிஷ் காந்தி. தலையிலிருந்து கால்வரை சர்க்கரை நோயால் பீடிக்கப்பட்டிருந்த இவர், இருபத்தொரு வயது வரை வாழ்வதே பேரதிசயம் என்றுதான் டாக்டர்கள் ஒட்டுமொத்தமாக முடிவு கட்டியிருந்தார்கள். ஆனால், 68 வயதில் இன்று வெற்றிகரமான தொழிலதிபராக விளங்கும் காந்தி, உலக டயாபடீஸ் தினமான நவம்பர் 14ஐ ஒட்டி, தன் உண்மைக் கதையை உலகுக்குக் கூறி, தினம் 3 இன்ஜெக்ஷன்களும் 21 காப்ஸ்யூல்களும் சாப்பிட்டும், இதுரை 45,000 ஊசிகளை உடலுக்குள் செலுத்தியும், மூன்று அழகிய ஆரோக்யமான பெண்களின் தந்தையாய், அழகிய மனைவியின் அன்புக் கணவனாய், வாழ முடியும் என்பதை உலகுக்கு நிலை நாட்டியிருக்கிறார். டயாபடீஸ்காரர்கள் நிச்சயம் இவரை 'சோ ஸ்வீட்' என்றுதான் கொஞ்சுவார்கள்!

'சோ ஸ்வீட்' என்று கொஞ்சிக் கொண்டிருக்கிறார்கள் அர்பாஸ் கானும், மலைகா அரோராவும் – சல்மானின் சகோதரன், தைய தையா நாட்டிய நாயகி என்றால் சட்டென்று புரியும்! ப்ரீச் கேண்டியில் அண்மையில் அவர்களுக்குப் பிள்ளை பிறந்ததும், அதை அர்பாஸ்கான் நேரில் கண்டு, துடிதுடித்துப் பின் மன மகிழ்ந்ததும் பெரிய விஷயமில்லை; குழந்தை பிறந்தது நார்மல் டெலிவரியில்! பணக்கார ஆசுபத்திரி, பணக்காரப் பெற்றோர்... ஆனாலும் சிசேரியனில்லை! ஆச்சர்யமாயில்லை? உலகில் நல்லவர்களும் இருக்கிறார்கள்தான்!

– ஜெய்ஸ்ரீ ராஜ்

அன்னதானப்பிரபுவே சரணம் ஐயப்பா!

கார்த்திகை முதல் மகர ஜோதி வரை ஐயப்ப பக்தர்களுக்கு சபரிமலையில் அன்னதானம் செய்திட அரிய வாய்ப்பு!

பேரன்புடையீர்!

வணக்கம். சபரிநாதன் வீற்றிருக்கும் மலை, ஸ்ரீராமனுக்கு சபரி கனி கொடுத்த இடம், ஐயன் ஹரிஹரசுதன் ஐயப்பன் அமர்ந்து அருளாட்சி புரிந்து மகரஜோதியாக காட்சி தரும் திருமலைதான் சபரிமலை.

எல்லையில்லாப் பேருருளைப் பொழியும் ஐயப்பன் மனிதகுலத்தின் தொல்லைகளைக் களையவே அவதாரம் எடுத்தவர். வேண்டிவரும் பக்தர்களுக்கு, விரைவாக வரம் தரும் தெய்வம்தான் நம் சபரிமலை ஐயப்பன்.

விரதங்களுக்கும் முழுவடிவம் தந்த தெய்வம், ஒழுக்கத்திற்கு பாதை வகுத்த தெய்வம் என நமக்குத் தெரிந்தாலும், நோன்பிருந்து வழிபாடு செய்ய முடியாதவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர்கள், நோன்பிருந்து வழிபட்டாலும் நடந்து சென்று மலையேறி, பதினெட்டு படி மிதிக்க முடியாதவர்கள் ஆயிரமாயிரம் அன்பர்கள்.

பாமரர் முதல் மெத்தப் படித்தவர்கள் வரை, பரம ஏழை முதல் பல கோடிக்கு அதிபதிகள் வரை வித்தியாசம் பாராமல் சரண கோஷம் பாடி, பேட்டை துள்ளி ஆடி, பம்பாவிலிருந்து நடந்து சென்று, பக்திப்பரவசத்தோடு பதினெட்டு படிகள் ஏறி, வில்லாளி வீரனை, வீரமணிகண்டனை தரிசித்து ஆனந்தம் அடைபவர்கள் கோடானுகோடி பக்தகோடிகள்.

மகர ஜோதியை நேரில் தரிசிக்க முடியாதவர்களுக்கும் மனக்கண்ணில் மகரஜோதி காட்டவே, ஐயனின் திருவருளைப் பெறவே கார்த்திகை முதல் மகர ஜோதி வரை மண்டல விரதம் இருந்து செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு சபரிமலையில் (பம்பாவில்)"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானம் செய்ய உள்ளோம். சபரிமலையில் அன்னதான திருப்பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பி ஐயனின் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

★ தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ ரூ.500/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.1000/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு சபரிமலையில் ஐயப்பன் பாதங்களில் பூஜிக்கப்பட்ட ஐயப்பன் வெள்ளி டாலருடன் பிரசாதங்களும் அனுப்பி வைக்கப்படும்.

★ பிள்ளை வரம் வேண்டும் ★ கல்வியில் முதல் நிலை பெறவேண்டும் ★ தொழிலில் முன்னேற்றம் வேண்டும்
★ நோய், நொடி பிணிகளிலிருந்து விடுபட வேண்டும் ★ வழக்குகளிலிருந்து விடுதலையாக வேண்டும்
★ குடும்பத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் தங்குதடையின்றி, தாமதமில்லாமல் நடைபெற வேண்டும்
★ கடன்கள் வசூலாக வேண்டும் ★ மனதில் நிம்மதி நிலவ வேண்டும் ★ வீட்டில் மகிழ்ச்சி பொங்க வேண்டும்

இதில் எந்த வேண்டுதல் என்பதைக் குறிப்பிட்டு யாருக்காக இந்த பிரார்த்தனை செய்து அன்னதானம் செய்ய வேண்டும் என்பதை பெயர், நட்சத்திரம், கோத்திரம், பிறந்த நாள் அல்லது திருமண நாள் இவைகளையும் தெளிவாக முழுவிலாசத்தோடு எழுதி அனுப்பவும். உங்களுக்காக ஐயப்பனிடம் பிரார்த்தனை செய்து உங்கள் பெயரில் சபரிமலையில் (பம்பாவில்) ஐயப்ப பக்தர்களுக்கு அன்னதானம் செய்கிறோம்.

அன்னதானத் திருப்பணிக்கு நீங்கள் அனுப்பும் நன்கொடையை, (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயரில் Cheque/D.D/M.O மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி ஐயப்பனின் பேரருளைப் பெற அன்புடன் வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 7102308 E-mail: siva siva@vsnl.net

ஐயப்பமார்கள் விரதம் இருக்கும்போது சபரிமலையில் அன்னதானம் செய்தால் எல்லையில்லா புண்ணியம் பெறலாம்!

சிவகாமியின் சபதம்



பத்தொன்பதாம் அத்தியாயம்

தீங்கனவு

ஆயனரும், சிவகாமியும் வாதாபி வீரர்களைச் சந்திக்க நேர்ந்தது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதற்கு, நாம் சிறிது பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

காஞ்சிமா நகரின் வடக்குக் கோட்டை வாசலில் மகேந்திர பல்லவரிடம் விடை பெற்றுக்கொண்டு பிரிந்தபோது, புலிகேசியின் மனநிலை எப்படியிருந்தது என்பதை ஒருவாறு நாம் தெரிந்து கொண்டோம். கரும் புகையும், தீக் குழம்பும், அக்கினிச் சுவாலையும் குமுறிக் கொண்டு, எப்போது வெளிக் கிளம்பலாம் என்று வழி பார்த்துக் கொண்டிருக்கும் நெருப்பு மலையின் கர்ப்பத்தைப் போல் இருந்தது அவருடைய உள்ளம்.

காஞ்சிமா நகரின் மணி மாட மண்டபங்களும், அந்நகர மக்களின் செல்வமும், சிறப்பும், காஞ்சி அரண்மனையின் மகத்தான ஐசுவரியமும், அங்கு அவர் கண்ட காட்சிகளும்,வைபவங்களும் அளவற்ற பொறாமைத் தீயை அவர் உள்ளத்தில் மூட்டியிருந்தன.

அந்தப் பொறாமைத் தீயை வளர்க்கும் காற்றாக அமைந்தது கடைசியாக நடந்த சிவகாமியின் நடனம். நடனத்தின்போது மகேந்திர பல்லவர் கலைச் செருக்குடன் கூறிய மொழிகள் கலை உணர்வு இல்லாத புலிகேசியின் உள்ளத்தில் பெருந் துவேஷத்தை உண்டாக்கின.

எல்லாவற்றுக்கும் மேலாக, புலிகேசியின் மனத்தில் கோபம் குமுறி

அமரர் கல்கி

எழும்படி செய்த விஷயம், மகேந்திர பல்லவர் நம்மை நெடுகிலும் ஏமாற்றி வந்திருக்கிறார் என்ற உணர்ச்சியே யாகும். வடபெண்ணைக் கரையில் தம் முன்னிலையில் அவர் தன்னந்தனியாக வந்து நின்று, பொய் ஓலையைக் கொடுத்து ஏமாற்றி விட்டல்லவா போய் விட்டார்? அதற்குப் பிறகு நெடுகிலும் எத்தனை ஏமாற்றங்கள்? எத்தனை தந்திர மந்திரங்கள்? எத்தனை மாயா ஜாலங்கள்?

நியாயமாக இந்தக் காஞ்சிமா நகரம் இதற்குள்ளே தமது காலடியில் விழுந்து கிடக்க வேண்டும். ஐசுவரிய கர்வமும், கலைக் கர்வமும் கொண்ட காஞ்சி மக்கள் தம் முன்னிலையில் நடுநடுங்கிக் கொண்டு உயிர்ப் பிச்சை கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆ! இந்த மகேந்திர பல்லவனுடைய மணிமுடியைத் தமது காலால் உதைத்துத் தள்ளியிருக்க வேண்டும்!

ஒன்றரை வருஷத்துக்கு முன்னால் வடபெண்ணைக் கரையில் நின்றிராமல் நேரே முன்னோக்கி வந்திருந்தால், இதெல்லாம் சாத்தியமாகியிருக்கும். இப்போது காஞ்சியிலும் உறையூரிலும் மதுரையிலும்கூட வராகக் கொடி பறந்து கொண்டிருக்கும்.

இதெல்லாம் நடக்காமற் போய் விட்டதன் காரணம் என்ன? - எல்லாம் மகேந்திர பல்லவனுடைய மாய தந்திரங்கள்தான்.

வன விலங்குகளையெல்லாம் கதி கலங்கச் செய்யக்கூடிய வீரப் புலியைக் கேவலம் ஒரு நரி - வளையில் பதுங்கி வாழும் நரி - தந்திரத்தினால் வென்று விட்டது!

இதை நினைக்க நினைக்க, வாதாபிச் சக்கரவர்த்திக்குக் கோபம் மேலும் மேலும் பொங்கிக் கொண்டு வந்தது. அவருடைய நெற்றியின் நரம்புகள் ஒவ்வொன்றும் புடைத்துக் கொண்டு நின்றன. அவருடைய முகத்தைப் பார்த்தவர்கள் என்ன விபரீதம் வரப் போகிறதோ என்று அஞ்சி நடுங்கினார்கள்.

காஞ்சி நகரிலிருந்து வெளியேறியது முதல் அந்த நகருக்கு வடக்கே ஒரு காத தூரத்தில் சளுக்கர் பெருஞ் சைனியம் தங்கியிருந்த இடத்துக்குப் போய்ச் சேரும் வரையில் வாதாபிச் சக்கரவர்த்தி வாய் திறந்து பேசவில்லை. இந்த விபரீத அமைதியானது அவருடன் சென்றவர்களுக்கெல்லாம் பீதியை ஊட்டியது.

சக்கரவர்த்தி கூடாரத்தை அடைந்ததும், எரிமலை நெருப்பைக் கக்க ஆரம்பித்தது. வாதாபியின் படைத் தலைவர்களும் பண்டக சாலைத் தலைவர்களும், ஒற்றர் படைத் தலைவர்களும் புலிகேசியின் கோபாக்னியில் எரிந்து பொசுங்கினார்கள்.

தளபதிகள் முதலியோர் மந்திராலோசனைக்காக வந்து கூடியதும், "உங்களில் பாதிப் பேரை யானையின் காலால் இடறச் செய்யப் போகிறேன்; மிச்சப் பாதிப் பேரைக் கழுவிலே ஏற்றப் போகிறேன்!" என்று புலிகேசி ஆரம்பித்தார்.

அதைக் கேட்டு மௌனமாயிருந்த சபையினரைப் பார்த்து "ஏன் சும்மா இருக்கிறீர்கள்? எல்லாருக்கும் வாய் அடைத்துப் போய்விட்டதா?" என்று கர்ஜித்தார்.

பின்னர் சரமாரியாக அவர் வசை பாணங்களைப் பொழிந்தார். தென்னாட்டுப் படையெடுப்பில் நாளது வரையில் ஏற்பட்டிருந்த முட்டுக் கட்டைகள், தோல்விகள், ஏமாற்றங்கள் எல்லாவற்றுக்கும் அவர்கள்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார்.

"வீரம் மிகுந்த படைத் தலைவர்களே! புத்தியிற் சிறந்த ஒற்றர்களே! கேளுங்கள்! இந்தக் காஞ்சி நகரின் கோட்டை வாசல்களுக்கு ஒரு சமயம் வெறும் ஒற்றை மரக் கதவு போட்டிருந்தது. அப்போது நாம் வந்திருந்தால்



நம்முடைய யானைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோட்டை வாசலைத் திறந்து விட்டிருக்கும். இந்தக் கோட்டை மதிலைக் காக்க அப்போது பத்தாயிரம் வீரர்கள் கூட இல்லை. நமது வீரர்கள் ஒரே நாளில் அகழியைக் கடந்து மதிலைத் தாண்டி உள்ளே புகுந்திருக்கலாம். இந்த மகேந்திர பல்லவன் ஓடி வந்து என் காலில் விழுந்திராவிட்டால், காஞ்சியை லங்காதகனம் செய்திருப்பேன். அப்படிப்பட்ட காஞ்சி நகரில் என்னை அந்தப் பல்லவன், இல்லாத அவமதிப்புகளுக்கெல்லாம் உள்ளாக்கினான். ஒரு கல் தச்சனுக்கும் ஒரு கூத்தாடிப் பெண்ணுக்கும் முன்னால் என்னை அவமானப்படுத்தினான்! எனக்குக் கலை தெரியாதாம்! ரஸிகத் தன்மை இல்லையாம்! என்ன கர்வம்! என்ன அகம்பாவம்!'' என்று கூறிப் பற்களை நறநறவென்று கடித்துத் தரையில் காலால் உதைத்தார் புலிகேசி மகாராஜா!

பிறகு, ''மகேந்திர பல்லவன் இந்தக் காஞ்சிக் கோட்டையைப் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கொண்டிருந்த போது, நீங்கள் வடபெண்ணைக் கரையில் சாவகாசமாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள்!'' என்று கூறிப் பயங்கரத் தொனியுடன் சிரித்தார்.

அப்போது வாதாபி ஒற்றர் படைத் தலைவன் சிறிது தைரியம் கொண்டு, ''பிரபு! எல்லாம் நாகநந்தியின் ஓலையால் வந்த வினை! அப்போதே நான் ஆட்சேபித்தேன்!'' என்றான்.

புலிகேசி கண்ணில் தீப்பொறி பறக்க அவனைப் பார்த்துச் சொன்னார்: ''நிர்மூடா! உன்னுடைய முட்டாள்தனத்துக்கு நாகநந்தி மேல் பழி போடப் பார்க்கிறாயா? நாகநந்தி ஒருநாளும் தப்பான யோசனை கூறியிருக்க மாட்டார். நமக்கு வந்த ஓலை நாகநந்தியின் ஓலை அல்ல. நாகநந்தியின் ஓலையை இந்தத் திருடன் மகேந்திரன் நடுவழியில் திருடிக் கொண்டுவிட்டான். அது மட்டுமா? வேறு பொய் ஓலை எழுதி இவனே மாறுவேடத்தில் என்னிடம் அதைக் கொண்டு வந்து கொடுத்தான். நமது புத்திசாலிகளான ஒற்றர்களால் இதையெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆஹா...! நாகநந்தி மட்டும் அச்சமயம் நம்முடன் இருந்திருந்தால், இப்படியெல்லாம் நடந்திருக்குமா? இந்தப் பல்லவ நரியின் தந்திரமெல்லாம் அவரிடம் பலித்திருக்குமா...? நீங்கள் இவ்வளவு பேர் இருந்து என்ன பயன்? புத்த பிக்ஷு ஒருவர் இல்லாததனால் நமது பிரயத்தனமெல்லாம் நாசமாகி விட்டது...!

நாகநந்தியைப் பற்றிப் பேச ஆரம்பித்தவுடனே சக்கரவர்த்தியின் உள்ளம் கனிவடைந்து, பேச்சும் கொஞ்சம் நயமாக வந்தது. இதுதான் சமயம் என்று வாதாபி சேனாதிபதி, ''பிரபு! போனது போயிற்று! இப்போது நமது சைனியத்தை வாதாபிக்குப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். நாள் ஆக ஆக, நாம் திரும்பிப் போவது கடினமாகிவிடும்...'' என்று கூறி வந்த போது, புலிகேசி, இடிமுழக்கம் போன்ற குரலில், ''சேனாதிபதி! என்ன சொன்னீர்? திரும்பிப் போகிறதா?'' என்று கர்ஜனை செய்தார். மறுபடியும், ''தளபதிகளே! கேளுங்கள்! நாகநந்தியடிகள் இந்தக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே பல்லவனுடைய சிறைக்கூடத்தில் அடைபட்டுக் கிடக்கிறார். இளம்பிள்ளைப் பிராயத்தில் பெற்ற தாயைப் போல் என்னை எடுத்து வளர்த்துக் காப்பாற்றியவர்; என் உயிரைக் காப்பதற்காகத் தம் உயிரைப் பல தடவை பலி கொடுக்கத் துணிந்தவர்; வாதாபிச் சிம்மாசனத்தில் என்னை ஏற்றி வைத்தவர்; உத்தராபதத்தின் மகா சக்கரவர்த்தி ஹர்ஷவர்த்தனரை என்னிடம் சமாதானம் கோரித் தூது அனுப்பச் செய்தவர்; - அத்தகைய மகாபுத்திமான் இந்தப் பல்லவ நரியின்

வளையிலே அடைபட்டுக் கிடக்கிறார்; அவரை அப்படியே விட்டு விட்டு நாம் ஊருக்குத் திரும்பிப் போக வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஒருநாளும் இல்லை. படைத் தலைவர்களே! காஞ்சிக் கோட்டையைத் தாக்கும்படி உடனே நமது வீரப் படைகளுக்குக் கட்டளையிடுங்கள். காஞ்சியைப் பிடித்து, மகேந்திர பல்லவனுடைய மாளிகையைச் சுட்டெரித்து, மகேந்திரனுடைய தலையை மொட்டையடித்து நமது தேர்க் காலில் கட்டிக் கொண்டு வாதாபிக்குத் திரும்பிப் போவோம். நாகநந்தியடிகளைச் சிறை மீட்டு அவரை நமது பட்டத்து யானையின் மீது வைத்து அழைத்துப் போவோம்! உடனே புறப்படுங்கள்!'' என்று கூறி நிறுத்தினார். சபையில் சற்று நேரம் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

“இது என்ன மௌனம்? ஏன் பேசாதிருக்கிறீர்கள்? பல்லவ நாட்டுக் கற்சிலைகளைப் பார்த்துவிட்டு நீங்களும் கற்சிலையாகப் போய் விட்டீர்களா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

அதன் பேரில், தளபதிகள் ஒவ்வொருவராகத் தம் அபிப்பிராயங்களைச் சொல்லலானார்கள்.

யானைப் படைத் தலைவர், யானைகள் எல்லாம் உணவின்றி மெலிந்து விட்டன என்றும், அவற்றின் வெறி அதிகமாகி வருகிறதென்றும், சிலநாள் போனால் யானைகள் கட்டுமீறிக் கிளம்பி நமது வீரர்களையே அழிக்க ஆரம்பித்து விடுமென்றும் கூறினார்.

காலாட் படைத் தலைவர், காஞ்சிக் கோட்டையைத் தாக்கும்படி வீரர்களை ஏவுதல் இயலாத காரியம் என்றும், அவர்கள் ஏற்கனவே சோர்வும், அதிருப்தியும் கொண்டு ஊருக்குத் திரும்பிப் போகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

பண்டகசாலை அதிபதி, இன்னும் சில நாள் போனால் எல்லாரும் பட்டினியினாலேயே செத்துப் போக நேரிடுமென்று கூறினார்.

ஆயுதசாலை அதிபதி, கோட்டையைத் தாக்குவதற்கு வேண்டிய ஆயுதங்கள் இல்லையென்றும், கொண்டு வந்தவையெல்லாம் முன் தாக்குதல்களில் நஷ்டமாகிவிட்டன என்றும் சொன்னார்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கப் புலிகேசிக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆயினும் அவ்வளவு பேரும் சேர்ந்து சாத்தியமில்லையென்று சொல்லும்போது அந்த ஒரு முகமான அபிப்பிராயத்துக்கு மாறாகக் கோட்டையைத் தாக்கத்தான் வேண்டுமென்று சொல்லப் புலிகேசிக்குத் துணிச்சல் வரவில்லை.

“ஆஹா! உங்களை நம்பி நான் இந்தப் படையெடுப்பை ஆரம்பித்தேனே!'' என்று வெறுப்புடன் பேசிவிட்டு, ''இருக்கட்டும், எல்லாரும் போய்த் தொலையுங்கள். இன்றிரவு யோசித்து நாளைக்கு முடிவு சொல்லுகிறேன்!'' என்றார்.

இருபத்து இரண்டாம் அத்தியாயம்

புலிகேசி ஆக்ஞை

அன்றிரவு மட்டுமல்ல; மறுநாளும் அதற்கு மறுநாளும் கூடப் புலிகேசி அவ்விடத்திலேயே இருந்து யோசனை செய்தார். அங்கிருந்து தெற்கே காத தூரத்தில் தெரிந்த காஞ்சிமா நகரின் கோபுரங்களையும் ஸ்தூபிகளையும் பார்க்கப் பார்க்க அவருடைய கோபம் கொந்தளித்துப் பொங்கிற்று. அந்நகரின் பாதாள காராக்கிருகம் ஒன்றில்


நாகநந்தி அடிகள் சிறைப்பட்டுக் கிடக்கிறார் என்பதை நினைத்தபோது அவருடைய கோபத் தீயில் எண்ணெய் ஊற்றுவது போலிருந்தது. மகேந்திர பல்லவன் பேரில் எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்னும் எண்ணம் நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ந்து சீக்கிரத்தில் வானத்தையும் பூமியையும் அளாவி நின்றது.

இரண்டு தினங்கள் இரவு பகலாக யோசனை செய்து, கடைசியில் வாதாபிச் சக்கரவர்த்தி சில முடி[illegible]நக்கு வந்தார். தமது தளபதிகளையு[illegible] பிரதானிகளையும் அழைத்து அம் முடிவுகளை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

அந்த முடிவுகள் இவைதான்:

சக்கரவர்த்தியும் முக்கிய தளபதிகளும் சைனியத்தில் பெரும் பகுதியுடன் வாதாபிக்கு உடனே புறப்பட வேண்டியது.

சைனியத்தில் நல்ல தேகக்கட்டு வாய்ந்த வீரர்களாக ஐம்பதினாயிரம் பேரைப் பின்னால் நிறுத்த வேண்டியது. அவர்கள் தனித் தனிக் கூட்டமாகப் பிரிந்து காஞ்சி நகரைச் சுற்றிலும் நாலு காத தூரம் வரை உள்ள கிராமங்கள், பட்டணங்கள் எல்லாம் சூறையாடிக் கொளுத்தி அழித்து விட வேண்டியது. அந்தந்த கிராமங்களிலுள்ள யௌவன ஸ்திரீகளை எல்லாம் சிறைப் பிடித்துக் கொண்டு, வாலிபர்களை எல்லாம் கொன்று, வயதானவர்களை எல்லாம் அங்கஹீனம் செய்து, இன்னும் என்னென்ன விதமாகவெல்லாம் பழி வாங்கலாமோ அவ்விதமெல்லாம் செய்ய வேண்டியது. முக்கியமாக, சிற்பங்கள் - சிற்ப மண்டபங்கள் முதலியவற்றைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம்





இடித்துத் தள்ள வேண்டியது. சிற்பிகளைக் கண்டால் ஒரு காலும் ஒரு கையும் வெட்டிப் போட்டுவிட வேண்டியது.

இப்படிப்பட்ட கொடூர பயங்கரமான கட்டளைகளைப் போட்டு அவற்றை நிறைவேற்றுவதற்குத் தக்க பாத்திரங்களையும் நியமித்து ஏவி விட்டு, வாதாபிச் சக்கரவர்த்தி தமது சைனியத்தின் பெரும்பகுதியுடன் பிரயாணமானார்.

மேற்கூறிய கொடூர ஆக்ஞையை நிறைவேற்றுவதற்காகக் காஞ்சியைச் சுற்றிக்கொண்டிருந்த வாதாபி வீரர் கூட்டம் ஒன்றைத்தான் ஆயனரும் சிவகாமியும் காட்டு வழியில் சந்தித்தார்கள்.

வராகக் கொடியைப் பார்த்து வாதாபி வீரர்கள் என்று தெரிந்துகொண்டதும் சிவகாமிக்குத் தேகமெல்லாம் நடுங்கிற்று. உள்ளம் பதைத்தது. எதிர்ப்பட்ட வாதாபி வீரர்கள் கிட்டத்தட்ட நூறு பேர்தான் என்றாலும், சிவகாமியின் கண்களுக்குப் பதினாயிரம் பேராக அவர்கள் காட்சியளித்தார்கள்.

ஆனால், ஆயனருக்கோ, அம்மாதிரி அச்ச உணர்ச்சி சிறிதும் ஏற்படவில்லை. அவருக்கு உற்சாகமே ஏற்பட்டு விட்டதாக முகமலர்ச்சியிலிருந்து தோன்றியது. முன்னால் நின்ற வீரனைப் பார்த்து, "ஐயா, நீங்கள் வாதாபி வீரர்கள்தானே? உங்கள் மகாராஜா எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். அந்த வீரனுடைய முக பாவத்தைப் பார்த்ததும் தமிழ் பாஷை அவர்களுக்குத் தெரிந்திராது என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு அதே விஷயத்தைப் பிராகிருத மொழியில் கேட்டார். அந்த வாதாபி வீரனுக்கு அதுவும் விளங்காமல் அவன் பின்னால் வந்த படைத் தலைவனைத் திரும்பிப் பார்த்தான். இதற்குள் குதிரை மேல் வந்து கொண்டிருந்த படைத்தலைவன் முன்புறத்துக்கு வந்து சேர்ந்தான். ஆயனரையும் சிவகாமியையும் உற்றுப் பார்த்ததும், அவன் "ஓஹோ!" என்ற ஒலியால் தனது வியப்பைத் தெரிவித்தான்.

ஏனெனில், புலிகேசியுடன் காஞ்சி நகருக்குள் வந்து, பல்லவ சக்கரவர்த்தியின் சபையில் சிவகாமியின் நடனத்தைப் பார்த்தவர்களிலே இவனும் ஒருவன். எனவே, அவர்களை அடையாளம் தெரிந்துகொண்டதும் அவனுக்கு வியப்பும் குதூகலமும் உண்டாயின. இன்னும் அவர்கள் அருகில் குதிரையைச் செலுத்திக்கொண்டு வந்து அவர்களை விழித்துப் பார்த்துவிட்டு ஆயனரை நோக்கி, "என்ன கேட்கிறீர்?" என்றான். ஆயனர் உற்சாகத்துடன், "ஐயா, உங்கள் சக்கரவர்த்தி எங்கே இருக்கிறார்? அவரை நான் பார்க்க வேண்டும்" என்றார். தளபதி சசாங்கனின் புருவங்கள் நெரிந்தன. முகத்தில் வேடிக்கைப் புன்னகையுடன், "வாதாபிச் சக்கரவர்த்தியை நீர் எதற்காகப் பார்க்க வேண்டும்? அவரிடம் உமக்கு என்ன காரியம்?" என்று கேட்டான்.

"காரியத்தைச் சக்கரவர்த்தியிடம் மாத்திரந்தான் சொல்ல வேண்டும்; அந்தரங்கமான விஷயம்" என்றார் ஆயனர். அதைக் கேட்டு அவ்வீரன் பரிகாசச் சிரிப்புச் சிரிப்பதைப் பார்த்துவிட்டு, ஒரு வேளை விஷயத்தைச் சொல்லாவிட்டால் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் தங்களை அழைத்துப் போக மாட்டார்கள் என்று எண்ணி, "இருந்தாலும், உங்களிடம் சொல்லவே கூடாது என்பதில்லை. அஜந்தா சித்திரங்களின் அழியாத வர்ண இரகசியத்தைப் பற்றி உங்கள் சக்கரவர்த்திக்குத் தெரியுமாமே, அவரிடம் அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் வந்தேன். தயவு செய்து என்னைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போவீர்களா?" என்றார்.

இதைக் கேட்டதும் தளபதி சசாங்கன் முன்னை விடப் பலமாகச் சிரித்தான். பக்கத்தில் நின்ற வீரர்களைப் பார்த்து, "ஏன் நிற்கிறீர்கள்? இவர்களுடைய கண்களைக் கட்டுங்கள்" என்றான்.

ஆயனர் திடுக்கிட்ட குரலில், "கண்களைக் கட்டுவதா? எதற்காக?" என்று வினவினார். அதற்குக் குதிரை மேலிருந்த தளபதி சசாங்கன், "உமக்கு அவசியம் தெரியத்தான் வேண்டுமா? அப்படியா



அருள்வாக்கு

ஒரே தெய்வத்தை இஷ்ட மூர்த்தியாகக் கொண்டு வழிபடுவதே சித்த ஒருமைப்பாட்டுக்கு உதவுவதாகத் தோன்றலாம். இதில் நியாயம் உண்டு. இதனால் இன்னொரு மூர்த்தியைத் தாழ்வாக எண்ணக் கூடாது. தங்கள் இஷ்ட தெய்வத்தையே, பரம்பரையாக வந்த குல தெய்வத்தையே உபாசிக்கலாம். ஆனால் அப்போதும், 'ரூபமற்ற பரமாத்மாவையே நாம் இந்த ரூபத்தில் வழிபடுகிறோம். எனவே இந்த மூர்த்தி பரமாத்மாதான். அதே பரமாத்மா மற்ற ரூபங்களும் எடுத்துக் கொள்ள முடியும்; அதாவது நம் தெய்வமேதான் மற்றவர்கள் வழிபடுகின்ற ஏனைய தெய்வங்களாகவும் உருவம் கொண்டிருக்கிறது' என்ற உணர்ச்சி ஏற்பட வேண்டும். நம் தெய்வமேதான் மற்ற தெய்வங்களாகவும் உள்ளது என்று நினைத்து விட்டால் நமக்கு அந்த மற்ற ரூபங்களில் பிடிப்பு உண்டாகாவிட்டாலும்கூட அவை நம் தெய்வத்தை விடத் தாழ்ந்தது என்ற எண்ணம் வரவே வராது. சமயச் சண்டைகளும் உண்டாகாது. எல்லோரும் ஒரே பரமாத்மாவின் குழந்தைகளாக அன்போடு ஐக்கியப்படுவதற்காக ஏற்பட்ட மதத்தில், தெய்வங்களின் பெயராலேயே சண்டையும், த்வேஷமும் உண்டாகிற நிலை மறைந்து சௌஜன்யமும் சாந்தியும் நிலவும்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

னால் சொல்லுகிறேன். இந்தப் பல்லவ நாட்டிலுள்ள யௌவன ஸ்திரீகளை எல்லாம் சிறை பிடித்துக் கொண்டு வரும்படி வாதாபிச் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அதோடு இந்த ராஜ்யத்தில் உள்ள சிற்பிகளையெல்லாம், ஒரு காலையும், ஒரு கையையும் வெட்டிப் போடும்படி ஆக்ஞாபித்திருக்கிறார். சாதாரண சிற்பிகளுக்கு இந்த ஆக்ஞை. நீரோ சிற்பிகளுக்கெல்லாம் குருவான மகா சிற்பி. ஆகையால், உம்முடைய இரண்டு கால்களையும் இரண்டு கைகளையும் துணித்து விடப் போகிறேன். அதை இந்தப் பெண் பார்க்க வேண்டாமென்றுதான் கண்ணைக் கட்டச் சொன்னேன்!" என்றான்.

அம்பினால் அடிபட்ட குயிலின் கடைசி மரணக் குரலைப் போல வேதனை ததும்பிய ஒரு குரல் 'கீச்' என்று கேட்டது. சிவகாமி தரையில் விழுந்து உயிரற்ற சவம் போலக் கிடந்தாள்.


சிவகாமிக்கு மறுபடியும் தன்னுணர்வு வந்தபோது தன் தலை இன்னும் சுழன்று கொண்டிருப்பதையும், தன் கால்கள் நடந்து கொண்டிருப்பதையும் இரு பக்கத்திலும் இருவர் தன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நடத்தி வருவதையும் கண்டாள்.

சிறிது சிறிதாக அவளுக்குப் பிரக்ஞை வந்து சற்று முன் நடந்த சம்பவங்களும் நினைவுக்கு வந்தன. பக்கத்தில் தன் தந்தை இல்லை என்பதை உணர்ந்தபோது அவளுடைய வாழ்நாளில் இதுவரை அனுபவித்திராத இதய வேதனை உண்டாயிற்று. பிரமை பிடித்த நிலையில் பக்கத்தில் நின்ற வீரர்களால் உந்தப்பட்டு இன்னும் சில அடி தூரம் நடந்து சென்றபோது, அருகில் அடர்ந்த காட்டுக்குள்ளிருந்து திடீரென்று ஓர் உருவம் வெளிப்பட்டதைக் கண்டாள். பார்த்த கணத்திலேயே அந்த உருவம் நாகநந்தி அடிகளின் உருவந்தான் என்பதும் தெரிந்துவிட்டது. உடனே ஆவேசம் வந்தவள் போலத் தன்னைப் பற்றியிருந்த வீரர்களின் கைகளிலிருந்து திமிறிக் கொண்டு விடுபட்டு நாகநந்தி அடிகளின் முன்னால் சிவகாமி பாய்ந்து சென்றாள். அவருடைய காலடியில் விழுந்து நமஸ்கரித்து, "சுவாமி! தாங்கள்தான் கதி! காப்பாற்ற வேண்டும்!" என்று கதறினாள்.

(தொடரும்)

காதில் விழுந்தவை!

கருணாநிதியைச் சந்திக்காமல் பெர்னான்டஸ் தில்லி சென்று விட்டது குறித்துப் பலவிதமான ஊகங்கள். அதிலும், சமீபத்தில் ஜெயலலிதாவைச் சந்தித்துவிட்டு, கலைஞரைச் சந்திக்காததால் விஷயம் வம்பாகி விட்டது. தி.மு.க.வைக் கை கழுவி விடும் பா.ஜ.க.வின் செயல்திட்டத்தில் என்.டி.ஏ. தலைவர் பெர்னான்டஸ் ஆதரவும் பெறப்பட்டுவிட்டதோ என்ற கேள்வி எழுந்திருக்கிறது. "அப்படியெல்லாம் முடிச்சுப் போட்டுப் பார்க்கக் கூடாது. கோட்டையில் ஜெயலலிதாவைச் சந்தித்துவிட்டு, நேராக அப்போலோவுக்கு வந்து கலைஞரைச் சந்தித்து, மாறன் உடல்நிலை பற்றி விசாரிப்பதாகத் திட்டம். ஆனால், இடையில் தேவகி ஆஸ்பத்திரிக்கு நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றுவிட்டதால், அப்போலோ வரத் தாமதம் ஆகிவிட்டது. வயதான காரணத்தால் நேரத்துக்குச் சரியாகச் சாப்பிடும் கலைஞர், பசி பொறுக்க முடியாமல் பெர்னான்டஸ் வருவதற்கு முன் போய் விட்டார். ஆனாலும், செல்போனில் கலைஞரிடம் ஐந்து நிமிடம் பேசினார். அதே போல், கடந்த முறை வேலூர் சென்று வரும் போது எதிர்பாராமல் வழியில் ஜயேந்திரரைச் சந்தித்ததால் பயணத் திட்டம் மாற்றப்பட்டு கலைஞர், ஜெயலலிதா இருவரையும் சந்திக்காமல் போய்விட்டார்" என்றார் பெர்னான்டஸ் நண்பர் ஒருவர்.



• மனோ

சென்னை மாநகராட்சியில் ஒன்றுபட்ட காங்கிரஸுக்கு அறை ஒதுக்காமல், லெட்டர் கொடுத்தும் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்களாம், கமிஷனரும் - துணைமேயரும். "த.மா.க.வுக்குத் தலைவராக இருந்த வெற்றிவேல், தமக்கு ஒதுக்கப்பட்ட அறையை காங்கிரஸுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவர் ஆளும் கட்சியில் சேர்ந்துவிட்டதால் பிளான் அங்கீகாரக் கமிட்டித் தலைவர் என்ற அந்தஸ்தில் காங்கிரஸுக்கு வர வேண்டிய அறையை கபளீகரம் செய்துவிட்டார்" என்று குற்றம் சாட்டுகிறார் காங்கிரஸ் அணித் தலைவர் மனோ. "நாங்கள் ரிப்பன் கட்டடத்தில் உட்கார இடம் கொடுத்தால் அதிகாரிகளின் துணையோடு ஊழல்களை அம்பலப்படுத்துவோம்" என்று பயப்படுகிறார்கள். உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்னர் சாலை போடுவதற்காக 13 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டதில் பயங்கர கோல்மால். பின்னர், டெண்டர் நடவடிக்கைகள் கைவிடப்பட்டு, துணைக் கமிஷனர் அபூர்வா தலைமையில் விசாரிக்க, கமிட்டி போடப்பட்டது. அவர் விசாரித்து அறிக்கை கொடுத்து 60 நாட்களுக்குமேல் ஆகிறது. ஒரு நடவடிக்கையும் காணும்" என்கிறார் மனோ. டெண்டர்கள் முறைப்படி பெறப்பட்டு வேலை நடத்திருக்குமானால், இந்த மழைக்காலத்தில் சாலைகள் அவ்வளவு சேதம் அடைந்திருக்காதாம்.



பத்து கோடி ரூபாய் பங்களாக்கள் வெறிச்-!

அடையாறை ஒட்டி (நதிக் கரையை ஊடுருவி) முப்பது பங்களாக்கள் பொதுப் பணித்துறையால் நீதிபதிகளுக்காகக் கட்டப்பட்டன. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திட்டம் போட்டுக் கட்டப்பட்டவை இவை. ஆனால் இந்த ஒதுக்கீடுகளைப் பெற்ற நீதிபதிகள், பங்களாக்கள் தங்கள் உயர் தகுதிக்கு ஏற்ப இல்லை என்று குடியேற மறுத்துவிட்டார்கள். விளைவு, பத்துகோடி ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட பங்களாக்களில் சிலதைத் தவிர மற்றவை வெறிச்சோடிக் கிடக்கின்றன. இந்த நிலையில் ஐ.ஏ.எஸ். அதிகார வர்க்கம் அந்த வீடுகளைத் தங்களுக்கு ஒதுக்கிக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறதாம்.

— சஞ்சயன்

படங்கள் : ராஜன்

காங்கிரஸ் கதை!

பா.ஜ.க பொதுச்செயலாளர்களில் ஒருவரான இல. கணேசன் ஏகப்பட்ட குட்டிக்கதைகளை அவிழ்த்து விடுபவர். ஒரு கதை கேட்டோம். காங்கிரஸ் கதை சொன்னார்.

ஓர் ஊரில் இரண்டு தலை, ஓர் உடல் கொண்ட விநோதமான பறவை இருந்தது. பிரச்னை ஏதுமில்லாமல் உண்டு, உறங்கி, பறந்து, திரிந்து, சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஒருநாள் ஒரு பழத்தைப் பார்த்தது அந்தப் பறவை. "நான்தான் முதலில் பார்த்தேன்; எனவே அந்தப் பழத்தை நான்தான் சாப்பிடுவேன்'' என்றது ஒரு தலை. "யார் முதலில் பழத்தைப் பார்த்தது என்பதே பிரச்னை இல்லை. பழத்தை நான்தான் சாப்பிடுவேன்" என்று சொன்னது இரண்டாவது தலை.

எந்தத் தலை, பழத்தைச் சாப்பிட்டாலும் அது ஒரே உடம்புக்குத்தான் போகிறது என்பதை மறந்து, இரண்டு தலைகளும் கடுமையாகச் சண்டையிட்டன. கடைசியில், ஒரு தலை பழத்தைச் சாப்பிட்டது. இன்னொரு தலைக்குப் பயங்கர கோபம்.

காலம் ஓடியது. அன்று, பழத்தைத் தின்ற தலை, சண்டையை மறந்தே போய்விட்டது. ஆனால் ஏமாற்றம் அடைந்த தலை, எப்படியும் பழி வாங்கியே தீருவது என்ற

'சபாஷ் என்றார் பாரதிதாசன்!

ஊரறிந்த அரசியல் வாதியான காங்கிரஸ் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் ஒரு கவிஞர்.

''ஊரறிந்த முதுகுளத்தூர் ஜாதிச் சண்டை
உண்மை நிலை நானிங்கு உரைப்பேன் நன்கு,
யாருக்கும் பகைவன் அல்லன், ஆனால்
யாருக்கும் அஞ்சுபவன் அல்லன் நானே.''

முதுகுளத்தூர் ஜாதி மோதல் பற்றிய கவிதையை இப்படி நான் துவக்கியதும், கவியரங்கத்துக்குத் தலைமை வகித்துக் கொண்டிருந்த பாரதிதாசன் 'சபாஷ்' மேலே போ'' என்றார் உற்சாகமாக. முதுகுளத்தூர் பக்கமுள்ள காமாட்சிபுரம்தான் என் கிராமம். ஜாதிச் சண்டையின் முழுப் பரிமாணமும் எனக்குத் தெரியுமாதலால், அதை அப்படியே என் கவிதையில் கொண்டு வந்தேன். ஒரே



எண்ணத்துடன் காத்திருந்தது.

ஒருநாள், பழி வாங்கத் துடித்த தலை ஒரு விஷக்கனியைப் பார்த்தது. பழி வாங்க, இது ஒரு நல்ல தருணம் என்று முடிவு செய்து, அந்தக் கனியைப் பறித்து, இன்னொரு தலையிடம் கொடுத்து, இது மிகவும் சுவையான பழம்! நான் நிறையத் தின்று ருசித்திருக்கிறேன். உனக்காக இதோ கொடுக்கிறேன். நீயும் சாப்பிடு'' என்றது.

'விஷக்கனி' என்று அறியாமலேயே, அந்தத் தலை, பழத்தைத் தின்ன, அடுத்த சில நிமிடங்களில் அந்த இரண்டு தலை கொண்ட விநோதப் பறவை இறந்துவிட்டது. இது ஒரு பஞ்ச தந்திரக் கதை.

ஒரு கட்சிக்குத் தலைவர், செயல் தலைவர் என இரண்டு தலை(வர்)கள் இருந்தால், பாதிப்பு கட்சிக்குத்தான் என்பதுதான் இந்தக் குட்டிக் கதை சொல்லும் நீதி.

- அடடா!



பாராட்டு மழைதான்'' என்று தமது கல்லூரி நினைவுகளில் மூழ்கி முத்தெடுத்துச் சொன்னார் கவிஞர் சோ. பாலகிருஷ்ணன். பரபரப்பு காட்டாமல், அதேசமயம் அழுத்தம் திருத்தமாக அரசியல் ஏணியில் ஏறிச் சொல்லும் சோ.பா.வுக்கு, மற்றொரு முகம் இருக்கிறது. அது கவிஞர் முகம்.

''கீழக்கரை ஹமீதியா பள்ளியில் எட்டாவது வரை படிக்கும் போதும் சரி, அதன் பிறகு ராமநாதபுரத்தில் அப்துல் கலாம் படித்த ஸ்வார்ட்ஸ் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த போதும் சரி எனக்கு தமிழாசிரியர்களால் அடையாளம் காட்டப்பட்டு என்னைப் பிடித்துக் கொண்டார் பாரதியார். அவருடைய பாடல்களை மனப்பாடம் செய்து போட்டிகளில் பரிசுகள் வாங்குவது எனக்கு விருப்பமாக அமைந்துவிட்ட ஒன்று. அதன் பிறகு காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இண்டர் சேர்ந்தபோது, அங்கு தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் வ.சுப. மாணிக்கம், கலைக் கழகம் என்ற ஓர் அமைப்பை நிறுவி, மாணவர்களைப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்று உற்சாகப்படுத்தி வந்தார். அதன் காரணமாக, கவிதை எழுதுவது என்பது என் மனதுக்குப் பிடித்த விஷயமாக மாறிவிட்டது. பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோர் தலைமையில் நடந்த பல கவியரங்கங்களில் கலந்து கொண்டேன். இது தவிர, கண்ணதாசனின் 'தென்றல்' பத்திரிகை நடத்திய வெண்பாப் போட்டியிலும் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்றிருக்கிறேன்'' என்கிறார் சோ.பா. சோ.பா.வுக்குப் பிடித்த சம காலக் கவிஞர் வைரமுத்து.

மிகச் சமீபத்தில் சோ.பா எழுதிய கவிதை ஈ.வி.கே.எஸ். இளங்கோவனைப் பற்றியது. விரைவில் வர இருக்கும் இளங்கோவனின் பிறந்த நாள் மலரில் வெளிவர இருக்கிறதாம்.



நீச்சல் சாம்பியன்!

''நீச்சல் குளத்தில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சுலபமாக நீந்தி விடலாம். ஆனால், கடலில் நீந்துவது ரொம்ப கஷ்டம்'' என்கிறார் தமிழக சட்ட அமைச்சர் டி. ஜெயகுமார்.

மீனவக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால், ஏழெட்டு வயதிலேயே வங்கக் கடலில் விழுந்து, எழுந்து, நீச்சல் கற்றுக் கொண்டு விட்டார். ''அந்த வயதில் கடலில் நீந்தாத நாளே கிடையாது'. நண்பர்களுடன், போட்டி போட்டுக் கொண்டு நீந்துவோம். ஒரு தடவை பழவேற்காடு பகுதியில் கடலில் உள்ளே வெகு தூரம் கட்டு மரத்தில் போய்விட்டோம். அலைகள் இல்லாத அமைதியான கடல் பகுதி. அங்கே மோட்டார் போட் விரைய, அதிலிருந்து கட்டிய கயிற்றைப் பிடித்

வாசனை...

டி.வி தொகுப்பாளர், கேம் ஷோ நடத்துபவர் என்றெல்லாம் அறியப்படும் ஜேம்ஸ் வசந்தன், ஆரம்பத்தில் கொடைக்கானல் பள்ளிக்கூடத்தில் இசை ஆசிரியர். ''இசையமைப்பாளர் ஆகணும் என்பதுதான் என் லட்சியம். இளம் வயது முதலே, சர்ச் சேர்ந்திசைக் குழுவில் பாடிய அனுபவம் உண்டு. எம்.ஏ ஆங்கில இலக்கியம் படித்த நான் இந்தியன் மியூசிக்கில் பி.ஏ படித்திருக்கிறேன். பியானோ வாசிக்கக் கற்றுக் கொண்டு, லண்டன் திரினிடி இசைக்கல்லூரியில் பாஸ் பண்ணியிருக்கிறேன். என் கனவு வரும் பொங்கல் சீசனில் நனவாகப் போகிறது'' என்று சந்தோஷமாய்க் கூறுகிறார் ஜேம்ஸ் வசந்தன்.

'வாசனை... வாசனை...' என்ற தலைப்பில் இவர் இசையமைத்து, ஓர் இசை ஆல்பம் ஒன்று வெளியாகப் போகிறது. ''துளியும் சினிமா வாசனையில்லாமல் உருவாக்கப்பட்ட ஆல்பம் இது. மியூஸிக் ஆல்பம் என்றாலே, தற்கால சினிமா பாணியில் ஆங்கில வார்த்தைகளை அள்ளித் தெளித்து, எழுதுவது என்கிற எழுதப்படாத சட்டத்தை

துக் கொண்டு, நீர்ப்பரப்பில் பின் தொடர்வது, எங்களுக்கு ரொம்பப் பிடித்த விளையாட்டு.

இன்னொன்று, ரூபாய் நாணயத்தைக் கடலுக்குள் போட்டுவிட்டு, அது தரையைத் தொடுவதற்குள், தண்ணீரில் மூழ்கி, அதைக் கைப்பற்றி, எடுத்துக்கொண்டு வருவது.

இந்த மாதிரி விளையாட்டுகளுக்கு 'தம்' கட்டும் திறமையும், உடல் வலுவும் ரொம்ப அவசியம். நாங்கள் அன்று ரொம்ப நேரம் கடலில் விளையாடினோம்.

திரும்பும்போது, பாதி வழியில், 'நான் நீந்தியே கரை சேர்ந்து விடுவேன்' என்று சொல்லி, கடலில் குதித்துவிட்டேன். மோட்டார் போட் கண்ணுக் கெட்டாததூரம் போகிறவரை காத்திருந்து, கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தேன். சில நூறு அடிகள்கூட கடந்திருக்க மாட்டேன். கை கால்கள் ரொம்ப சோர்ந்து போய், நீந்தவே முடியவில்லை. ரொம்பக் கஷ்டப்பட்டு, கரையை நோக்கி நீந்தினேன்.


ஒரு கட்டத்தில், படகிலிருந்து குதித்தது, தப்பு என்ற பயம் பிடித்துக் கொண்டது. பயத்தில் கையும், காலும் அசைய மறுத்தன.

'நம் கதி அதோ கதிதான்' என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அவ்வளவுதான். கண்ணை மூடிக் கொண்டு அசையாமல் கிடந்தேன்.

சிறிது நேரத்தில் பெரிய அலை ஒன்று என்னை மேலே தூக்கிக் கொண்டு போவதை உணர முடிந்தது. மேலும் கீழுமாய் அலைக் கழிக்கப்பட்டேன். உடம்பில் ஏதோ மோதினாற் போல இருக்கவே கண் திறந்து பார்த்தேன். கரையோரம் ஒதுங்கியிருந்தேன். ஆயுசுக்கும் மறக்காத அனுபவம் அது.

பச்சையப்பன் கல்லூரியிலும், தியாகராயா கல்லூரியிலும் படித்த நாட்களில் நான் நீச்சல் சாம்பியன்.

வாசன...



உடைத்துப் போட்டுவிட்டு, ஆங்கிலவார்த்தை மருந்துக்குக் கூடப் பயன்படுத்தாமல் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மண் வாசனை இது'' என்று சொல்கிறார் வசந்தன்.

யுக பாரதி ஏழு பாடல்களை எழுத, ஒரு பாடலை சன் டி.வி. சிவசு எழுதியிருக்கிறார். ஐந்து பாடல்கள் பாடியிருப்பவர் சின்னத்திரை பிரபலமான உமா பத்மநாபன். சின்னத் திரைக்கு குட்பை சொல்லிவிட்டு, திருமணமாகி அமெரிக்கா பறந்துவிட்ட ஸ்வர்ணமால்யாவும், ஜேம்ஸ் வசந்தனும் ரெண்டு பாடல்கள் பாடி இருக்கிறார்கள்.

பாடலைக் கேட்டு, ''இத்தனை நாள் உன் திறமையை வீணக்கி விட்டாயே!'' என்று பாராட்டியவர்கள் பலர். எட்டு பாடல்களில் இரண்டை வீடியோவில் படம் பிடித்து, டி.வி சானல்களில் ஒளிபரப்பும் திட்டமும் இருக்கிறதாம்.

'அட! பொங்கலுக்கு புதுவாசனை!

சந்திப்பு:
சந்திரமௌளி, ப்ரியன்
படங்கள்: ராஜன்



டாக்டர் எல்.மகாதேவன்

வேகத்தை அடக்கினா சோகம்தான்!

என்னுடைய தூரத்து உறவினர் வீட்டுக்குப் போயிருந்தேன். தலைசுற்றல், வாந்தி, பித்த ஏப்பம், பசியின்மை, தலை வலி... இப்படி சங்கிலிகளாகக் கோத்து, பெரிய வியாதிப் பட்டியல் வாசித்தார் உறவினரின் மனைவி.

''காலையிலே என்ன சாப்பிட நீங்க?''என்று பொத்தாம் பொதுவாக ஒரு கேள்வி கேட்டு வைத்தேன்.

"டிபன் சாப்பிட நேரமில்லை டாக்டர். நேரா மத்தியானம் சாப்பாடு சாப்பிடறேன். அதுக்கு பதிலா, இரண்டு மூணு தடவை காப்பி குடிப்பேன்" என்றார்.

"காலை ஆகாரம் சாப்பிடாமல் இருக்கிறது தப்பும்மா... அதிலும் இரண்டு மூணு தடவை காப்பி சாப்பிடறது ரொம்ப ஆரோக்கியக்கேடு" என்று சொல்லி முடிக்கவில்லை, அதற்கு பணியாள் காப்பி கொண்டு வந்தார்! காபி தம்ளரைப் பார்த்து எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது. இரண்டரை தம்ளர் காப்பி பிடிக்கும் அளவுக்கு நீண்ட லோட்டா அது!

வழிய வழிய, படு ஸ்ட்ராங்காக இருந்தது காப்பி!

''அம்மா... இந்த 'லோட்டா'வில்தான் இரண்டு மூணு தடவை காப்பியா?'' என்றால், 'ஆமாம்' என்று தலையசைத்தார்.

"உங்களால் காப்பியை நிறுத்த முடியுமா? அட்லீஸ்ட் குறைக்க முடியுமா? 'முடியும்' என்றால் உங்கள் உடல் உபாதைகளும் நிச்சயம் தாமாகவே குறைந்துவிடும்" என்று ஆரம்பித்தேன்.

"காப்பியை விடறது கஷ்டமாச்சே!'' என்று தயங்கி பதில் வந்தது.

"சரி, காப்பிக்கு மாற்றுப் பானம் தருகிறேன். அதைக் குடித்துப் பாருங்கள். நிச்சயம் உங்களுக்குப் பிடிக்கும்'' என்று சொல்லி, 'ஹெர்பல் காபி' தயாரிக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்தேன். இரண்டே மாதங்களில், அந்தப் பெண்மணியின் பிரச்னைகள் தீர்ந்து போய்விட்டன. எடையும் குறைந்து, சுறுசுறுப்பாகவும் காணப்பட்டார். சூடாக கஷாய காபி கொடுத்து நன்றி தெரிவித்தார்.

"காப்பிக்கு அடிக்ட் ஆயிட்டோம் ஸார். விட முடியாதே!" என்று பரிதவிக்கும் கும்பவில் நீங்களும் இருக்கிறீர்களா? ஹெர்பல் காப்பியை முயற்சி செய்து பாருங்களேன்.

ஹெர்பல் காபி

தேவையான பொருட்கள்

அதிமதுரம் - 5 கிராம்
அமுக்கிராங்கிழங்கு - 20 கிராம்
நன்னாரி - 10 கிராம்
தனியா - 20 கிராம்
சீரகம் - 10 கிராம்
சோம்பு - 10 கிராம்
சுக்கு - 5 கிராம்
திப்பிலி - 5 கிராம்
மிளகு - 5 கிராம்
ஓமம் - 5 கிராம்
கிராம்பு - 2 1/2 கிராம்
ஏலக்காய் - 2 1/2 கிராம்

தயாரிக்கும் முறை : எல்லாப் பொருட்களையும் வெயிலில் உலர்த்தி, ரவை போல பொடி செய்து, பெரிய துவாரமுள்ள மர சல்லடையில் சலித்துக் கொள்ளவும். இரும்பு வாணலியை அடுப்பில் வைத்து, மிதமான சூட்டில், பொடியைக் கொட்டி, பொன் வறுவலாக வறுத்துக் கொள்ளவும். சுத்தமான, காற்றுப் புகாத, கண்ணாடி புட்டியில் அடைத்துக் கொள்ளவும்.


காப்பித் தூள் போட்டு, டிகாக்ஷன் தயாரிப்பது போலவே, ஃபில்டரில் தேவையான பொடியைப் போட்டு தளதளவெனக்

கொதிக்கும் நீரை ஊற்றி, டிகாக்ஷன் தயாரிக்கவும்.

இதனுடன் பால், சர்க்கரை, சேர்த்தோ அல்லது பால் சேர்க்காமலோ சூடாகப் பருகலாம்.

கஷாய காப்பியைக் குடிப்பதனால், வயிற்று உபாதைகள் இருக்காது. புஷ்டி உண்டாகும். ஜீரண சக்தி வலுப்பெறும். நல்ல தூக்கம் இருக்கும். மிக முக்கியமாக காப்பிச் செலவு குறைவு.

ஒழுக்கமாக வாழக்கூடிய வழிகள் அனைத்துமே ஆயுர்வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. தர்மம் செய்வது, இறை சிந்தனையோடு வாழ்வது, பொய் பேசாமலிருப்பது, நல்ல காரியங்களில் ஈடுபடுவது, தீய எண்ணங்கள் கொள்ளாமலிருப்பது,



பிரம்மச்சரியம் அனுசரிப்பது... இதற்கெல்லாம் 'சத் விருத்தங்கள்' என்று பெயர். இதெல்லாம் அனுஷ்டான விஷயங்களாக, தர்ம சாஸ்திரம் சொல்கிறது. 'சத்புருஷ விரதம்' என பிரத்யேகமான பிரிவே உள்ளது.

'எவனொருவன் எல்லா உயிரிடத்தும் அன்பு காட்டி, பாத்திரமறிந்து தானதருமம் செய்து, மனதாலும் வாக்கினாலும் செயலாலும் ஒழுக்கமான காரியங்களைச் செய்து, பிறர் துன்பங்களையும் தன்னுடையது போல நினைத்து, மனமுவந்து உதவிகள் செய்கிறானோ, அவன் 'சத்புருஷ விரதம்' செய்த பலனை அடைவதாக' சாஸ்திரம் கூறுகிறது.

நடைமுறை வாழ்க்கையில் ஒருவன் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து, சீரிய செயல்களைச் செய்ய வேண்டுமென்றால் அவன் 'வேகத்தை' அடக்கக் கூடாது. வேகம் என்றால் என்ன?

மலம், சிறுநீர், தாகம், பசி, நித்திரை, வாயு, தும்மல், இருமல், பெருமூச்சு, வாயு, கண்ணீர், வாந்தி, கொட்டாவி, சுக்லம்... போன்ற இயற்கை வேகங்களை, நாமாகவே அடக்கக் கூடாது.

அவ்வாறு அடக்க நேர்ந்தால், உடனடியாக பாதிப்பு எதுவும் தெரியாவிட்டாலும், நாளடைவில் நிறைய நோய்கள் வந்தடையும். 'அபான வாயு'வை அடக்கினால் வயிற்றுவலி, மல மூத்திரங்களை அடக்கினால், உதாவர்த்த நோய், அக்கினி மந்தம், கண், இருதய நோயெல்லாம் வரும்.

சிறுநீரை அடக்குவதும் நல்லதல்ல. மூத்திர கிருச்சரம் வரும். ஏப்பம், தும்மல் அடக்கினால் தலைவலி, கழுத்துவலி போன்றவை ஏற்படும். மலத்தை அடக்குவது பற்பல சிக்கல்களை ஏற்படுத்தும். தலைவலி, ஜலதோஷம், மூச்சுமுட்டு, ஆசனக் கடுப்பு, நெஞ்சுவலி போன்ற நோய்கள் படையெடுக்கும்.

தண்ணீர் தாகம் எடுத்தால், பாட்டிலில் அடைத்து விற்கப்படும் மென்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து, சுத்தமான நீரைக் குடிப்பதே உத்தமம். ஏதோ காரியம் இருப்பது போல, தாகத்தை அடக்கியே பழகிவிட்டால், நாவறட்சி ஏற்பட்டு டீஹைட்ரேஷன் உண்டாகும். தலை சுற்றல், மயக்கம் வரும்.

நித்திரையையும் அடக்கவே கூடாது. தூக்கம் வரும்போது, காலை நீட்டி படுத்துக் கொண்டு விடுவது நல்லது. இரவு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி, விடியற்காலை குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்கப் பழகுவது சிறப்பானது. அப்படிச் செய்யும்போது, அலுவலகத்திலோ, வேறு இடங்களிலோ அசந்தர்ப்பமாகத் தூங்கத் தேவையிருக்காது.

'தூக்கம்' என்பது மனித ஆரோக்கியத்தில் மிக முக்கியமான அம்சம் வகிப்பதால், அடுத்த வாரம் நித்திரை சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொல்கிறேன்.

நீங்கள் கேட்டவை - தராசு

● ஆர். சந்திரசேகர், குளித்தலை.

? சார், சென்னைப் பட்டணம் இப்போது எப்படி இருக்கு...?

! சாலை காண்டிராக்டர்களுக்கும் காண்டிராக்ட் தரும் பல் நிலையில் உள்ளவர்களுக்கும் காமதேனுவாக.

● என். சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். ❐

? மதமாற்றத் தடைச் சட்டத்தை நாத்திகவாதி கருணாநிதி எதிர்க்க என்ன காரணம்...?

! அதை அவர் மதப் பிரச்னையாக அன்றி சமுதாயப் பிரச்னையாகப் பார்ப்பதால்தான். அதனால்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மகளிர் அமைப்பான அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கமும் அதை எதிர்க்கிறது.



* உணர்வும் மொழியும்



* பண்பாடும்...



* ...பாராட்டும்!

● கே. துரைசாமி, முத்தூர்.

? முதலமைச்சராக இருப்பதற்கும் பிரதமராகப் பதவி வகிப்பதற்கும் உள்ள தகுதி வேறுபாடு என்ன...?

! இதற்கு எம்.எல்.ஏவாக இருக்கணும்; அதற்கு எம்.பியாக இருக்கணும். சப்போர்ட் இருக்கணும்; அல்லது விலைக்கு வாங்கத் தெரிஞ்சிருக்கணும்!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? கலைஞர் - வைகோ சந்திப்பில் முக்கியத்துவம் இருக்கும் எனக் கருதுகிறீர்களா...?

! அரசியல் முக்கியத்துவத்தைக் கடந்த பண்பாட்டு முக்கியத்துவம் இப்போதைக்குப் பளிச்சென்று தெரிகிறது; சந்தோஷப்படுவோமே!

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? தீபாவளி படங்களில் எந்தப் படம் முதலிடத்தில் இருக்கிறது...?

! கலெக்ஷன் ரீதியாக, கதாநாயகனுக்கு எதிர்ப்பொருள் கொண்ட படத்துக்கு முதலிடம். ரசனை ரீதியாக... 'சொல்ல மறந்து' விட்டது சார்!

● அ. சங்கரன், பெங்களூர் _ 16.

? அம்மையாராய் இருந்து அன்புச் சகோதரி ஆகி, மீண்டும் அம்மையாராகியிருக்கும் ஜெயலலிதா, மீண்டும் ஒரு முறை டாக்டர் ஐயாவுக்கு அன்புச் சகோதரி ஆகமாட்டார் என உறுதியாகச் சொல்ல முடியுமா...?

! அப்படி ஓர் உறுதிமொழியை நான் தந்தால் இந்திய அரசியல் பற்றிய அரிச்சுவடிகூட அறியாதவனாகிவிடமாட்டேனா!

● மல்லிகை மன்னன், மதுரை _ 17.

? திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயிலை, தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதை வரவேற்கிறீர்களா...?

! திருவண்ணாமலை தொல்பொருள் சின்னம் மட்டுமல்ல; ஆன்மிகத் தலம். அதைக் கையகப்படுத்த, தமிழக அரசையும் மக்களையும் கலந்தாலோசியாமல் எடுத்த முடிவு தவறானது. அதே சமயம், அவர்கள் ஒத்துழைப்புடன் தமிழக அரசு தொல்பொருள் சின்னத்துக்கு அழிவு ஏற்படாமல் காப்பதும் முக்கியம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
என். சங்கரதாஸ்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
என். ஜீவா,
சென்னை – 106.

அம்மையார் மீண்டும் அன்புச் சகோதரி ஆவாரா...?

● எம். செல்வின், காயல்பட்டணம்.

? காமராஜருக்குப் பின் டெல்லியில் அதிக புகழ்பெற்ற தமிழர் என்று யாரைச் சொல்வீர்கள்?

! ராக்கெட் விஞ்ஞானியைத்தான்.

● இரா. திலீப், திருச்சி _ 14.

? ரசிகர்மன்றங்கள் தேவையா...?

! 'வில்லன்' பட கட் அவுட்டுக்கு, புதுச்சேரி அஜித் ரசிகர் மன்றங்கள் 108 புட்டி பீர் அபிஷேகம் செய்ததாக வட்டங்கள் பேசிக் கொண்டன. அது போன்றவை நிச்சயம் தேவையில்லை.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? சமீபத்தில் தராசு கேட்டு ரசித்த இசை எது...?

! தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்த மகிழ்ச்சியில் இரவெல்லாம் ரம்மியமாக ஒலித்துக் கொண்டிருந்த தவளைக் கச்சேரிதான்.

● கே. கணேசன், சென்னை - 5.

? ஆவின் பால் விலை லிட்டருக்கு 50 காசு குறைக்கப்பட்டிருப்பது ஜெ.ஆட்சியின் சாதனைதானே...?

! இந்தியாவிலேயே மிக அதிகமாகப் பால் உற்பத்தி செய்யும் மாநிலங்களுள் நமக்கு இரண்டாவது இடம். மேலும், தனியார் பால் இப்போது கேட்ட நேரத்துக்கு நல்ல தரத்தில் கிடைக்கிறது. அதனால் இன்னும் குறைக்க வேண்டும்.

● என். ஜீவா, சென்னை – 106. ✱

? கவிதை எழுதினாலே நீ யாரையாவது காதலிக்கிறாயா என்கிறார்களே... ஏன்?

! ஏனெனில், காதலைப் போல் கவிதையும் உணர்வு சார்ந்த வெளிப்பாடு. பொன்மணி வைரமுத்துவின் இலக்கணம்:

மனத்தில் ஒரு பொறி தட்டுதல், விழிப்பு, தன்னை மறந்த ஆவேச நிலை, நெகிழ்ச்சி என மனம் பலப்பல உணர்வுகளால் கிளை விடும் நேரங்களில் கவிதை பிறக்கிறது. ஒரு கருத்தை அல்லது சிந்தனையை உணர்வுகளின் மூலம் மொழியில் தேர்ந்த சொற்களால் பதிவு செய்வதே கவிதை. அது பதிவான பிறகே வடிவம் உண்டாகிறது; ஓசை புரிகிறது; உத்தி புலப்படுகிறது. உணர்வின் மூலம் மொழியை ஆளும் கருத்தே கவிதை... ('சங்க இலக்கியத்தில் புதுக் கவிதைக் கூறுகள்' என்னும் நூல்)


காதலும் அப்படித்தானே!



✱ அரிச்சுவடி போதனை!



✱ காமராஜரை அடுத்து...



✱ துணைச் சாதனை!

● வி.எஸ். கோவிந்தன், மதுரை _ 7

? பின்லேடனைப் பிடிப்பதும் வீரப்பனைப் பிடிப்பதும் ஒன்று என்கிறாரே எஸ்.எம். கிருஷ்ணா...?

! ஐய்யோ பாவம்! தமது கையாலாகாத்தனத்துக்கு பின்லேடனைத் துணைக்கு அழைக்க வேண்டிய பரிதாபத்துக்கு உள்ளாகியிருக்கிறார்.

● பொன்விழி, அன்னூர்.

? அத்வானியின் சாதனை என்ன?

! துணைப் பிரதமர் ஆகியிருப்பது!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் சிறுகதை - 12

மாலைப் பத்திரிகைகளின் தலைப்பு 'ஆந்த்ராக்ஸ்' கிருமி போல மக்களைத் தாக்கியது. பத்திரிகைகள் பரபரப்புடன் விற்றுப்போய், ஒன்பது மணியளவில் இரண்டாவது பதிப்பு ரெடியாகி, அவையும் பறந்து போய் விட்டன. பத்திரிகை உலகின் சரித்திரத்திலேயே இப்படி நடப்பது இதுதான் முதல் தடவை என்று பேசிக் கொண்டார்கள்.

காரணம்?


கொங்கு நாட்டுச் சிங்கம், கோவையின் தங்கம் என்று புகழப்படும் முத்து வேலப்பரின் அறிக்கை வெளியாகி இருந்ததுதான்.

யார் இந்த முத்து வேலப்பர்?

இன்று 90 வயதாகும் முத்து வேலப்பர் அரசியலில் உச்ச பதவிகளை வகித்தவர். இந்தியாவின் நிதி மந்திரியாகி, ஜனாதிபதியாகிப் பின்னர் ஐக்கிய நாட்டுச் சபையின் தலைவரா இக் கோலாச்சியவர், பழுத்த தேசியவாதி. கிளிண்டன், டோனி ப்ளேர் போன்ற தலைவர்கள் டெல்லி வந்தால்கூட, தொலைபேசியில் தொடர்பு கொண்டு (மரியாதை நிமித்தம்) பேசுமளவு உலக அரங்கில் மதிக்கப்படுபவர்.

என்ன அப்படி அதிரடி அறிக்கை? இதுதான் அந்த அறிக்கை : "காவிரி நீருக்காக மனித கிருஷ்ணாவையோ, குடி நீருக்காக மாநதி கிருஷ்ணாவையோ யாரும் கெஞ்ச வேண்டாம்!

பாலக்காட்டுக் கணவாயினால்தான் கோவை மாவட்டம் மழை பெறுகின்றது. சற்று மேலே போங்கள். கோழிக்கோடு பக்கத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சற்று உடைத்து



விடலாம். வீசும் தென்மேற்குப் பருவக் காற்று, ஈரோடு, சேலம் மாவட்டங்களில் சேர்வராயன் மலை, வசிஷ்டர் குன்று, கொல்லிமலை, ஹொகேனக்கல் மலை போன்றவற்றில் மோதி பவானி, பெண்ணாறு, வெள்ளாறு, மணிமுத்தாறு, நொய்யல் போன்ற ஆறுகளில் நீர் பெருகும். விவரங்கள் பிறகு அறிவிக்கிறேன்."

"பெரிசுக்கு நட்டு கழண்டிடுச்சா?"

"ஏலே ஏப்ரல் 1ம் தேதியா பாருலே!"

"சந்தன வீரப்பன் பகுதி அது. அவனைப் பிடிக்கப் பாக்குறாங்களோ?"

இத்யாதி கமென்ட்ஸ். எங்கும் இதே பேச்சு. ஜெ. வியப்பிலாழ்ந்தார். அவர் பெரிதும் மதித்துப் போற்றும் தலைவர் முத்து வேலப்பர். அவர் இப்படி அறிக்கை விடக் காரணம் இருக்க வேண்டுமே! தாமே தமது செல்போனை அமுக்கினார். முத்து வேலப்பரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஏமாற்றத்துடன் குழம்பினார்.

மு.க.வுக்கோ ஒரே சிரிப்பு. "இன்னாய்யாது. கலக்கிட்டாரு கவுண்டரு. என் கைது விவகாரத்தை விடப் பெரிய சென்சேஷனாக இருக்குதே!"

"சென்னையில் வரலாறு காணாத வெப்பம். வெய்யில், புரிந்ததா?" என்று கிண்டலடித்தார் சோ.

"அமெரிக்காவிலேயே உலக வணிகக் கட்டடத்தை விமானத்தால் தகர்த்த மாதிரி, மேற்குத் தொடர்ச்சி மலையைத் தகர்க்க நினைக்கிறாரோ என்னமோ" என்று கிண்டலடித்தார் யூகி சேது.

கேரளாவில் ஒரே கொந்தளிப்பு. "கேரள மக்கள் என்ன மாங்கா மடையர்களா? கேரள மலையை உடைப்பதாக ஒருவர் அறிக்கை விட என்ன தைரியம் வேண்டும்?"

சோனியா, வாஜ்பாய், அத்வானி, ஜனாதிபதி கலாம் எல்லோருமே அதிர்ந்து போய் முத்து வேலப்பரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தனர். முடியவில்லை.

அன்று இரவே சிஎன்என், பிபிசி எல்லாம் இந்த நம்ப முடியாத அறிக்கையைப் பற்றி

இனித்தான் எழுந்திராய்



விமர்சித்தன.

இரண்டு நாட்கள் குழப்பத்திற்குப் பின்னர், முத்து வேலப்பர் நாட்டின் முக்கியத் தலைவர்கள் அனைவரிடமும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதாகச் செய்தி வந்து, நிருபர்கள் பறந்து போனார்கள்.

"முத்து வேலப்பர் பரபரப்பு அரசியலுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். பழுத்த தேசியவாதி. ஏதோ ஒரு முக்கிய காரணத்திற்காகத் தான் அவர் இப்படி அறிக்கை விட்டிருக்கிறார்" அச்சடித்தாற்போல எல்லாத் தலைவர்களிடமிருந்தும் ஒரே பதில்.

"இது முட்டாள் தனத்தின் உச்சகட்டமான ஒரு திட்டம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?" ஒரு துடிப்பான நிருபர் கேட்டார்.

"ஆமாம். ஆனால் திட்டம் வந்த இடம் புத்திசாலித் தனத்தின் எவரெஸ்ட்" எல்லா

சிம்ப்ருக் சின்னது

அரசியல்வாதிகளிடமும் அதே கேள்விகள், அதே பதில். ஜோதி பாஸு ஒரு படி மேலே போய், "முத்து வேலப்பர் உடைப்பது நல்லது என்றால் உடைக்க வேண்டியதுதான்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னதும், நிருபர்கள் வாயடைத்துப் போனார்கள்.

மறை கழன்ற கேஸ் என்று முதலில் சாடிய பத்திரிகைகள் அர்த்தமில்லாமல் இப்படி அரசியல் பீஷ்மர் சொல்லுவாரா, என்ற ரீதியில் டிராக் மாறி எழுதின.

ஐ.நா. சபையில் பதவி வகித்தவர். அஸ்வான் அணைக்கட்டு போல ஏதோ புரட்சிகரமான திட்டமாக இருக்கலாம் என்ற வாதமும் வலுப்படத் தொடங்கியது.

"முத்து வேலப்பர் எங்கே?" என்ற கேள்விக்கு பதில் தெரியவில்லை. ஸ்காட்லேண்ட் யார்டிலிருந்து வசந்த் - கணேஷ் ரேன்ஜ் அளவு துப்பறிந்தும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதனிடையே சேட்டிலைட் மூலமாகத் தொலைபேசித் தொடர்புகளை ஆராய்ந்து, முத்து வேலப்பர் ஒரு பிரபல நடிகரின் பண்ணை வீட்டிலிருக்கிறார் என்ற செய்தியை சி.என்.என். வெளியிட்டது.

ரஜினியின் பாலவாக்கம் பண்ணை வீட்டிற்குப் பறந்தார்கள் நிருபர்கள். அமைதியாக வரவேற்றார் ரஜினி.

"முத்து வேலப்பர் இங்கே இருக்கிறாரா?" பரபரப்பான குரல்கள்.

"இருந்தார்."

ஏமாற்றமோ ஏமாற்றம்.

"இப்பொழுது எங்கே போயிருக்கிறார்?"

"ரிஷிகேஷுக்கோ, ஹரித்வாருக்கா, ஏன் ஆனைக்கட்டிக்கோ கூடப் போகவில்லை." ரஜினியின் வெள்ளைச் சிரிப்பு.

"வேலப்பரின் இந்தத் திட்டம் உங்களுக்குப் பிடித்ததா?"

"எந்தத் திட்டம்?" - நிதானமான கேள்வி.

'விளையாட இது நேரமா?"

ரஜினி சீரியஸ் ஆனார். "வேலப்பரின் திட்டம் எனக்கு மிகவும் பிடித்தது. உண்மையில் கடந்த 15 நாட்களாக அதைப் பற்றியே தான் விவாதித்துக் கொண்டிருந்தோம்."

"என்ன ஐயா? பைத்தியகாரத்தனமான திட்டம் இல்லையா இது?"

"எனக்குப் பிடித்தது. பதினைந்து நாட்களில் உங்களுக்கும் விளங்கும்."

மாலைப் பத்திரிகைகளில் செய்தி வெளியானவுடன் ரஜினி ரசிகர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். "தலீவா, தலீவா (தலைவா!) நாங்கள் உன் பக்கம்!"

"உளி கொண்டு வரவா உத்தமரே! மலையை உடைக்கிறோம். காற்றுக்கென்ன தடை? கடலென வருகிறோம்!"

தமிழ் நாடே கிளர்ந்து எழுந்து விட்டது போல ஒரு உணர்ச்சி வெள்ளம்.

இதற்கிடையில் ப்ரசாந்த், அஜீத், மாதவன், விக்ரம், சூர்யா, ஷாம் போன்ற இளம் நடிகர்கள், முத்து வேலப்பரின் அறிக்கையை ஆதரித்துக் கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அவ்வளவுதான். தமிழ்நாடே தலைகீழ் ஆயிற்று. "தங்கத் தலைவரே! கடப்பாறை வேண்டாம், கல் உளியும் வேண்டாம். எங்கள் கரங்கள் போதும் மலை உடைக்க!"

"வீணர்கள் பேசிக் கொண்டிருப்பர். வீரர்கள் செய்து முடிப்போம். வேலப்பரே வேல் கொண்டு வரவா? சூரரே சூலம் கொண்டு வரவா? ஆணை இடு அறிஞரே! அணை உடைந்ததுபோல கிளம்பி வருகிறோம். சேதி கொடு செம்மலே! சேனை திரண்டு வருகிறோம்."

முழக்கங்கள், சூளுரைகள், ரத்தத்தில் கையொப்பமிட்ட அறிக்கைகள், ஆவேசப் பேச்சுகள்.

முதலில் ஈதென்ன பைத்தியகாரத்தனம் என்று ஒதுங்கி இருந்த பத்திரிகைகள் எல்லாம், காற்று வீசும் திசையை அறிந்து உற்சாகமாகப் பங்கு பெற ஆரம்பித்தன.

நியூசிலாந்தில் ஷூட்டிங்கிலிருந்த கமல் ஆதரித்து அறிக்கை அனுப்ப, இன்னும் உற்சாகப் பீறிடல்.

இதற்கு நடுவில் விஜய்காந்த் மன்றத்திலிருந்து ஓர் அறிக்கை. முத்து வேலப்பர், சீரணி அரங்கில் மக்களுக்குத் தன் திட்டத்தைப் பற்றி விளக்கம் கொடுக்க இருக்கிறார். கடலெனத்திரண்டு வாரீர்!

அவ்வளவு தான். தமிழ் நாட்டின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் லாரிகளில் மக்கள் கூட்டம். தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் அத்தனையிலும் நேரடி ஒளிபரப்பிற்கு ஏற்பாடுகள் நடந்துவிட்டன. தூர்தர்ஷன் பார்த்தது. தானும் பின் தங்கி இருக்க வேண்டாமென்று, தானும் ஒளிபரப்ப ஆரம்பித்துவிட்டது.

சிவாஜி அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செய்ய வந்த கூட்டத்தையும் மிஞ்சி விட்டது மக்கள் தொகை என்று வர்ணித்தார் மாலன்.

விஜய்காந்தும், ரஜினியும் ஆளுக்கொரு பக்கமாகக் கைத் தாங்கலாக அழைத்து வந்து

"இந்த ஆட்சியில கடைசியா வெளிய அனுப்பப்பட்ட அமைச்சர் நான்தான் என்பதைப் பெருமையோடு கூறிக் கொள் கிறேன்!"

முத்து வேலப்பரை அமர்த்த, ஒரே கை தட்டல். வங்கக் கடல் தோற்று மக்கள் கடல் பெருகியது போல மாயத் தோற்றம்.

முத்து வேலப்பர் பேசத் தொடங்கியதும் பின்ட்ராப் சைலன்ஸ். சிங்கம் கிழமாகிவிட்டிருந்தும், கர்ஜனையின் கம்பீரம் குறையவில்லை.

"என் திட்டம் வெளியானதும் லூசு, பைத்தியம், துக்ளக், தெனாலிராமன், மறை கழன்டு போச்சா பெரிசுக்கு என்றெல்லாம் பேசினீங்க இல்லையா?"

கூட்டத்தில் ஒரே சிரிப்பு.

"ஐயா, இது என்ன திட்டம்?"

"மலையை உடைப்பது சாத்தியமா?"

மௌனம்.

"சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்படாதா? அந்த மலையில் உள்ள ப்ளோரா + பவுனா என்னவாகும்? சிங்கவால் குரங்குகளின் நிலை என்னவாகும்?"

திகைப்பு!

"மேலும் தென் மேற்குப் பருவக் காற்று என்ன மின் விசிறியா? நினைத்த இடத்தில் திருப்பிவிட?"

முத்து வேலப்பர் சற்று நிறுத்திய பின் தொடர்ந்தார்.

"தமிழ் மக்கள் மஹா புத்திசாலிகள். இந்த சந்தேகங்கள் எல்லாமே உங்கள் மனத்தில் எல்லாம் எழுந்தது. உண்மைதானே?"

"ஆமாம், ஆமாம்" என்ற கூக்குரல்கள் எழுந்தன.

"பின் எப்படி ஐயா திடீரென மனத்தை மாற்றிக் கொண்டு, இங்கே கூடியிருக்கிறீர்கள்?"

குழப்பமான முணுமுணுப்புக்கள்.

(டீ.வி. பார்த்துக் கொண்டிருந்த வாஜ்பாய் "வாரே வா" என்றார்.)

"உங்களுக்குப் பிடித்தமான தலைவர்கள், நடிகர்கள் கூறியவுடன், இது ஓர் அற்புதமான திட்டம் என்று உங்களுக்குத் தோன்றிவிட்டது அல்லவா?"

"ஆமாம், ஆமாம்," விசில் சப்தம் கைத் தட்டல் -

"நிறுத்துங்க. மேலே ஐயா சொல்லப் போவதை அமைதியாகக் கேளுங்க" என்று ரஜினி அழுத்தம் திருத்தமாகச் சொன்னவுடன் அமைதி நிலவியது.

"ஆட்டு மந்தைகளா நீங்கள்? சுயபுத்தி இல்லையா? பேத்தல் என்று தெரிந்தும் உங்கள் அபிமான நடிகரோ, தலைவரோ சொன்னவுடன், அற்புதம் அற்புதம் என்று தோன்றி விட்டதா? சுயபுத்தி இல்லையா உங்களுக்கு?"

முத்து வேலப்பர் கர்ஜித்ததும், திகைப்பும் அதிர்ச்சியும் அவமானமும் கலந்த மௌனம் நிலவியது அங்கே.

"இதை நான் முன்னரே எதிர்பார்த்தேன்" என்றார் அத்வானி அருகில் இருந்த வாஜ்பாயிடம். அவர்கள் கண்கள் தொலைகாட்சி திரையைவிட்டு அகலவில்லை.

"ஐயா, அமைதியாகப் பேசுங்கள்" என்று ஆசுவாசப் படுத்தினார் ரஜினி. விஜய்காந்த் சூடான பால் கொடுத்தார். முத்து வேலப்பர் தொடர்ந்தார்.

"இரண்டு மாதங்களுக்கு முன்பு எனக்கு மூன்றாவது ஹார்ட் அட்டாக் வந்த பொழுது எனது வாழ்நாட்கள் எண்ணப்படுகின்றன என்று புரிந்து கொண்டு விட்டேன். வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தேன்.

"அற்புதமான மனைவி. அதி அற்புதமான குடும்பம். பொது வாழ்வில்? ஆஹா பெறுதற்கரிய எத்தனை பதவிகள், பட்டங்கள், மரியாதைகள், யாருமே அடைய முடியாத சிகரங்கள்.

"ஆனால் இந்த நாட்டிற்கு என்னால் என்ன செய்ய முடிந்தது? என் கைகள் கட்டப்பட்டிருந்தன. சட்டதிட்டங்களாலும், அரசியல் சூழ்நிலைகளாலும் பிணைக்கப்பட்டிருந்தேன். என்ன செய்யலாம்? ஏதாவது செய்ய வேண்டும். இன்றைய இளைஞர்கள் வழிகாட்டுதல் சரியாக இல்லாமல் மந்தை ஆடுகளாக இருக்கிறார்கள். அவர்களைத் தட்டி எழுப்ப ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டும் என நினைத்தேன்."

"ஹ" என்ற அதிர்ச்சி ஒலி எழுப்பிய கூட்டம், ஒரு கணத்தில் சுதாரித்துக் கொண்டு கர ஒலி எழுப்பியது. விண்ணை முட்டும் ஒலி எழுந்தது. ரஜினி கைகளைத் தூக்கி அமைதிப் படுத்தினார்.

"உண்மையில் இது ஒரு திட்டமே இல்லை. உங்கள் கவனத்தை என்னிடம் ஈர்க்க நான் பயன்படுத்திய காரட் துண்டு அது. இந்தத் திட்டத்தை நான் மாலைப் பேப்பர்களில் வெளியிட்ட மறுகணம் ரஜினியும், விஜய்காந்





தும் பறந்தடித்துக் கொண்டு என் முன்னே நின்றனர்.

"ஐயா என்ன பைத்தியகாரத்தனம் இது. நடைமுறையில் இவை எல்லாம் சாத்தியமானவையா?" என்று படபடப்புடன் கேட்டனர்.

நான் அமைதிப்படுத்தி, என் நோக்கத்தைச் சொன்னவுடன் ஆனந்தம் அடைந்தனர். உண்மையில் என் உதவிக்கு அரசியல் தலைவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று இருந்தேன். ஆனால் இவர்கள்தாம் 'இன்றைய நிலையில் சினிமா உலகம் தான் அதிக ஈர்ப்பும் சக்தியும் கொண்டது' என்று சொன்னார்கள்."

கைத் தட்டல் வானைப் பிளந்தது.

"ஓர் அரசன் இருந்தானாம். ஆமாம் சாமி போடும் கூட்டத்தை அருகில் வைத்துக் கொண்டு அரசியலை அலங்கோலமாக்கிக் கொண்டு. அவனைத் தட்டி எழுப்பி அவனுக்கு அறிவு புகட்டி நாட்டைக் காக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் ஒரு கெட்டிக்காரன் வந்தானாம். 'அரசே நான் நெய்த ஆடையைப் பாருங்கள். வல்லவருக்கும் நல்லவருக்கும் மட்டுமே தெரியும்' என்று வெறும் கையை வீசினானாம். ஆடை கண்களுக்குத் தெரியவில்லை என்றால், தான் அசடு என்பது வெளியாகுமே என்றஞ்சிய அரசன், 'ஆஹா அற்புதமான உடை' என, சபையோரும் 'ஆஹா என்ன அற்புதமான உடை' என்றார்கள்! அந்த 'அற்புதமான' உடையை 'அணிந்து' அந்த அரசனும் வெளியே வர, கள்ளமில்லாத சிறு குழந்தை ஒன்று. "ஐயையே அரசன் அம்மணமாக வருகிறான்" என்று கை கொட்டிச் சிரிக்க, அரசன் திருந்தினான்.

உங்கள் தலைவர்கள் 'அம்மணமாக்குவது' உங்களைத்தான். புகழ் என்பது போதை. அது அளவு கடந்து அதிகமாகும் பொழுது எடுத்துச் சொல்லுவார் யாருமே இல்லை. காந்தியைப் போல தலைவன் உண்டா? ஆனால் அவனுடைய அரும் பெரும் சிஷ்யப் பிள்ளைகள் ஆமாம் சாமிகள் இல்லை. வேண்டுமென்பதெற்காக சண்டைப் போட்ட செல்லப் பிள்ளை நேரு. 1940களில் பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்து விடு என்று, வாதாடியவர் ராஜாஜி. அஹிம்சையெல்லாம் இங்கு உதவாது என்று சண்டியராகி சமஸ்தானங்களை இணைத்தவர் பட்டேல்.

"தலைவர்கள் முக்கியமானவர்கள். தட்டிக் கேளுங்கள். ஏனென்றால் அவர்களை விட நாடு முக்கியமானது." வேலப்பர் மூச்சு வாங்க நிறுத்தினார். "ஜெய்ஹிந்த்".

கூட்டத்தில் ஆரவாரம்.


ரஜினி மைக்கைப் பிடித்தார். "ஐயா சொன்னதையெல்லாம் போட்டுப் பாருங்கள். அமைதியாகக் கலைந்து செல்லுங்கள். இன்று முதல் நம் வாழ்க்கையில், செயலில், எண்ணத்தில் தூய்மையும் ஒழுங்கும் வரட்டும்." ரஜினியும் விஜய்காந்தும் பெரியவரை நோக்கினார்கள். திருப்தியான புன்னகையோடு அந்தப் பெரியவரின் உயிர் பிரிந்திருந்தது. ●

• வெங்கடசுப்பிரமணியன்

"ஒரு மாநிலத்தில் பட்டினிச் சாவுகள் நடந்தால், அதற்கான பொறுப்பைத் தலைமைச் செயலாளர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கடுமையாக எச்சரித்து ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறது சுப்ரீம் கோர்ட். மாநில தலைமைச் செயலாளரைப் பொறுப்பாக்குவது சரியா? உணவு அமைச்சரையோ அல்லது முதல்வரையோ ஏன் பொறுப்பாக்கவில்லை சுப்ரீம் கோர்ட்?



பட்டினிச் சாவுக்கு யார் பொறுப்பு?



• கே.வி.ராமநாதன்

"ராஜஸ்தான் மாநிலத்தில் பட்டினிச் சாவுகள் நடந்தன. மத்திய அரசின் பல்வேறு நலத் திட்டங்களை மாநில அரசு சரியாகச் செயல்படுத்தாததாலும், வேலைக்கு உணவு என்ற திட்டத்தை, கிராம அளவில் சரியாக அமல்படுத்தாததாலும் நிகழ்ந்த விபரீதம் இது" என்று பொதுநல வழக்கொன்றை ராஜஸ்தான் மக்கள் சிவில் உரிமைக் கழகம் போட்டது. விசாரணையை மேற்கொண்டது சுப்ரீம் கோர்ட். அந்தக் குழு விசாரித்ததில், "வேலைக்கான உணவுத் திட்டம் ராஜஸ்தான் மாநிலத்தில் முறைப்படி அமல்படுத்தப்படவில்லை" என்று தெரிவித்தது. இது தவிர, பொது விநியோகத் திட்டத்துக்கு, மத்திய அரசால் கொடுக்கப்பட்ட அரிசியை, மாநில அரசு டெலிவரி எடுக்கவில்லை என்ற அதிரடித் தகவலும் வெளியானது. இதைத் தொடர்ந்துதான் தலைமை நீதிபதி தலைமையிலான சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் முதல் பாராவில் சொல்லியுள்ள பகீர் கருத்தை வெளியிட்டது.

"இப்போதெல்லாம் நீதிமன்றங்களின் கண்ணோட்டம் மாறி இருக்கிறது. சமீபத்தில் கர்நாடகாவில் கோர்ட் அவமதிப்பு வழக்கொன்றில், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பொறுப்பாக்கி ஜெயிலுக்கு அனுப்பி விட்டது கோர்ட். கீழிருப்பவர் தவறு செய்தால் மேல் அதிகாரிதான் அதற்குப் பொறுப்பு என்று நீதிமன்றங்கள் சொல்லியிருக்கின்றன. எனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அலட்சியமாக ஒதுக்கித் தள்ள முடியாது. இதை ஒரு எச்சரிக்கை மணியாக எடுத்துக் கொண்டு தலைமைச் செயலர்கள் நிர்வாகத்தை முடுக்கி விட வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் கண்டனத்தைச் சந்திக்க நேரிடும்" என்கிறார் தலைமைச் செயலாளர் அந்தஸ்தில் இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஏ.கே. வெங்கடசுப்பிரமணியன்.

"தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களை கோர்ட் பொறுப்பாக்காததற்குக் காரணம் தெரியவில்லை. ஆனால் தலைமைச் செயலாளர், தனக்குக் கீழ் உள்ள அரசு இயந்திரத்தை முடுக்கி விடுவதன் மூலம், திட்டங்களும், ரேஷன் பொருட்களும் அடித்தட்டு மக்களைச் சென்றடைகிறதா என்று பார்க்க முடியும். ஏதேனும் குறைபாடுகள் தென்பட்டால், நிவர்த்தி செய்ய முடியும். எனவே, இதைக் கோர்ட்டின் நல்ல ஆலோசனையாக தலைமைச் செயலாளர்கள் எடுத்துக் கொண்டு, சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும்" என்கிறார் மத்திய அரசு இலாகாக்களில் பணி புரிந்து ஓய்வு பெற்ற கே.வி.ராமநாதன்.

— ஸ்ரீநிவாசன்



இரண்டு

டாக்டர் வஸந்த் செந்தில்

'**வ**யிறு' பற்றி மிக விரிவாக இரண்டு வயிறு சைஸில் வெளிவந்திருக்கிறது இந்தப் புத்தகம் (952 பக்கம்).

டாக்டர் சு.செல்வராசன், நாம் சாப்பிடுகிற உணவு விஷயங்களிலிருந்து, அவர் நிபுணத்துவம் பெற்றிருக்கிற லாப்ராஸ்கோப்பி சிகிச்சை முறை வரை விரிவாக, விளக்கமாக எழுதியிருக்கிறார். புரிய வேண்டும் என்பதற்காகச் சில இடங்களில் நாலாங் கிளாஸ் பையனுக்கு, கிளாஸ் எடுக்கிற விதமாக, சலுகை எடுத்துக் கொண்டு பேசியிருக்கிறார்.


தமிழில் மருத்துவ நூல்கள் எழுதுகிறவர்களுக்கு எப்போதும் ஒரே நோக்கம்தான். புத்தகத்தை யார் படித்தாலும் புரிய வேண்டும். புத்தகத்தில் தெளிவு இருக்க வேண்டுமே தவிர, அதிகப்படி என்பது இருக்கக்கூடாது. இந்தப் புத்தகத்தில் இரண்டும் இருக்கிறது. (தான் ஒரு லாப்ராஸ்கோப்பி நிபுணர் என்பதாலோ என்னவோ புத்தகத்தில் ஓர் அத்தியாயத்தின் தலைப்பை "எல்லாமே செய்யும் என்டாஸ்கோப்பி, புதுமைகள் புரியும் லேப்ராஸ்கோப்பி" என்று வைத்திருக்கிறார்.

தமிழில் மருத்துவ நூல் எழுதுகிற போது ஏற்படுகிற அடுத்த சிக்கல் கலைச் சொற்கள். இந்தப் புத்தகத்தில் முடிந்தவரை எல்லா மருத்துவச் சொல்லுக்கும் தமிழ்ச் சொல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழிலேயே மருத்துவம், படிக்கிற நிலைவரும் என்கிற அம்புலிமாமா கனவு, தமிழில் மருத்துவத்தை எழுதிப்பார்க்கிற எல்லா டாக்டர்களுக்கும் இருக்கிறது. ஆனால் எல்லோரும் ஒன்று

புக் பேங்க்!







அவள் மயில்கண் விசிறி

- பா. சத்தியமோகன்

காதல், கல்யாணத்தில் முடிந்தால் பின்பு குடும்பம், கண்ணீர், உறவு, பிரிவு, இயலாமை, குழந்தைகள், மழை, மரணம் என, சகலத்திலும் காதல் ஊடுருவி நிற்பதை, கவிதைகளாய் வடித்திருக்கிறார் கவிஞர்.

லாவண்யா, டி-18, ஏ.கே.டி.பி. சாலை, வட்டம் 9, நெய்வேலி - 1. விலை ரூ.50.

சீன மொழி - ஓர் அறிமுகம்

- பயணி (ஹாங்காங்கின் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி -ஸ்ரீதரன்)

சீன மொழியைத் தமிழில் எளிமைப்படுத்தும் முயற்சி. சென்று தங்கவும் சுற்றுலாவுக்கும் உதவக் கூடியது.

எஸ்.வைதேகி, 7, அஷ்டலக்ஷ்மி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், ஸ்ரீபெரும்புதூர் - 602 105.

நேர்மை, நியாயம், நிர்தாட்சண்யம்

- மாஜினி (ரா. ரங்கசாமி)

'**பு**ரட்சி எழுத்தாளர்' என்று கூறப்படும் பத்திரிகையாளர், மாஜினியின் மலரும் நினைவுகள்.

விடுதலைப் போராட்ட ஆய்வு மையம், 1, 93வது தெரு, அசோக்நகர், சென்னை - 83. விலை ரூ.30.

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகளின் அருளுரை

- சு. நாகராசன்

ஞானபூமிகள், மாயை, ஆசை, வினை, ஊழ், திருமூலரின் ஆறும் தந்திரப் பகுதி எனப் பல விளக்கங்களைக் கொண்டு, இறையருள் வேண்டும் பக்தி நூல்.

குருவருள், 7 (ப.எ.5), காளியம்மன் கோயில் தெரு, வெளிப்பாளையம், நாகை - 11.

வயிறு!

சேர்ந்து செயல்பட முடியாததால் ஒவ்வொருவரும் முடிந்தவரை தத்தமது தமிழ்ச் சொற்களைத் தந்து விடுகிறார்கள்.

புரோஸ்டேட் என்பதற்கு இந்தப் புத்தகத்தில் சிறு நீர்ப்பை முன் வாயில் சுரப்பி என்று தமிழில் இருக்கிறது. இதற்கு 'விந்துச் சுரப்பி' என்ற சொல் பொருந்தும் என்று நம்புகிறேன். சேச்சுரேட்டட் ஃபேட்ஸ் என்பதற்கு 'பூரிதமான கொழுப்புகள்' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை இன்னும் சுலபமாக 'கரையக்கூடிய கொழுப்புகள்' என்று சொல்லலாம். தவிர 'உறையினை உடைய பிதுக்கம்' என்று ஹெர்னியாவை விளக்குவது சட்டென்று விழி பிதுங்க வைக்கிறது! இப்போது ஹெர்னியா என்ற வார்த்தை 'பஸ்' மாதிரி தமிழ்ச் சொல் ஆகவிட்டது.

இரண்டு நிலைகளில் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்கிற 'என்டமீபா' என்கிற கிருமியை விவரிக்கும்போது 'சிஸ்டின் தந்திரம்' என்று சிறுகதை பாணியில் தலைப்பு வைத்திருப்பதை ரசிக்க முடிகிறது. தவிர, டாக்டர் அங்கங்கே சுவாரசியத்திற்காக, தான் அவ்வப்போது பத்திரிகைகளில் படித்த பாடல்களையும் சேர்த்திருக்கிறார்!

இந்தப் புத்தகத்தில் வயிறு சம்பந்தமான அத்தனை மருத்துவத் தகவல்களும் இருக்கின்றன. புத்தகத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். முதல் 131 பக்கங்கள் நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்ற வேண்டியவை. பிற பக்கங்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை. பயப்படுகிறவர்கள் அவ்வப்போது படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய புத்தகம்.

கே.எஸ்.பப்ளிகேஷன்ஸ், 45, மடத்துத் தெரு, கும்பகோணம் - 1. விலை ரூ.300.





மொழிப் போரில் ஒரு களம்

- கலைஞர் கருணாநிதி

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து 1965ல் பாளைச் சிறையில் இருந்த போது கலைஞர் எழுதியது. எதிர்ப்பு எப்படித் தமிழுணர்வால் மொழிப் போரானது என்ற வரலாறு.


திருமகள் நிலையம், 16 வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை - 17 விலை ரூ.15.

ஆ...! - சுஜாதா

அறிவியல், மர்மம், குடும்பம் எல்லாவற்றையும் மறு ஜென்மம் என்ற சோதனைக் குழாயில் அடைத்துக் குலுக்கி, வேக வார்த்தைகளில் வடிக்க வார இதழ் ஒன்றில் தொடராக வந்த நாவல். மறு ஜென்மம் பற்றிய நம்பிக்கையை ஆழமாக்கும் படைப்பு.

விசா பப்ளிகேஷன்ஸ், 16, வெங்கட் நாராயணா சாலை, தி.நகர், சென்னை - 17 விலை ரூ.70





தமிழில் சைபர் சட்டங்கள் - ம. லெனின்

சைபர் சட்டங்களுக்கான வழிகாட்டி. வரிக்கு வரி சட்ட வாசகங்கள் கவனமாகவும், பொருள் விளங்கும் வகையிலும், கடினமான தொழில் நுட்பத் தகவல், சிக்கலான சட்ட விளக்கம் என்பனவும் எளிமைப்படுத்தப்பட்ட நூல்.

கே.எஸ்.புகழேந்தி, சிக்ஸ்த் சென்ஸ் பப்ளிகேஷன்ஸ், 51/24, வி.சி. கார்டன் முதல் தெரு, மந்தைவெளி, சென்னை - 28. விலை ரூ.198.

— விஸ்வக்



திருவாரூர் பாபு

டெலிஃபோன் மணி ஒலிக்க... பட்டென விழிப்பு வந்தது. கையை எக்கி ரிசீவரை எடுத்தேன்.

"கண்ணன் ஸார் வீடுங்களா?" மறுமுனையில் ஒலித்த குரலில் மரியாதை.

"ஆமாம்... யார் பேசறது?"

"நான் சொக்கலிங்கம் பையன்... பாஸ்கர்..."

"சொல்லுங்க ஸார்... எப்படியிருக்கீங்க... தாத்தா எப்படி இருக்காரு... நான் கண்ணன் பேசறேன்" என்னை மீறி குரலில் உற்சாகம் கொப்பளித்தது.

"அப்பா தவறிட்டாரு..."

பனிச்சென்று ஒரு அதிர்ச்சி மின்னல் மனத்தைத் தாக்கியது.

"எப்ப?"

"இப்பதான் பத்து நிமிஷமாச்சு. போரூர் ராமச்சந்திரா ஆஸ்பிட்டல்ல... உங்களுக்குத்தான் முதல்ல ஃபோன் பண்றேன்... மன்னார்குடியில உங்க வீட்டுக்கு எதிரே இருக்கிற சண்முகம் தாத்தாவுக்கு விஷயத்தைச் சொல்லணும். அவர் வந்துதான் காரியம். உங்களால சொல்ல முடியுமா? இல்லேன்னா... நம்பர் கொடுங்க... நானே சொல்லிடறேன்" என்றார். குரல் கம்மியது.

"இதைக் கூட நான் சொல்ல மாட்டேனா.. உடனே சொல்லிடறேன்... தைரியமா இருங்க பாஸ்கர்... செய்திய ஊருக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டு நான் வீட்டுக்கு வந்திடறேன்."

"ம்" என்றவர் ரிசீவரை வைத்தார்.

மனசு சட்டென பாரமாகியது. எதிர்பார்த்த சாவுதான். கடந்த ஆறு மாதமாகவே சொக்கலிங்கம் தாத்தா உடல் நலம் சரியில்லாமல் இருந்தார். வயதாகி விட்டது. எழுபத்தி எட்டு. அத்துடன் உடம்பில் ஏகப்பட்ட கோளாறுகள். போன முறை நான் அவரைப் பார்த்தபோதே எனக்கு நம்பிக்கை போய் விட்டிருந்தது. சண்முகம் தாத்தாதான் பாவம். உயிர் நண்பர் இழப்பைத் தாங்க மாட்டார்.

மன்னார்குடிக்கு, என் வீட்டுக்கு ஃபோன் போட்டேன். ரிங் போய்க் கொண்டே இருந்தது. திரும்பி கடிகாரத்தில் மணி பார்த்தேன். மூன்று. அண்ணன் சாப்பிட வரும் நேரம். ஒருமுறை ரிங் முழுவதுமாக ஒலித்து ஓய்ந்தது. ஏன்? வீட்டில் யாரும் இல்லையா? அண்ணன் வராவிட்டாலும் அண்ணி வீட்டில் இருப்பாளே...

மறுபடியும் டயல் செய்தேன். மீண்டும் ஒலித்து ஓய்ந்தது. சிறிது டென்ஷன் வந்தது. இங்கிருந்து தகவல் சொல்லி, அவர்கள் புறப்பட்டு வந்து பாடியை எடுக்க வேண்டும். எங்கே போய் விட்டார்கள்?

சிறிது நேரம் கழித்து மீண்டும் கூப்பிடலாம் என்று ரிசீவரை வைத்தேன். மனசு மன்னார்குடிக்குச் சென்றது.

ஃப்ரெண்ட்ஸ்



சொக்கலிங்கம் தாத்தாவும், சண்முகம் தாத்தாவும் என் வீடு இருக்கும் வெள்ளாளத் தெருவில்தான் குடியிருந்தார்கள். பக்கத்துப் பக்கத்து வீடு.

என் வீட்டுக்கு எதிரே விறகுக் கடை. சொக்கலிங்கம் தாத்தாவுக்குச் சொந்தமானது. சண்முகம் தாத்தா பெரும்பாலும் அங்குதான் இருப்பார். காலை ஏழு மணிக்குக் கடை திறந்தது முதல், இரவு ஒன்பது மணிக்கு கடை பூட்டப்படும் வரை இருவரும் ஒன்றாகத்தான் இருப்பார்கள்.

விறகுக் கடை எனக்கு லைப்ரரி. காலையில் பேப்பர் அங்குதான் படிப்பேன். அத்துடன் சொக்கலிங்கம் தாத்தா நிறைய புத்தகங்கள் வாங்குவார். அச்சு வாசனையுடன் இருக்கும் புத்தகங்களின் மீது என் கைதான் முதலில் படும்.

"கண்ணன். ஏழே கால் நியூஸ் கேட்டியா... ஏதாச்சும் செய்தி உண்டா?" என்பார்.

அதிகாலையில் அரசியலில் ஏதாவது திருப்பம் நிகழ்ந்திருந்தால் பேப்பரில் வந்திருக்காது. அதைப்பற்றி செய்தியில் கூறியிருந்தால் அதைச் சொல்வேன். ஆர்வமாகக் கேட்டுக் கொள்வார்.

சண்முகம் தாத்தா கடைக்கு வந்தவுடன் இருவரும் அதைப்பற்றி தாழ்ந்த குரலில் விவாதிப்பார்கள். சமயத்தில் விவாதத்தில் இருவரின் கருத்தும் எதிர்எதிர் திசையில் செல்லும். பேச்சு வலுக்கும். இருவரின் குரலிலும் கோபம் கொப்பளிக்கும். ஆனால்

சில நிமிடங்களில் இரண்டு பேருமே சகஜ நிலைக்குத் திரும்பி விடுவார்கள். சண்முகம் தாத்தா, தம்ளர்களை எடுத்துக் கொண்டு நண்பருக்கு டீ வாங்கச் சென்று விடுவார்.

எனக்கு அது ஆச்சர்யமாக இருக்கும்.

பெரும்பாலும் இருவரும் பேசிக் கொள்ளவே மாட்டார்கள். சண்முகம் தாத்தா அவருக்கென இருக்கும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, அடுக்கப்பட்டிருக்கும் சவுக்குக் கட்டையில் முதுகைச் சாய்த்துக் கொள்வார். பன்னிரண்டு மணிக்கு சொக்கலிங்கம் தாத்தா வீட்டிலிருந்து இருவருக்கும் பெரிய லோட்டாவில் டீ வரும். சண்முகம் தாத்தா பொறுமையாக டீயை ஆற்றி இரண்டு டம்ளர்களில் ஊற்றி, ஒன்றை நண்பரிடம் கொடுப்பார். சமயத்தில் ஸ்பெஷல் சாப்பாடு ஏதாவது கடைக்கு வந்தால், இருவரும் கடையில் உட்கார்ந்தே சாப்பிடுவார்கள்.



ஒரு நாள் இருவரும் சேர்ந்திருக்கும்போது, "அதெப்படி தாத்தா, அப்பப்ப ரெண்டு பேரும் ஏதாவது ஒரு விஷயத்துக்காக சப்தம் போட்டுச் சண்டை போட்டுக்கிறீங்க... உடனே சமாதானமாயிடறீங்க?" என்றேன்.

சண்முகம் பெரிதாகச் சிரித்தார்.

"இது அம்பது வருஷ பழக்கமப்பா. அதுக்குப் பேர் சண்டை கிடையாது தம்பி. விவாதம்..." என்றார்.

ஐம்பது வருடங்களாக உடையாத நட்பு, எனக்கு வியப்பாக இருந்தது.

சொக்கலிங்கம் தாத்தாவின் பையன் பாஸ்கருக்குச் சென்னையில் வேலை கிடைத்து இங்கேயே அனைவரும் செட்டிலாக வேண்டிய சூழ்நிலை. மக்கள் கேஸ் ஸ்டவ்வுக்கு மாறிய பிறகு விறகுக் கடையில் வியாபாரம் குறைந்து போயிற்று. கிலோ ஐந்து ரூபாய்க்கு உடைத்த சவுக்கு விறகும், மூன்று ரூபாய்க்கு ஒரு கிலோ குச்சி விறகும் வாங்குவதற்கு யாரும் தயாராக இல்லை. அதனால் உடம்பு முடியாத சொக்கலிங்கம் தாத்தா, மகனோடு சென்னைக்கு வர வேண்டிய சூழல்.

வீட்டைக் காலி செய்துவிட்டு, சொக்கலிங்கம் குடும்பத்தோடு டிரெயின் ஏறியபோது சண்முகம் கதறி அழுதார். எனக்கும் அழுகை வந்தது. அந்த அழுத்தமான நட்பு என்னை விதிர் விதிர்க்கச் செய்தது.

வேலை கிடைத்து நானும் சென்னைக்கு வந்தேன். சொக்கலிங்கம் தாத்தா எப்போதாவது இடறுவார். பெரும்பாலும், ஊருக்குச் செல்கின்றபோது வீட்டுக்குப் பக்கத்திலேயே இருக்கும் சண்முகம் தாத்தாவைப் பார்க்காமல் வர மாட்டேன்.

"சொக்கலிங்கத்தைப் பார்த்தியா?" என்பார்.

பார்த்திருக்க மாட்டேன். ஆனால் அப்படிச் சொல்ல மனசு வராது. "போன வாரம் பார்த்தேன் தாத்தா" என்பேன்.

"எப்படி இருக்கான்?"

"நல்லபடியா இருக்காரு தாத்தா..."

சென்னைக்குத் திரும்பியதும் சொக்கலிங்கம் தாத்தாவை பார்க்கச் செல்வேன்.

"ஊருக்குப் போனியா? சண்முகத்தைப் பார்த்தியா?"

"போனேன். பார்த்தேன். நல்லபடியா இருக்காரு."

"மூட்டு வலி இன்னும் இருக்கா அவனுக்கு?"

ஆர்வத்துடன் விசாரிப்பார். கடைசியாக அவர் போட்ட போஸ்ட் கார்டை எடுத்துக் காட்டுவார். நெருக்கியடித்துக் கொண்டு வார்த்தைகள் அமர்ந்திருக்கும். கோணல் மாணலான எழுத்து.

"வயசாயிட்டுல்ல... அவனுக்கு கை நடுங்குது" என்பார்.

கடைசியாக ஊருக்குச் சென்றபோது சண்முகம் தாத்தாவைப் பார்க்கவில்லை. அதே போல சொக்கலிங்கம் தாத்தாவையும் பார்த்து நாளாயிற்று.

இந்தச் சூழ்நிலையில்தான்... இப்போது செய்தி.

மணி பார்த்தேன்.

நான்கு என்றது கடிகாரம்.

டயலைச் சுற்றினேன். இருபது நிமிடங்கள் ஆயிற்று. யாராவது வீட்டில் இருப்பார்கள். இல்லையென்றால் வேறொரு நம்பருக்குத் தகவலைச் சொல்லி, உடனே சண்முகம் தாத்தாவுக்குத் தகவல் சொல்ல வேண்டும்.

எங்கேஜ்டு டோன் வந்தது.

வைத்து விட்டுத் திரும்ப முயற்சி செய்தேன்.

இப்போது ரிங் போகாமலே ரிசீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ..." அண்ணன் குரல்.

"அண்ணே... நான் கண்ணன் பேசறேன்..."

"ஏய்... என்னடா? உன் வீட்டு நம்பருக்குத்தான் ட்ரை பண்ணிக்கிட்டு இருக்கேன். நீயே லைன்ல வந்துட்டே... நம்ப சண்முகம் தாத்தா செத்துப் போயிட்டாரு. அரைமணி நேரத்துக்கு முன்னாடி... நெஞ்சை வலிக்குதுன்னாரு... ஆஸ்பிடலுக்குத் தூக்கிப் போட்டுகிட்டுப் போனோம்... போற வழியிலேயே நின்னுட்டு...இந்தச் செய்தியை உடனே சொக்கலிங்கம் தாத்தா வீட்டுக்கு இன்ஃபார்ம் பண்ணிடு." ○

தலைவர் தீக்குளிப்பார்!



''என்னதான் கட்சித் தலைமை தனக்கு கிடைக்கணும்னு ஆசைப்பட்டாலும் அந்தாளு அப்படிப் பேசியிருக்கக் கூடாது...''

''என்ன சொல்லிட்டாரு?''

''நதிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கலைன்னா இப்போதைய எங்க தலைவர் தீக்குளிப்பார்னு பொதுக்கூட்டத்துல பேசிட்டாரு!''

- சாயம் வெ.ராஜாராமன்

''நான் பதவியில் இருந்தபோது எதுவும் செய்யவில்லை என்கிறார்கள்... பிறகு ஊழல் புரிந்ததாக என் வீட்டில் ரெய்டு நடத்துகிறார்கள். இப்படி முன்னுக்கு பின் முரணாக நடப்பது சரியா..?''







''பதவி போன மந்திரிங்க எல்லாம் சும்மா இருக்கக் கூடாது...''

''ஒன்னு சேர்ந்து ஒரு யூனியன் ஆரம்பிக்கணும் அப்பதான் ஒரு பயம் வரும்...''

- தமிழ்





- ராம்

கல்லூரி மாணவிகளை ஈவ்டீசிங் செய்து, சந்தோஷப்படும் ஆண் வர்க்கத்தினிடையே பெண்களுக்கெனத் தற்காப்புக் கலை அகாடமி (GITT - give it to them) ஒன்றை உருவாக்கி அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறார் அஸ்வின் மோகன். பெங்களூர் ஓவியக் கல்லூரியான சித்ரகலா பரிஷத்தின் இறுதி ஆண்டு மாணவர் இவர்.

"பெண்களுக்கு எதிரான ஈவ்டீசிங், பாலியல் வன்முறைகள் எல்லாமே, ஆணாதிக்க மனோபாவத்தின் பிரதிபலிப்புதான். டூ-வீலரில் ஒரு பெண் தன்னை ஓவர்டேக் பண்ணினாலே ஆண்களால் தாங்கிக் கொள்ள முடியாது. கொதித்துப் போய் விடுவார்கள். ஒரு பெண்ணை உடல்ரீதியாகத் தாக்கினால் அவளால் எதுவுமே செய்ய முடியாது என்று இம்சிக்கிறார்கள். அதனால்தான் இந்தத் தற்காப்புக் கலையைப் பெண்களுக்கென கற்றுக் கொடுக்கிறேன். சமயோசிதம், தைரியம் இருந்தால் போதும். எப்பேர்ப்பட்ட ரௌடியையும் வீழ்த்தி விடலாம்" என்கிறார் அஸ்வின்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய ஹேண்ட்பாகில் கண்டிப்பாக நன்சாக்கூ (ஜப்பானியக் கண்டுபிடிப்பு. இரண்டு கட்டைகள் நடுவே சங்கிலி. சுழற்றி அடித்தால் இடி மன்னர்கள் காலி!), கட்டர் (சிறிய கத்தி. இலேசாக் கீறினால் வலியில் ஈவ் டீசர்கள் அலறிக்



ஈவ் டீசிங்கா...? பிச்சுப்புடுவோம்!



• இதுதான் நான்சாக்கு

கொண்டு எஸ்கேப்), டியோஸ்ப்ரே- (இது மிக வலிமையானது. ஃபா பிராண்ட் அற்புதமென்கிறார் அஸ்வின், இல்லாவிட்டால் சில் லிஸ்ப்ரே (மிளகாய்க் கூழை சர்ரென்று பீய்ச்சினால் ஆயுசுக்கும் பெண்களிடம் வாலாட்ட மாட்டார்கள் என்பது மிளகாய் மேல் சத்தியமாம்! ஆனால் இதனை வாங்கும்போது வாங்குபவர்களின் பெயர் முகவரி கண்டிப்பாகக் குறித்துக் கொள்ளப்படும். கடையில் கிடைக்காது. தயாரிப்பாளர்களிடமிருந்தே நேரிடையாக வாங்க வேண்டுமாம்)... இந்தச் சாதனங்களை வைத்துக் கொள்ள வேண்டும். "இதை எப்படி எங்கே வைத்துக் கொள்ள வேண்டும்? அதை எப்படி நொடியில் சுளுவாக எடுத்து தாக்க வேண்டும் என்பதை நான் சொல்லிக் கொடுக்கிறேன்" என்கிறார் அஸ்வின்.

“நான் ஐந்தடி உயரம் கூட இல்லை. என்னால் எப்படி தற்காத்துக் கொள்ள முடியும்? அடி உதை கொடுக்க முடியுமென நினைத்திருந்தேன். எவ்வளவு தவறு என்று இந்த வகுப்புக்குச் சென்ற பிறகு புரிகிறது," என்கிறார் மஞ்சனா.

"என் உடலின் உறுப்புக்களே ஆயுதம். அதனால் தாக்க முடியும் என்பது தெரியாமல் போச்சே. இனி ஒரு கை பார்த்து விடுவேன்" என சூளுரைக்கிறார் சரஸ்வதி.

"சிம்பிள், ஹெல்ப்ஃபுல், தன்னம்பிக்கை டன் கணக்கில் ஏறி விட்டது" என பெண்கள் சொல்லிக் கொண்டே போகிறார்கள்.

அஸ்வின் 13 வருடங்களாக மார்ஷல் ஆர்ட் பயின்றவர். களரி சண்டை, கராத்தே, ஜூடோ, குங்ஃபூ உட்பட பல பெயர் புரியாத அடிதடிக் கலைகளைக் கற்றிருக்கிறார்.

"சிறு வயதில் என் க்ளாஸில் படிக்கும் பெண்களை பசங்க வம்புக்கு இழுப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் அழுவதைப் பார்த்து இவர்களுக்கு ஏதேனும் கண்டிப்பாகச் செய்யணும் என்று முடிவெடுத்து விட்டேன். என் அம்மா என்ஜினியர். ஆனாலும் ஒரு பெண் என்பதனாலேயே பிரமோஷன்கள் சம்பள உயர்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. ஏன் நம் சமூகத்தில் இன்னமும் ஆண்-பெண் பேதங்கள்?" நிஜமான வருத்தத்துடன் கேட்கிறார் அஸ்வின்.

இவ் இட் டு தெம் (திருப்பிக் கொடுங்க) கிளாஸில் ஒவ்வொரு பாட்சிலும் 20-25 பெண்கள் இருக்கிறார்கள். ஒரே நாள் வொர்க் ஷாப் போதுமானது. ஆறு மணி நேரம் கொண்ட இந்த வகுப்பில், பல டெக்னிக்குகளைக் கற்றுத் தருகிறார் அஸ்வின்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் தில்லிக்கு அடுத்த இடத்தில் இருப்பது சென்னையாம். தற்காப்புக் கலையைக் கற்றுக் கொண்டிருந்தால், ஒருவேளை சரிகா ஷா இன்று நம்மிடையே இருந்திருப்பாரோ!

— லதா சேகர்

புலி, பூனை, ஆந்தை!

புக்கர் பரிசு பெற்றவர்கள் பரிசு வாங்கிய சிறிது காலத்துக்குள் செய்திகளிலிருந்து மறைந்துவிடுவதுதான் வழக்கம்.(அருந்ததி ராய் தவிர)

ஆனால் இந்த ஆண்டு புக்கர் பரிசைப் பெற்ற (78,000 டாலர்கள்) யான் மார்டெல் என்ற கனடா நாட்டு எழுத்தாளர் மீண்டும் செய்திகளில் இடம் பிடித்திருக்கிறார். அவர் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது – இலக்கியத் திருட்டு!

பதினாறு வயது இந்தியச் சிறுவன் ஒருவன், தனது குடும்பத்தோடு கனடா செல்ல முயற்சிக்கிறான் கப்பலில். சிறு மிருகக் காட்சி சாலையையே நடத்தி வருகிறது அந்தக் குடும்பம். கப்பலில் அவர்களோடு வரிக்குதிரை, குரங்கு, புலி போன்ற மிருகங்களும் பயணம் செய்கின்றன. நடுக்கடலில் புயல்வீசி கப்பல் கவிழ, சிறுவனும் புலியும் மட்டுமே உயிர் தப்பிக்கின்றனர். ஒரே உயிர்காக்கும் மிதப்பானில், இந்த இரு உயிர்களும் உயிர்தப்ப வேண்டிய கட்டாயம். பயங்கரமான அந்தப் பயணம்தான் கதையின் போக்கை நிர்ணயிக்கிறது. தவிர, பாண்டிச்சேரியில் வளர்ந்த அந்தச் சிறுவன் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என்று அடுத்தடுத்து மதம் மாறியவன். எனவே பல்வேறு தத்துவங்களும் இதில் விவாதிக்கப்படுகின்றன.

மோகர் சிக்லியர் என்ற பிரேசில் நாட்டு எழுத்தாளர், இது தமது நாவலின் கரு என்று சமீபத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தமது 'மாக்ஸ் அண்ட் தி கேட்ஸ்' என்ற நூலிலிருந்துதான் புக்கர் பரிசு நாவல் எடுத்தாளப்பட்டிருக்கிறது என்றிருக்கிறார்.

இதில் ஒரு பகுதியை உடனடியாக ஒப்புக் கொண்டிருக்கிறார் யான் மார்டெல். 'ஒரு சிறுத்தைப்புலியோடு சிறுவன் ஒருவன் கப்பலில் பயணம் செய்ய நேருவது போல் அவரது நாவல் அமைந்தது. என் நூலில் சிறுத்தைப் புலியை, புலியாக மாற்றிக் கொண்டேன். இந்த ஓர் அம்சத்தைத் தவிர, மற்ற அனைத்தும் என் சொந்தச் சரக்குதான். தவிர, சிக்லியரின் புதினத்தை நான் படிக்கவேயில்லை. 'நியூயார்க் டைம்ஸ்' இதழில் அமெரிக்க விமர்சகரான ஜான் அப்டைக் என்பவரின் நூல் விமர்சனத்தில்தான் இந்தக் கருவைப் படிக்க நேர்ந்தது' என்றார்.

புதினங்களைப் பொறுத்தவரையில் ஐடியா என்பதற்கே காப்பிரைட் கிடையாது என்பது யான் மார்டெலின் வாதம். ஆனால் அப்படி உண்டு என்று கருதுகிறார் பிரேசில் எழுத்தாளர். 'நான் இதை இத்துடன் விட்டுவிடத் தயார். ஆனால் என் நூல் பதிப்பாளர்கள் வழக்குத் தொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்' என்கிறார். தவிர, யான் மார்டெல் தமது புத்தகத்தைப் படித்திருக்க நிறைய வாய்ப்பு உண்டு என்கிறார். காரணம், பிரேசில் மொழியில் எழுதப்பட்டாலும், இது ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

— ஓர் இலக்கியச் சர்ச்சை!

• யான் மார்டெல்



'ஒரே ஒரு ஐடியாவைக் கடன் வாங்கிக் கொண்டு, தமக்கேயுரிய பாணியில் ஒருவர் கதையை எழுதினால் அதைக் குற்றம் என்று கூற முடியுமா? அப்படிப் பார்த்தால் எந்தத் திரைப்படம்தான் முழு ஒரிஜினல் என்று கூற முடியும்?' என்று கேட்பவர்களும் நிறைய இருக்கிறார்கள்.

ஆனால் யான் மார்டெலுக்கு சங்கடம் உண்டாக்கும் வகையில் வேறு சில நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. நியூ யார்க் டைம்ஸ் இதழ் 'எங்கள் புத்தக விமர்சனத்தில் இதுவரை சிக்லியரின் குறிப்பிட்ட புதினம் இடம் பெறவேயில்லை' என்று அறிவித்து விட்டது. ஜான் அப்டைக்கும் இந்த நூலைத் தாம் இதுவரை விமர்சனம் செய்ததில்லை என்று கூறிவிட்டார்!



• மோகர் சிக்லியர்

போதாக்குறைக்கு 'ஒரு பிரபல ஐடியாவாகவே இருந்தாலும் அதைத் திறமை குறைந்த எழுத்தாளர் குட்டிச் சுவராக்கியிருக்கலாமே' என்று யான் மார்டெல் தன்னம்பிக்கையோடு கூறியது வேறுவிதமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பிரேசில் எழுத்தாளரை இது அவமதித்ததாகும் என்கிறார்கள்.


புக்கர் பரிசு வென்ற நூல்கள் இது போன்ற சர்ச்சைக்குள்ளாவது புதிதல்ல. கிரகாம் ஸ்விஃப்ட்டின் 'லாஸ்ட் இயர்ஸ்' என்ற பரிசு வென்ற புதினம், வில்லியம் பாக்னரின் 'ஐ லே டையிங்' என்ற புத்தகத்தின் அப்பட்டமான காப்பி என்ற கருத்து நிலவியது.

இதனால்தானோ என்னவோ, 1984ல் புக்கர் பரிசு வென்ற அனிதா ப்ருக்னர் என்ற எழுத்தாளர் 'புக்கர் பரிசு பெறுவதால் எந்த அதிகப்படி மதிப்பும் எழுத்தாளருக்குக் கிடைப்பதில்லை. மாறாக அது குறைகிறது' என்றார்! (இப்படி அவர் சொன்னது முழுப் பரிசுத் தொகையையும் வாங்கிக் கொண்ட பிறகுதான்!)

கடைசியாக ஒரு செய்தி. சர்ச்சையில் சிக்கியுள்ள இரண்டு எழுத்தாளர்களுமே, எட்வர்ட் லியர்ஸ் என்பவர் எழுதிய ஒரு கதையிலிருந்துதான் இந்தக் கருவை எடுத்திருக்கிறார்கள் என்கிறது ஒரு குற்றச் சாட்டு! ஆங்கிலேய ஆந்தை ஒன்று, ஒரு பூனையுடன் படகில் செல்லும்போது நடக் கும் நிகழ்வுகளைக் கொண்டதாம் இந்தக் கதை!

— ஜி.எஸ்.எஸ்.

பாலகுமாரன்



"அம்மா, அப்பா காளிகாம்பாள் கோவில்ல தூண்ல சாய்ஞ்சுண்டு உட்கார்ந்துண்டிருக்காராம். என் க்ளாஸ் பையன் பார்த்துட்டுச் சொல்றான். நான் போய்ப் பார்த்துட்டு வரட்டுமாம்மா."

பிள்ளை ஓடி வந்து சொன்னது. அவன் குரலில் பதற்றம் இருந்தது.

"அப்பாக்கு கண்ணெல்லாம் சிவந்திருக்காம். அழுதா மாதிரி இருக்காம். உங்க வீட்ல ஏதாவது சண்டையான்னு அந்தப் பையன் கேட்கிறான். போறேம்மா. போய் பார்த்துட்டு வரேன்."

பிள்ளை பரபரத்தான்.

"வேண்டாம். நீ போகாதே. நான் போறேன்."

அவள் சட்டென்று வேறு புடைவை மாற்றிக் கொண்டாள். தலைவாரிக் கொண்டாள். நெற்றிக்கு இட்டுக் கொண்டாள்.

சுவாமி அலமாரிக்கு முன் கை கூப்பி நின்றாள். விழுந்து வணங்கினாள்.

அந்த அலமாரி முழுவதும் யாரோ வியாபித்து நிற்பது போல ஓர் உணர்வு சட்டென்று ஏற்பட்டது.

"அண்ணா... சங்கரண்ணா.... எங்காத்துக்காரர் மனசு நொந்திருக்கார். என்னமோ போறாத வேளை என் மேல கோபம். கை நீட்டிடுத்து. நீங்க எதுவும் மனசுல வச்சுக்காத அவரை மறுபடியும் ரம்மியமாக்கணும். கோபமே வராத புருஷனா மாத்தணும். உங்களால முடியும்."

மறுபடியும் விழுந்து வணங்கிவிட்டுப் படியிறங்கி, ஓட்டமும் நடையுமாய் காளிகாம்பாள் கோவிலை அடைந்தாள்.

கோயிலிலிருந்து தூணில் சாய்ந்திருக்கும் புருஷனைப் பார்க்கும்போது, சடேரென்று வயிற்றில் ஒரு பயம் படர்ந்தது.

இப்படி என்ன ஓர் அசதி. இப்படி என்ன ஓர் அலுப்பு. மொத்த வாழ்க்கையும் விட்டுப் போனாற் போல, இப்படி என்ன ஒரு சாயல். நேரே வீட்டுக்கு வந்து உணவை



27

மனம் உருகுதே

என்ன சீற்றம். ஏன் இந்த வேதனை?

காளிகாம்பாளைக் கைகூப்பி வணங்கி இவரை எனக்குச் சந்தோஷமாக்கிக்கொடு என்று மறுபடியும் வேண்டினாள். மெல்லப் போய் அருகே உட்கார்ந்து கொண்டாள்.

ராதாகிருஷ்ணன் கண்மூடி தூணில் சாய்ந்து, ஓர் அரைத் தூக்க நிலையில் சகலத்தையும் ஒட்டுமொத்தமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

"மந்திரஜபம் காப்பாத்துமா, வேற எங்கயோ போய் தெற்கு தாம்பரம் தாண்டி நிலம் பார்த்து வீடு கட்டி உட்கார்ந்து கொண்டால், ஜெயிக்க முடியுமா? மயிலாப்பூர் சந்திலோ, திருவல்லிக்கேணி ஒண்டுக்குடித்தனத்திலோ இருந்தால், இதே அரண்மனைக்காரத் தெருவில் படியேறி முடித்து, பிற்பகல் கீழே இறங்கி வெற்றிலைப் பாக்கும், சீவலும் போட்டுக் கொண்டு, மிக கம்பீரமாக நாற்காலியில் அமர்ந்து, மூலைக்கு மூலை விரட்டிக் கொண்டிருப்பவரை எத்தனை ஆவலோடு, சந்தோஷத்துடன் கவனித்திருக்கிறாள்.

இங்கு இப்படி எல்லாமே கை நழுவியது போல, இது ஏன் சாய்ந்திருக்கிறது. வேலை போகப் போகிறது என்ற பயமா, வீடு போகப் போகிறதே என்ற கவலையா, இல்லை, வேறு ஏதேனுமா? உள்ளுக்குள் என்ன ஆத்திரம், இறங்கி, ஏதேனும் ஒரு கம்பெனியில் வேலை வாங்கி விடலாம். இப்பொழுது வாங்குகிற சம்பளத்திற்குப் பாதி சம்பளத்தில் வேலையில் சேர்ந்து விடலாம். ஆனால், இப்படி கம்பீரமாக ராஜ்யபரிபாலனம் பண்ண முடியாது. கெடுபிடியாகத்தான் எங்கேனும் சேரும்படியாக இருக்கும். சொன்ன வேலையைச் செய்கிறவனாகத்தான் நியமிப்

பார்கள். அது வேதனை. ஆனால், வேறு வழியில்லை. இந்தப் பாதி சம்பள வேலை கூட இல்லாமல், சேலையூர் தாண்டி எங்கோ உட்கார்ந்து கொள்வதில் என்ன லாபம் இருக்கிறது. வருமானமே இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டால் இந்த மனம், இந்த உடம்பு என்ன ஆகும்? ரேவதியைக் கோபித்துச் சண்டை போட்டதற்கே உள்ளுக்குள் மிகப்பெரிய ஓர் அயற்சி வந்து விட்டதே! வீடு மட்டுமே இருக்கிறது. வேறு சம்பாத்தியம் இல்லை என்கிறபோது, ஒரு மனிதன் எப்படி ஓர் சந்தோஷமாக இருக்க முடியும்?''

யாரோ உற்றுப்பார்ப்பது போல் மனத்திற்குத் தோன்ற, சட்டென்று அவர் கண் விழித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். பின்னால் யாரோ நெருக்கமாய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டு முன்னே நகர்ந்தார். ரேவதி என்று தெரிந்து மெல்லச் சிரித்தார்.

ரேவதியும் பதிலுக்குச் சிரித்தாள்.

இரண்டு பேரும் ஏதோ பேச வாயெடுத்து சட்டென்று அடக்கிக் கொண்டார்கள். பேசுவதில் எந்தவித லாபமுமில்லை என்பது போல் மௌனமானார்கள்.

ராதாகிருஷ்ணன் தலைகுனிந்து உட்கார்ந்திருக்க, அவர் முதுகில் மெல்லத் தன் இடக்கையை வைத்து, ஒன்றும் கவலைப் படவேண்டாம் என்பதுபோல் மெல்லியதாக ரேவதி தடவிக் கொடுத்தாள்.

ராதாகிருஷ்ணன் திரும்பி அவளைப் பார்த்தார்.

மெல்ல அவர் கண்களில் நீர் கட்டியது _

''ஐயம் ஸாரி'' என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

"ச்சூ... என்ன இது. எதுக்கு இதெல்லாம்" என்று ரேவதி மெல்லக் கடிந்து கொள்ள, மறுபடியும் கண்களை மூடிக் கொண்டார்.

"வீட்டுக்குப் போலாமா. இங்க நீங்க இப்படி உட்கார்ந்துண்டிருக்கறது என்னமோ மாதிரி இருக்கு. ராஜாராமனோட ஃப்ரெண்ட் பார்த்துட்டு ராஜாராமனுக்குச் சொல்ல, அவன் எங்கிட்ட வந்து சொன்னான். அதான் ஓடி வந்தேன். நாலு பேர் கண் படும்படியா கோவில்ல சாய்ஞ்சு உட்காருவானேன். வாங்கோ, என்னவா இருந்தாலும் சகலத்தையும் கீழ இறக்கிப் போட்டுட்டு வீட்டுக்கு வாங்கோ" என்று மெல்ல உலுக்கிக் கூப்பிட, அவர் கை ஊன்றி எழுந்திருந்தார்.

"இவ்ளோ தூரம் வந்துட்டோம். உள்ள போய்ப் பார்த்துட்டு போயிடுவோமா'' என்று, ரேவதி கருவறையைச் சுட்டிக்காட்ட, இரண்டுபேரும் உள்ளே போனார்கள்.

கூட்டம் அதிகமில்லை. யாருக்கோ தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. தட்டு வெளியே வந்தது. தீபத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு இரண்டு ரூபாய்க் காசு போட்டார். அர்ச்சகர் இளைஞன் யாருக்காக தீபாராதனை செய்தானோ, அவருக்கு நாலு முழம் மல்லிப் பந்தாக கையிலே திணிக்க, அவர் வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"இவ்ளோ பூவை வச்சுண்டு நான் என்ன பண்ணுவேன். அம்மா... நீங்க வாங்கிக் கோங்கோ" என்று சொல்லி அந்தப் பூவை ராதாகிருஷ்ணனிடம் கொடுக்க, ராதாகிருஷ்ணன் கண்ணில் ஒற்றிக் கொண்டு ரேவதியிடம் கொடுக்க, ரேவதி முகம் மலர்ந்தாள்.

''வீட்ல கொண்டு போய் வச்சுக்கோங்கய்யா. லேடீஸ் இல்லைன்னா என்ன, அம்பாள் பிரார்த்தனையா உங்க வீடு முழுக்க இருக்கட்டுமே. இவங்களுக்கு நான் வேற பூ கொடுக்கறேன்" என்று அர்ச்சக இளைஞன் உரத்துச் சொன்னான். உள்ளுக்குள் வேகமாகப் போனான்.

''ஓய்வு ஊதியம் தருவோம்னு நாம சொன்னதைத் தப்பா புரிஞ்சுகிட்டு இப்படி எல்லாரும் ஆபீஸ்ல தூங்கறாங்க சார்...!''
- தமிழ்

காளிகாம்பாள் சிலையில் சுற்றப்பட்டிருந்த கதம்பச் சரத்தை எடுத்து வந்து ரேவதியிடம் கொடுத்தான்.

"என் கண்ணே. எனக்கு பூ பிடிக்கும்னு சொல்லி தலையில இருக்கற பூவை என் கைக்கு கொண்டு வந்தியா. ரொம்ப சந்தோஷம். நாங்க உன்னை விட்டுட்டு ரொம்ப தூரம் போகப் போறோம். எங்கயோ போகப் போறோம். அங்க எங்க கூட வருவியா. எங்களோட இருப்பியா?"

கண் மூடி ரேவதி, காளிகாம்பாளைப் பிரார்த்தித்தாள். மெல்லக் கண் இறந்தாள்.

எனக்குச் சொல்லிக் கொடேன். இனி நீ எங்கிருந்தாலும் கூட இருப்பேன்னு எனக்கு ஏதாவது ஓர் அடையாளம் காட்டேன்.

மனமுருக வேண்டிக் கொண்டாள். அம்பாளை தரிசித்து சிவன் சன்னதிக்கு அருகே

போக, அங்கு யாரோ ஒரு பெண்மணி நின்று கொண்டு வெற்றிலைப் பாக்கும் ரவிக்கையும், தாலிக்கொடியும், மஞ்சள் கிழங்கும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ரேவதியைப் பார்த்ததும் வேறு யாருக்கோ கண்காட்ட, அருகேயிருந்த இன்னொரு பெண்மணி, பிளாஸ்டிக் பையிலிருந்து ஒரு புடைவையை எடுத்து, தட்டில் வைத்தாள்.

நல்ல பட்டுப்புடைவை. ஜரிகை போட்டு பளபளவென்று இருக்கின்ற, குறைந்த பட்சம் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிற பட்டுப் புடைவை.

ரேவதி திகைத்தாள்.



ராதாகிருஷ்ணனைப் பார்த்தாள். ராதா கிருஷ்ணனுக்கும் வியப்பாக இருந்தது.

"என்ன இது. பட்டுப்புடைவையெல்லாம் வேண்டாம். வெறும் மஞ்சள் கிழங்கு கொடுங்கோ" என்று சொல்ல, அந்தப் பெண்மணி காலில் விழுந்து அவளை வணங்கினாள்.

"புடைவை கொடுக்கணும்னு வேண்டிண்டிருக்கேன்'. தயவு செய்து மறுக்காம வாங்கிக்கோங்க."

"வேற யாருக்காவது கொடும்மா, எனக்கு என்னத்துக்கு?"

"உங்களுக்குக் கொடுக்கணும்னு உள்ள தோணித்து. நீங்க வாங்கிக்கணும். நீங்க மறுத்தா எனக்கு அபசகுனமாப்படும்."

"எல்லாருக்கும் கொடுக்கறா மாதிரிதான் எனக்கும் கொடுக்கணும்."

"எல்லாருக்கும் பட்டுப்புடைவை கொடுக்கணும்னு ஆசைதாம்மா. வசதியில்லை. அதனால, எங்க கல்யாண தினத்துக்கு ஒரேயொரு பெண்மணிக்குப் பட்டுப்புடைவையும், இன்னொரு பதினாலு பேருக்கு ரவிக்கைத் துணியும் கொடுக்கறேன். உங்களைப் பார்த்தவுடனே பட்டுப்புடைவை கொடுக்கணும்னு தோணிச்சு. மறுபடி கெஞ்சிக் கேட்டுக்கறேன். புடைவை வாங்கிக்கோங்கம்மா."

இப்பொழுது ராதா கிருஷ்ணனின் உத்தரவை நோக்கி ரேவதி பார்க்க, அவர் வாங்கிக்கொள் என்று ஜாடை காட்டினார்.

ரேவதி புடைவையை வாங்கிக் கொண்டாள்.

"உங்க அட்ரெஸ் சொல்லுங்களேன்" என்று சொன்னாள்.

"அட்ரஸ் எல்லாம் வேண்டாம்மா. நீங்க நல்லாயிருங்கன்னு என்னை வாய்நிறைய வாழ்த்தினாலே நான் நல்லா இருப்பேன்."

"சௌக்கியமா, தீர்க்க சுமங்கலியா, எல்லா வித சந்தோஷங்களோடும், எல்லாவித வளத்தோடும், நீண்ட நெடுங்காலம் வாழணும் என்று குனிந்து வணங்கியவள், தலைதொட்டு ரேவதி ஆசிர்வதித்தாள்.

புடைவையை வேண்டாம் என்று ஒரு கூச்சத்தால் மறுத்தாலும், புடைவையை அணைத்துக் கொண்டு கோவிலை விட்டு வெளியே வரும்போது, மனம் சந்தோஷத்தில் துள்ளியது.


'ரொம்ப தேங்க்ஸ். நீ எனக்கு உத்தரவு கொடுத்துட்ட, நீ எங்க போனாலும் கூட வருவேன்னு ஒரு பச்சைப் புடைவையைக் கொடுத்து. எனக்குப் புரியறது. நீ என் கூடத்தான் இருக்கப்போற. எனக்குப் புடைவையைக் கொடுத்தது யாரோ ஒரு பொம்மனாட்டி இல்ல. நீ, காளிகாம்பாள்' என்று மனசுக்குள் உரக்கப் பேசினாள்.

படியேறியதும் பிள்ளை அப்பாவைப் பார்த்துவிட்டு, பின்பக்க வெளிமுற்றத்திற்கு பயந்தபடி பின்வாங்கினான்.

ராதாகிருஷ்ணன் அவனை நோக்கி முன்னேறினார். அருகே போனார். அவன் தலையைத் தடவி விட்டார். இறுக அணைத்துக் கொண்டார். அவன் விசும்பத் துவங்கினான். அவன் முதுகெல்லாம் தடவினார்.

"ஸாரிப்பா. நான் ரொம்பத் தப்பு பண்ணிட்டேன்!"

"அதெல்லாம் இல்லைடா. நானும் கொஞ்சம் முட்டாள்தனமா நடந்துனுட்டேன்."



திருப்பதிக்கு இலவசம்!

முசிறி. அய்யம்பாளையம் கிராமத்துவாசியான ஏ.ஆர்.கஸ்தூரி நாட்டார், கடந்த இருபத்தைந்து வருடங்களாக புரட்டாசி மாதங்களில் திருப்பதிக்குச் சென்று வருகிறார். இதில் என்ன புதுமை என்கிறீர்களா? கஸ்தூரி தனியாகச் செல்வதில்லை. திருப்பதி பெருமாள் தரிசனத்துக்கு வர விரும்பும் ஊர்க்காரர்களை, தமது சொந்தச் செலவில் அழைத்துச் செல்கிறார். போக்குவரத்து, சாப்பாட்டுச் செலவுகளை அவரே ஏற்றுக் கொள்கிறார்.



"திருப்பதி வெங்கடாசலபதிதான் எங்களுக்குக் குல தெய்வம். என்னோட ஆயுளுக்குள்ளார ஊரு சனங்க எல்லாத்தையும் திருப்பதி வெங்கடாசல பதியைத் தரிசனம் பண்ணினவங்களா ஆக்கிடணும்னு இருக்கேன்" என்கிறார் ஏ.ஆர்.கஸ்தூரி நாட்டார்.

கட்டுரை, படம் : **திருநாவுக்கரசு**

மெல்ல அவன் கன்னங்களை அழுந்தப்பிடித்து இரண்டு கன்னத்திலும் முத்தமிட்டார். கிட்டத்தட்ட, தன் உயரத்திற்கு வளருகின்ற பையனை ஆவலோடு பார்த்தார்.

'உன்னுடைய வாலிபமான ஒரு காலத்துல, நான் ஒண்ணும் சம்பாதிக்காம போயிடப்போறேனோன்னு பயமா இருக்கேடா' என்று மனதுக்குள் மெல்ல குமைந்தார். பெண் குழந்தையைப் பார்த்து அருகே வரவழைத்து நெற்றியில் முத்தமிட்டார்.

"ஏதாவது சாப்பிட்டியா ரேவதி. போ. போய்ச் சாப்பிடு" என்று சொல்ல, ரேவதி தட்டை எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தாள். குழந்தைகளும் உட்கார்ந்தன.

அவர் மெல்ல விசிறி எடுத்துக் கொண்டு குழந்தைகளுக்கு விசிறினார். குழந்தைகள் மறுத்த போதும் கேட்காமல் ரேவதிக்கும் விசிறினார்.

அந்த வீடு மௌனமாக உணவு சாப்பிட்டது. தன் வேலைகளை கவனிக்கத் துவங்கியது.

இரவு நேரம் ரேவதியே தலைகாணியை அவருக்கருகே போட்டுக் கொண்டு, அவர் நெஞ்சை நீவிவிட்டாள்.

"என்ன பிரச்னை வந்தாலும், இந்த வீடு இல்லாமல், இந்த வேலை இல்லாமல் இருந்தாலும், நம்ம ரெண்டு பேருக்குள்ளேயும் சண்டை வராத இருந்தாப் போதும். எதையும் சமாளிச்சுடலாம். நாம ரெண்டு பேரும் சண்டை போட்டுண்டோம்னா, வீடு ரொம்ப ஆடிப்போயிடும். என்ன கோபம் இருந்தாலும் வாய்நிறைய இதனால் கோபம், அப்படின்னு நீட்டி முழக்கிப் பேசிடலாம். தப்பேயில்லை. முரட்டுத்தனம் காட்டற போது மனசு ஒடிந்து போறது" என்று அவள் சொல்ல, அவளை இழுத்து அணைத்துக் கொண்டார். முத்தமிட்டார்.

"இனிமேல் காட்டமாட்டேன்" என்று உறுதியான குரலில் சொன்னார்.

டெலிபோன் மணி அடித்தது. பத்தேகால் மணிக்கு யார் போன் செய்வது, என்று ஆச்சரியத்தோடு ராதாகிருஷ்ணன் போனுக்கு அருகே போய், காதில் பொருத்திக் கொண்டு தன் பெயரைச் சொல்ல, எதிர்முனையில் சங்கரய்யர் குரல் கேட்டது.

"நாளைக்கு கார்த்தால ஏழு மணிக்கு வந்துட முடியுமா. ஒரு ஜபம் ஆரம்பிச்சு வச்சுடறேன்!"

"ஆஹா... நிச்சயமா வரேன்."

"ஆனா, வீட்லயும் கூட்டிண்டு வாங்கோ" என்று சொல்ல "குழந்தேளையும் கூட்டிண்டு வரணுமா?" என்று ராதாகிருஷ்ணன் பதிலுக்குக் கேட்டார்.

"கூட்டிண்டு வாயேன். அவாளுக்கும் ஏதாவது சொல்லித் தரேன். எல்லாரையும் கூட்டிண்டு வந்துட முடியுமா, ஏழு மணிக்குள்ள. இல்ல, கொஞ்சம் தள்ளி வச்சுக்கட்டுமா?"

"இல்லை, நீங்க எப்போ சொல்றேளோ வரோம்."

"ஏழு மணி ரொம்ப நன்னாயிருக்கு."

சரியென்று ராதாகிருஷ்ணன் போனை வைத்தார்.

(தொடரும்)



அன்னமே பிரம்மா! அன்னமே விஷ்ணு! அன்னமே சிவன்!

புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில் மாதந்தோறும் அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ராமஸேது என்றும், ஸேது ஸ்தலம் என்றும் போற்றப்படும் இராமேஸ்வரம் புகழ்மிக்க புண்ணிய க்ஷேத்ரமாகும். இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலன் கிடைக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.10,000 அனுப்பும் அன்பர்களுக்கு ஆயுள்காலம் முழுவதும் கோபுர தரிசனம் மாத இதழ் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். மேலும் பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ரூ. 10,000 அனுப்பும் அன்பர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: 4900303, 4900603 Fax: (044) 4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

நடக்குமென்பார்;

மேஷம் : கலைத்துறையைச் சேர்ந்தவங்களா நீங்க? புதிய முயற்சி எடுத்தீங்கன்னா, சீரோடும் சிறப்போடும் முன்னேற்றம் காண்பீங்க. ஏழில் உலவும் கிரகங்கள் காரணமாக, வாழ்க்கைத் துணை நலம் கவனம் தேவை. 'ஜான் ஏறினால், முழம் சறுக்குது'ம்பாங்களே.. அந்த நிலைமைதான் இந்த வாரம். செலவுகள் கட்டுக்கடங்காது பிதுங்கும். பெண்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி வந்து சேர்ந்து, உற்சாகம் கூட்டும். மாணவர்கள் திறமைக்குரிய பயன் அடைவார்கள். ஞானிகள் தரிசனம் நன்மை தரும்.

ரிஷபம் : இரண்டாவது சுற்று ஏழரைச் சனி நடைபெற்றுக் கொண்டிருப்பவரா நீங்க? அதிர்ஷ்டமான வாரமா அமையப் போகுது. சகல காரியமும் திட்டமிட்டபடி நடக்கும். சுய தொழில் புரிபவர்கள் மேன்மையடைவார்கள். கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் பத்தடி தள்ளி நின்னு பாதுகாப்புடன் ஈடுபடுங்க. வழக்கு, கோர்ட்டு, கேஸ் என்று அலைந்து திரிந்து, செருப்பு தேய்ந்து போனவர்கள், இப்போது நிம்மதி பெருமூச்சு விடலாம். எதிர்பாராத புதிய திருப்பம் உண்டாகும். கணவன் - மனைவி உறவில் சிறு குழப்பம் ஏற்பட்டாலும், குரு பார்வை காரணமாக உடனுக்குடன் பிரச்னை நீங்கி, பரஸ்பரம் அன்பு வெளிப்படும்.

மிதுனம் : திருமணம், புதுமனை கட்டுதல் போன்ற சுப காரியங்களில் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்களா? இடைஞ்சல் செய்து கொண்டிருந்த அத்தனை விவகாரங்களும் தடாலடியாய் ஒரு முடிவுக்கு வந்து, மேளம் கொட்ட வைக்கும். விருந்து, உல்லாசம், கேளிக்கை, விளையாட்டு போன்ற இனங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். புனிதப் பணிகளில் ஈடுபடவும் ஒரு சிலருக்கு வாய்ப்புகள் அமையும். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த திருப்பம் வரும். அலுவலகத்தில் ஒற்றுமை, சக ஊழியர்கள் ஒத்துழைப்பு, மேலதிகாரிகள் பாராட்டு என மனத்துக்கு உற்சாகம் தரும். பூர்வ புண்ணியஸ்தானம் சிறப்பாக இருப்பதால், தெய்வபலம் பரிபூர்ணமாக அமையும்.

கடகம் : சமூகப்பணி, பொதுநல சேவை போன்றவற்றில் ஆர்வமுள்ளவரா? இந்த வாரம் முக்கியஸ்தர்கள், தனவான்கள் மனமுவந்து உதவி செய்வார்கள். உங்கள் பணியில் மேலும் ஆர்வத்துடன் ஈடுபடும் வகையில், நல்லெண்ணம் தழைக்கும் குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் தோன்றும், என்றாலும் குரு பார்வை இருப்பதால், பெரிய பிளவு ஏற்படாமல் உடனே சமரசமாகிவிடும். அரசாங்க விவகாரம் அனுகூலமாகும். குடும்ப நலம், பூர்வீக சொத்து, வகையில் அனுகூலமான திருப்பங்கள் ஏற்படும்.

சிம்மம் : நெருங்கிய உறவினர்கள், நண்பர்களிடமிருந்து ஏதேனும் ஒரு உதவி எதிர்பார்த்துக் காத்திருப்பவரா? எச்சில் கையால் காக்கை ஓட்டாதவர்கூட, உங்கள் பிரச்னைக்குத் தோள் கொடுத்து உதவ ஓடோடி வருவார்கள். சூரியன் 4ம் இடத்தில் புதன் கேதுவுடன் மற்றும் 3ம் இடத்தில் ஆட்சியாக சுக்ரன் செவ்வாயுடன் சஞ்சாரம் என்பதால், தெளிவான மனநிலை, திருப்தியான பண வரவு, ஆரோக்கியமான உடல்நிலை நிலவும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குச் சிறுசிறு பிரச்னைகள் உண்டாகும்.

கன்னி : புதிய ஒப்பந்தங்கள், வித்தியாசமான முயற்சிகள் செய்ய நேரம் காலம் பார்த்துக் கொண்டிருப்பவரா நீங்க? இந்த வாரம் நீங்க தொட்டதெல்லாம் துலங்கும். பார்த்ததெல்லாம், பயன்தரும். உற்சாகமான மனநிலையோடு ஆரம்பியுங்க. அமர்க்களமான வெற்றி உங்களுக்கே! புதிய பொருட்களின் சேர்க்கை உண்டாகும். குருபலம் கூடியிருப்பதால் பொன், பொருள், வெள்ளி, நவரத்தினம் ஆடை, ஆபரணம் ஆகிய வகையில் ஆதாயம் உண்டாகும். சுய தொழில், வியாபாரம், இன்டஸ்ட்ரீஸ் நடத்துபவர்கள், பொருளாதார மேன்மை அடைவார்கள். பெண்களுக்கு சந்தோஷமான வாரமாக அமையும்.

துலாம் : தீராத கடன் தொல்லையால்

அக்னிசர்மா பக்கம் நவம்பர் 20 முதல் 26 வரை

நடக்கும்!

கலங்கிப் போய் நிற்பவரா நீங்க? இந்த வாரம் எதிர்பாராத தன வரவு உண்டாகி, பழைய கடன் தொல்லைகள் விலகும். அமைதியான வாழ்க்கை முறை உண்டாகும். உத்தியோகம் சம்பந்தமாகப் பயணம் மேற்கொள்ள, காரியம் உடனே சித்தியாகும். ஆரோக்கிய மேன்மை உண்டாகும். தந்தை நலனில் கவனம் தேவை. சனி கிரக ப்ரீதி செய்து சாந்தி ஹோமம் செய்வது நலம் தரும். செலவினங்கள் கட்டுக்கடங்காது போகும் வாய்ப்பிருக்கிறது என்பதால், பேச்சில் கடுமை கூடாது.


விருச்சிகம் : நீங்கள் திருமணமாகாதவரா? மகப்பேறுக்காகக் காத்திருப்பவரா? உங்கள் எண்ணம் கைகூடும் நேரம் வந்து விட்டது. குருபலம் பரிபூரணமாக நிறைந்திருப்பதால், குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். வாகன யோகம் உண்டாகும். பெண்களுக்குச் சகல காரியத்திலும் மேன்மை உண்டாகும். சரளமான பண வசதி, குதூகலம் ஏற்பட்டு, மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். ஸ்தல யாத்திரை, உல்லாச சுற்றுலா செல்ல விரும்புபவர்களுக்கு இது ஏற்ற நேரம். கமிஷன், தரகு, காண்ட்ராக்ட், இயந்திரம், இன்டஸ்ட்ரீஸ், வாகனம், போக்குவரத்து சாதனங்கள், மருத்துவம், உலோகம், இரசாயனம் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும்.

தனுசு : 'நல்ல உத்தியோகம், கை நிறைய சம்பளம்' என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருப்பவரா நீங்க? செவ்வாய், சுக்ரன் 11ல் சஞ்சாரம் என்பதால், உத்தியோக வகையில் இதுவரை இருந்து வந்த குழப்பம், சஞ்சலம் யாவும் நீங்கி அனுகூலமான போக்கு ஏற்படும். புதிய பொறுப்புகள் வந்து சேரும். உயர் பதவி வகிப்பவர்கள், வெளிநாடு பயணம் மேற்கொள்வார்கள். புதிய உத்தியோக முயற்சி வெற்றி தரும். திட்டமிட்டபடி செயல்படும். பக்குவநிலை, திறமை, நேர்மை ஆகியன வெற்றி தேடி தரும். மறைமுக, நேர்முக எதிரிகளால் எந்தவிதமான இடையூறும் நேராதபடி தெய்வ பலம் உண்டாகும்.

மகரம் : குல தெய்வ பூஜை மற்றும் பிரார்த்தனை செய்ய நல்ல சமயம் பார்த்து, காத்துக் கொண்டிருப்பவரா நீங்க? பூர்வ புண்ணியஸ்தானத்தில் ராகு என்பதால், தெய்வீகக் காரியங்கள் செய்ய, பரிபூரண பலன் உண்டாகும். ஏதோ ஒண்ணு மனசுக்கோ, உடம்புக்கோ கெடுதல் பண்ணிக்கிட்டிருந்தது அல்லவா? அந்த மாதிரியான சங்கடங்கள் நீங்கி, மனத்தில் தெளிவும், பேச்சில் திறமையும், உடலில் வசீகரமும் கூடும். சகல காரியமும் வெற்றி அடைந்து, வாழ்வில் பல துறை முன்னேற்றம் காண்பீர்கள். மனை, நிலம், வீடு, ரியல் எஸ்டேட் இந்த வகையில் அனுகூலம் உண்டாகும். சிலருக்குப் புதிய சொத்து சேர்க்கை, வீடு கட்டும் பாக்கியம் ஏற்படலாம்.

கும்பம் : கூட்டுத் தொழில் செய்பவரா நீங்க? கூட்டாளியுடன் மனக் கசப்பு ஏற்பட்டு, தொழில் பாதிப்புக்குள்ளாகி இருக்குமானால், இந்த வாரம் வேறுபாடுகள் நீங்கி, பிரச்னைகளுக்குச் சமாதானமாகத் தீர்வு ஏற்படும். சின்ன மீனைப் போட்டு, பெரிய மீன் பிடிக்கும் சாதூரியம் மிக்கவர் நீங்க என்பதால் பிரச்னைகளைச் சாமர்த்தியமாகத் தீர்ப்பீங்க. ஏற்றுமதி மற்றும் கலைத் துறையைச் சார்ந்தவர்களுக்கு யோகமான காலம். தெய்வீக காரியங்கள், மங்களமான விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

மீனம் : "எங்க ஆபீஸ்லே உண்மையா உழைக்கிறவனுக்குப் பதவி உயர்வு தர மாட்டேங்கிறாங்க" என்று சலித்துக் கொள்பவரா நீங்க? இதோ நீங்க எதிர்பார்த்த வகையில் உத்தியோக முன்னேற்றம் ஏற்படும் காலம் கனிந்து வந்திருக்கு. அலுவலகத்தில் நிலவி வந்த எதிர்ப்புகளும், இடையூறுகளும் விலகி, சுமுகமானச் சூழ்நிலை உருவாகும். உயர் அதிகாரிகளின் அனுசரணையான போக்கினால், பதவி உயர்வு கிடைக்கும். கணவன் - மனைவி உறவு நிலை இனிமையாக இருக்கும். வெளிநாட்டிலிருக்கும் நெருங்கிய நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் பரஸ்பரம் அனுகூலம் உண்டாகும்.



இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பிடித்திருக்கும் தமிழக வீரர் பாலாஜிக்கு (கன்னி) தொட்டதெல்லாம் துலங்குமாம்.

குறையொன்றுமில்லை

தன்னையே தரும் கற்பகம் அந்த பரமாத்மா என்று சொன்னேன். 'நீயே வேண்டும்' என்று கேட்பவர்களுக்குத் தன்னையும் கொடுத்து எல்லாவற்றையும் கொடுப்பான்.

பகவானையே விரும்பக் கூடியவர்களுக்கு முதலில் என்ன கிடைக்கும்...? மோக்ஷத்தைக் கொடுக்கும்படியான எம்பெருமான் முதலில் சரீர ஆரோக்கியத்தைத் தருவார். அது இருந்தால் தானே மற்றதெல்லாம்! சரீர ஆரோக்கியம் இல்லாவிட்டால் உபன்யாஸத்துக்கு வர முடியாது; உபன்யாஸம் பண்ணவும் முடியாது!

இப்படி சரீர ஆரோக்யத்தை நமக்கு மாத்திரம் இல்லை, உலகத்து ஜந்துக்கள் அனைத்துக்கும் கொடுக்கிறான் பரமாத்மா.

கொசுவைப் பார்த்து ஒருத்தர், 'இது எதற்கு?' என்று கேட்டார். 'அநியாயம் பண்ணுகிறது இது; கடிக்கிறது. தூங்க விடமாட்டேன் என்கிறது. நன்றாகத் தூக்கம் வருகிற சமயத்தில் வந்து கடிக்கிறது. இந்தக் கொசுவை பகவான் எதற்கு சிருஷ்டி பண்ணினார்?" என்று வைய ஆரம்பித்தார்.

இதைக் கேட்டுக் கொண்டேயிருந்தது கொசு! அது என்ன பண்ணிற்று..? தன்னுடைய கூட்டத்தினரையெல்லாம் கூட்டிற்று. சொந்தங்களையெல்லாம் ஒன்று திரட்டி, 'இந்த மனிதன் எதற்கு?' என்று கேட்டது! அதற்கு யார் பதில் சொல்வது? என்ன பதில் சொல்வது?

ஆதிசங்கர பகவத் பாதாள், இந்த மனித வர்க்கத்தையே ஒரு ஜந்து என்கிறார்!

கொசுவும் ஒரு ஜந்துதான். அதற்குள்ளே இருக்கிற ஆத்மாவுக்கும், நமக்குள்ளே இருக்கிற ஆத்மாவுக்கும் வித்யாசம் உண்டோ...? ஸ்வரூபத்திலே இரண்டும் ஒன்று தான்! அதற்கு வேறு அவயவங்கள் கொடுத்திருக்கிறான் பரமாத்மா. நமக்கு விசேஷமாக ஞானம், வேறு சில அவயவங்கள். சிருஷ்டியிலே கொசு எதற்கு என்று கேட்டால், 'நாம் எதற்கு?' என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

உலக சிருஷ்டியிலே எதையும் எதற்கு என்று நாம் கேட்கக் கூடாது. எல்லாமே வேண்டும் என்ற நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்தந்த நிலையிலே அந்தந்தப் பிராணிகளுக்கு, அந்த பட்சி, ஊர்வன, பறப்பன சமஸ்த பதார்த்தங்கள் அனைத்துக்கும் பலனைக் கொடுக்கிறான் பரமாத்மா.

பரமாத்மாவினுடைய சர்வக்ஞத்வத்தை நாம் பார்க்க வேண்டும். யார் யார் என்ன பண்ணினார்கள், அவர்களுக்கு என்ன கொடுக்க வேண்டும், என்று காலத்திலே பார்த்துப் பார்த்துக் கொடுக்கிறான்.

அவன் என்ன கொடுக்கிறான் என்பது வேதத்திலே ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

இல்லையானால் கீதையிலே, 'பலனைப் பற்றிக் கவலைப்படாதே' என்று சொல்லுவானா...?


'பலனைப் பற்றி நீ நினைக்காதே, பலனை விழையாதே; பலனுக்கு அதிகாரி நான்' என்கிறான்.

ஹிதோபதேசத்திலே ஓர் அழகான சுலோகம் உண்டு:

முயற்சியை உடையவன், வேலைகளைச் செய்கிறவன், அதற்காக உழைக்கிறவன், எப் போது பார்த்தாலும் உழைத்துக் கொண்டேயிருப்பவன் – இத்தகையவர்களைத்தான் மஹாலக்ஷ்மி வந்து அடைகிறாள்.

15

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



ஒன்றுமே பண்ணாமல் அல்பக்ஞர்களாக இருக்கிறார்களே... அறிவிலிகள், தெய்வமே கொடுக்கும் என்று வீணாகப் பேசுகிறார்கள்!

அந்தப் பரப்ரும்மத்தை ஒதுக்கி அப்படி வை! **உன்னுடைய பௌருஷத்தினால்,** அந்த பகவத் பலத்தை முன்னிட்டுக் கொண்டு நீ செயலில் ஈடுபடு. நீ உழைத்து விட்டாய்; பலன் கிடைத்ததானால் சந்தோஷம். கிடைக்காது போனால் இங்கே என்ன தோஷம்!

உழைக்காமல் இருந்துவிட்டு, 'கிடைக்கவில்லை' என்று சொல்வதை விட, உழைத்துக் கிடைக்கவில்லையானால் என்ன தோஷம் இங்கே உனக்கு! உழைத்தும் உனக்குக் கிடைக்கவில்லையானால், அந்த தோஷம் பரமாத்மாவுக்கல்லவா போய்ச் சேரும்! அந்த தோஷத்தைப் பரமாத்மா வரிப்பானா! உழைக்கிறவர்களுக்கு ஒரு நாளும் பயனில்லாமல் போகாது என்கிற சாஸ்திரார்த்தத்தை நாம் உணரவேண்டும்.

பலனைக் கொடுப்பவன் பரமாத்மா என்பதனாலேதான், சர்வபலப்ரதத்வம் என்ற உயர்ந்த லட்சணம் எம்பெருமானிடத்திலே இருக்கிறது. இல்லையானால் அவன் பரமாத்மா ஆக மாட்டான். எல்லோருக்கும் உயர்ந்த பலன்களை அந்தந்த உரிய காலத்திலே எவ்வெப்போது கொடுக்க வேண்டுமோ, எந்த இடத்திலே கொடுக்க வேண்டுமோ, அங்கே வந்து உபகாரம் பண்ணுகிறான்.

பெரியவாச்சான் பிள்ளை என்கிற ஆசார்யர் திருப்பாவைக்கு வியாக்யானம் பண்ணியிருக்கிறார். மூவாயிரப்படி என்று அதற்கு பெயர்.

'முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்'

என்கிற பாசுரத்திலே, 'முன்' சென்று என்கிற பதத்துக்கு விளக்கம் சொல்கிறார்.

காலத்திலே முன் வந்து ரக்ஷிப்பவன் பரமாத்மா! இடத்திலே முன் வந்து ரக்ஷிப்பவன் பரமாத்மா; ஸ்தானத்திலே முன் வந்து ரக்ஷிப்பவன் பரமாத்மா.

காலத்திலே முன் வந்து ரக்ஷிப்பவன் என்பது எங்கே தெரிகிறது...?

அம்பரீஷ சக்கரவர்த்தி பகவானை ஆராதனம் பண்ணிக் கொண்டிருக்கிறான். நிறைய யக்ஞங்களெல்லாம் பண்ணினான். நூறு அசுவமேத யக்ஞங்கள் பண்ணினான்.

ஒரு அசுவமேதமே பிரும்மப் பிரயத்தனம்! நூறு அசுவமேதம் பண்ணி எல்லாவற்றையும் பகவத் அர்ப்பணம் பண்ணினான். பலனை எதிர்பார்க்காத நிஷ்காம்ய கர்மயோகி அவன்.

பலனை விழையாமல் பகவான் ப்ரீதிக்காகப் பண்ணக்கூடியதெல்லாம் கர்மயோகம்தான். பலனை உத்தேசித்துப் பண்ணுவது எல்லாம் கர்மா. ச்ரேயஸ், ப்ரேயஸ் என்று பெயர் இதற்கு.

பிரதிபலனை எதிர்பார்த்துப் பண்ணுவதெல்லாம் ப்ரேயஸ்; அவ்வாறு எதிர்பாராமல் பண்ணுவது ச்ரேயஸ்.

ஒருத்தர் நன்றாக ச்ரேயஸோடு இருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்? நல்ல பகவத் அனுக்கிரஹத்தோடு இருக்கிறார் என்று அர்த்தம்.

அம்பரீஷனுடைய பூஜா மந்திரத்திலே — அவன் பூஜை பண்ணுகிற இடத்திலே — பகவான் பிரத்யக்ஷமானான். அவன் அதைத் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை! நிஷ்காம்யமாக, பலனை எதிர்பார்க்காமல் அவன் பண்ணுவதைப் பார்த்தான்; ஒரு நாள் அவன் முன்னே தோன்றி விட்டான் பகவான்.

அம்பரீஷனுடைய பெயர் வேதத்தி

கண்ணாடியில் சினிமா!



பயணங்களின்போது மற்றவர்களுக்குத் தொல்லை தராமல் நீங்கள் விரும்பிய திரைப் படத்தைப் பார்க்க வேண்டுமா? போடுங்கள் இந்த மூக்குக் கண்ணாடியை! சிறிய காசட் மூலம், இந்தக் கண்ணாடி திரையில் படம் தெரியும். வசனங்கள், ஹெட் ஃபோன் மூலம் வந்து விழும். நூறு கிராம் எடையே கொண்ட இதன் விலை ஐம்பத்தைந்தாயிரம் ரூபாய்!

— பாரீஸ் பார்த்தசாரதி


லேயே இடம் பெற்றிருக்கிறது. ஏனென்றால், அவனை ஒரு தடவை நினைத்தால், அவ்வாறு நினைக்கிறவர் பிரசாதத்துக்குக் கஷ்டப்படவே மாட்டார். பிரசாதம் கிடைத்துக் கொண்டே இருக்குமாம் அவருக்கு. எங்கே போனாலும் உட்கார வைத்துச் சாப்பாடு போடுவார்கள்.

இப்படிப்பட்ட அம்பரீஷனைப் பார்த்து பகவான், அவன் கேட்காமலேயே கொடுக்கிறான் 'இதை வைத்துக் கொள் நீ' என்று தனது வலது கரத்திலே உள்ள சுதர்ஸன ஆழ்வாரை எடுத்துக் கொடுத்து விட்டான்.

அவன் பகவத் பிரசாதம் என்று வாங்கி வைத்து, சுதர்ஸன ஆழ்வாரை நித்யம் பூஜை பண்ணுகிறான்.

முதல் பக்கத்துக் கவிஞர்!

மகாகவி பாரதியின் கொள்ளுப்பேரன் ராஜ்குமார் பாரதியுடைய மகன் நிரஞ்சன் பாரதி. மதுரவாயிலில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். என்ஜினீயரிங் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்று வருகிறார்.



கொடுத்தானே பகவான்... அவன்போய் விட்டு வருகிறேன்' என்று உடனே புறப்பட்டுப் போய்விட்டான்!

உத்தம புருஷர்கள் அப்படித்தான். தங்களிடமுள்ள உத்தமமான விஷயத்தைத்தான் மற்றவர்களிடத்திலே கொடுப்பார்கள். உபயோகமில்லை என்று மூலையிலே போட்டிருக்கிறதை மூட்டை கட்டி, 'இது மொத்தம் உமக்குத்தான். வாங்கிக் கொண்டு போங்கள்!' என்பவர்கள் உத்தம புருஷர்கள் அல்லர்.

சுதர்ஸன சக்கரமானது மிக உயர்ந்த விஷயமல்லவா! அதையே கொடுத்துவிட்டு பகவான் வைகுண்டம் போய்விட்டான்.

பின்னாலே துர்வாஸ மஹரிஷி இந்த அம்பரீஷனைப் படாத பாடு படுத்தப் போகிறார். அன்றைய தினம் துவாதசி விரதம் பண்ண முடியாமல் இவன் தவிக்கப் போகிறான். அப்போது சுதர்ஸன ஆழ்வார்தான் அம்பரீஷனைக் காக்கப் போகிறார்!

இதையெல்லாம் மனத்திலே கொண்டுதான், அம்பரீஷனுக்கு எந்த இடரும் வரக்கூடாது என்று, அதற்கு முன்பே வந்து கொடுத்துவிட்டுப் போய்விட்டான் பகவான். அப்படியானால் அந்த ரக்ஷகத்திலே நாம் எவ்வளவு விச்வாசம் வைக்க வேண்டும்! அந்த எம்பெருமான் ரக்ஷகத்திலே எத்தனைப் பாதுகாப்பு! **அவன்** அல்லவோ நமக்கு ரக்ஷகன்!

ஈடு முப்பத்தாறாயிரப் படியிலே ரொம்ப அழகாகச் சொல்கிறார்:

'ஓடத்திலே செல்பவர்கள், தெப்பம் கரையை அடைவதற்கு முன்பு, அதனிடத்தில் கொண்ட விச்வாசத்தைக்கூட அவனிடத்தில் கொண்டாரில்லையே!'

ஒரு கப்பலில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வியாபாரம் பண்ணக் கூடியவர், அதில் ஏறிக் கொண்டு அந்தந்த ஊருக்குப் போகிறார். 'அந்த ஊருக்குப் போகிறோம், இந்த ஊருக்குப் போகிறோம்' என்று ஜலத்திலேயே போய்க் கொண்டிருக்கிறார். எப்போது என்ன ஆகும் என்று தெரியாது. ஆனால் அவருக்கு அவ்வளவு விச்வாசம் அந்தத் தெப்பத்தினிடத்திலே! அவர் எடுத்துப் போகிற சரக்கு, அந்த வியாபாரம் – அத்தனையினிடத்திலேயும் அவ்வளவு விச்வாசம்!

அந்த அளவு விச்வாசம் கூட எம்பெருமானிடத்திலே நமக்கு இல்லையானால், நாம் வாழ்ந்து என்ன பிரயோஜனம்!

ஒரு கப்பலை நம்புகிறோம், ஒரு விமானத்தை நம்புகிறோம்... அந்த மாதிரி எம்பெருமானை நம்ப வேண்டாமா!

(வளரும்)

பாட்டியாலா டார்க்னஸ்
ட்ராஜிடி

டி.வி சரித்திரத்தில், மிகக் குறுகிய காலத்தில், படு பாப்புலர் ஆகியிருக்கும் நிகழ்ச்சி ஒன்று உண்டென்றால் அது 'ட்ராஜிடி டைம்ஸ்'தான் என் பதில் யாருக்கும் சந்தேகமிருக்க முடியாது - (இருப்பவர்கள் அதைக் காப்பி அடித்து மற்ற சானல்கள் வழங்கும் அரை டஜன் அறுவைகளைப் பார்த்துக் கொள்ளலாம்) - இந் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் மிஸ் குயில் ஷ்யாமியை (ஷ்யாம் என்பதே ஒரு ஸ்டைலுக்கு ஷ்யாமியானது) உங்களுக்காக பிரத்யேகமாக சந்தித்து, 'டி.டை'க்குப் பின்னாலிருக்கும் நிஜக் கதையை வெளிச்சமிடுவதே எங்கள் புதிய பகுதியான 'இது சதையல்ல - புஜம்'மின் குறிக்கோள்.

அதன் நிமித்தம், மிஸ் குயிலைச் சந்தித்தபோது, அவர் விக்கி விக்கித் தண்ணீர் அடித்... ச்சீ... குடித்துக் கொண்டிருந்தார். நம்மைக் கண்டதும், "வாங்க... ஹக்... வாங்க...ஹக்...க" என்று விக்கிக் கொண்டே வரவேற்றார். அவர் ஒரு நிலைக்கு வந்ததும், நாம் 'டி.டை' பிறந்த கதைக்குத் தாவினோம்.

"அதை ஏன் கேக்கறீங்க... அது



குயிலின் டைம்ஸ்

ஒரு ஹாஸ்யக் கதை'' என்றவாறே ஆரம்பித்தார்.

"நான் நடந்த கதையைச் சொல்லிட றேன்... அதை உங்களோட வச்சிக்குங்க.'' என்றார்.

இப்போது உங்களிடமும் அதையே தான் சொல்கிறோம்; 'இதை உங்களோட வச்சிக்குங்க...ம்ம்??''

சரி, கதைக்கு வருவோமா? 'சம்பவத்தன்று, மிஸ் குயிலைப் பெண் பார்க்க, டாக்டர் சுப்ரமண்யம் வந்திருந்தார். வழக்கம் போல, வந்தவரை குயிலுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவரிடம் முகம் கொடுத்துப் பேசக்கூட இல்லை... 'பெண் வெட்கப்படுது' என்று பெற்றோர் சமாளித்தனர்.

ஆனால் குயில் குடும்பத்தாருக்கு மாப்பிள்ளையையும், அவர்களுக்குப் பெண்ணையும் ரொம்பப் பிடித்துவிட்டது. ''அவுங்களை வழியனுப்பிவிட்டு, கோயிலுக்குப் போயி, உனக்கு நல்ல புத்தியைக் கொடுக்கச் சொல்லி பகவானை வேண்டிக்கிட்டு வர்றோம். அம்மா காட்டமாக இவளிடம் நறநறத்துவிட்டு, அப்பா, தம்பியுடன் கிளம்பிவிட்டாள். 'நீ இவனுக்கு 'யெஸ்' சொல்லத்தான் வேண்டும்' என்று அதற்கு அர்த்தம்.

இவள் எரிச்சலுடன் தனிமையில் விடப்பட்டாள். சிறிது நேரத்துக்குப் பின் டெலிஃபோன் அலறியது. அசிரத்தையாக எடுத்தவளை, அந்தப் பக்கத்திலிருந்து வந்த "ஹலோ... மிஸ் குயில் இருக்காங்களா?'' என்ற குரல் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. அட... காமெடி டைம்லிருந்து ஃபோனா...???

''ஹையோ... நம்பவே முடியல்லீங்க... உங்ககிட்டருந்து கால் வரும்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேங்க... ஹையோ... எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்குங்க...'' அவள் ரிசீவரிலேயே உருகி வழிந்தாள்.

அந்தப் பக்க மனிதருக்கு அதைவிட ஆச்சர்யம்..."என் கிட்டேருந்து ஃபோனை எதிர்பார்த்தீங்களா...?''

''ஆமாம்... நான் போட்ட லெட்டர் கிடைச்சதில்லை?''

''என்ன... உங்களைப் பத்தி, உங்க அம்மா, அப்பா, தம்பின்னு ஃபாமிலி டீடெய்ல்லெல்லாம் குடுத்திருந்தது... நீங்களா?''

''ஆமாங்க; அந்த 'பீகாக் காட்' மேல சத்தியமா!'' பீகாக் காட் என்றதும் டெலிஃபோன் மனிதருக்குக் குஷியாகி விட்டது. ''சரி... சரிங்க... உங்களை நம்பலாமா? ஆமாம்... வீட்ல வேறு யாரும்



ஜெயந்தீர்ராஜ்

இல்லீங்களா?''

''ஐயோ... இப்பப் பாத்து எல்லாரும் கோயிலுக்குப் போயிட்டாங்களே... இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பாங்க. அவங்களுக்கெல்லாம் உங்களை ரொம்பப் பிடிக்கும். முக்கியமா என் தம்பிக்கு...''

''ஏங்க உங்களுக்குப் பிடிக்காதா?''

''ஹையோ... அப்பிடி எல்லாம் இல்லீங்க... எனக்கும் ரொம்பப் பிடிக்கும்; அதுவும் அசத்தலான உங்க டீ ஷர்ட்டு, காஷுவலான உங்க பேச்சு, கலகலப்பான சிரிப்பு... உங்களைப் பார்க்காம தூங்கவே மாட்டேங்க...'' குரலில் பத்து டன் ஐஸின் குளிர்ச்சி ரிஸீவர் வழியாக இறங்க, அந்தப் பக்கத்து மனிதருக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

''ஏங்க... என் ஃபோட்டோ அத்தனை பயமுறுத்துமா உங்களை...? பார்த்ததும் கண்ணை மூடிட்டுத் தூங்கிடுவீங்களா?''

''ஆஹ்... ஹையோ... ரொம்ப தமாஷாப் பேசறீங்க... ஃபோட்டோ எதுக்குங்க? அதான் சின்னத்திரையில உங்களைத் தினம் பாக்குறேனே...?''

''சின்னத் திரையா... ஓ நீங்க இன்டர் நெட் பேர்வழியாச்சே... கம்ப்யூட்டர் என் ஜினீயரில்லையா? உலகத்தையே சின்னத் திரைக்குள்ள அடக்கிடுவீங்களே... ஆமாம் உங்களுக்கு இன்னும் என்னவெல்லாம் தெரியும்? குரல் ஸ்வீட்டா இருக்கே... பாடுவீங்களா?''

''பாட்டா...? ஐயய்யய்யோ...!''

''ஒரே ஒரு பாட்டுப் பாடுங்களேன்... ப்ளீஸ்...''

''ம்...ம்...சரி... உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல... உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல... அவ்ளோதான்.''

''போதுமே.. இது போதுமே... அப்புறம்... நல்லா சமைப்பீங்களா? வீட்ல சமைச்சுப் பழக்கம் உண்டா?''

''ஹையோ... கொஞ்சம் கொஞ்சம் சமைக்க வரும்...வீட்ல சமையல் எல்லாம் அம்மாதாங்க... அட.... எங்கம்மாவே வந்துட்டாங்களே.... அம்மா... சீக்கிரம் வாயேன்-ஃபோன்ல யாரு பேசறாங்க பாரு...''

அடித்துப் பிடித்து, ரிசீவரைக் கையில் வாங்கி... ''ஹலோ... யாருங்க பேசறது? அட... பொண்ணு பாத்துட்டுப் போன டாக்டர் சுப்ரமணியமா? உங்களுக்குப் பொண்ணைப் பிடிச்சிடுச்சா? ரொம்ப சந்தோஷம்... ஏங்க வாங்களேன்... மாப்பிள்ளை பேசறாருங்க'' என்று அம்மா, அப்பாவை நோக்கிப் படபடக்கவும், குயிலுக்கு மனசு தடதடத்தது.

''என்னம்மா பேத்தற? டாக்டர் சுப்ரமணியமா? நான் காமெடி டைம்ஸ் விருந்து போன்னு நினைச்சுனா பேசிக்கிட்டிருந்தேன்....?'' அவள் அலறியது மறுமுனை வரை தெள்ளத் தெளிவாகக் கேட்டது.

அப்புறமென்ன? தொடர்ந்து பேசிக்கொண்டிருக்க, சுப்ரமணியம் என்ன சுண்டைக்காய் பயலா? சுரணையில்லாத சோணகிரியா? பட்டென்று டெலிஃபோன் துண்டிக்கப்பட்டது; சம்பந்தமும் தான்.

''நமது வனவிலங்கு சரணாலயத்தில் இருக்கும் புலி ஒன்று, ரெண்டு நாளாகச் சாப்பிடலையா! ஏன்? மேனேஜரைக் கூப்பிடு!''

''ரெண்டு நாளாதான் அவரைக் காணோமே சார்!''

- து. பூவராகன்



மறுநாள் என் நெருங்கிய தோழியும், டீ.வி புரோக்ராமருமான ரூபாகிட்ட இதை நான் கொட்ட, அவ அப்படியே அள்ளிக்கிட்டு இப்படிக் காமெடியில ஆரம்பிச்சு டிராஜிடியில முடியற ஸீன்சை வச்சு நாம ஏன் ட்ராஜிடி டைம்ஸ்ன்னு ஆரம்பிக்கக் கூடாதுன்னா... இப்படிப் பிறந்ததுதான் 'டி.டை'. அது சரித்திரம் படைச்சதுதான் உங்களுக்குத் தெரியுமே என்று முடித்தார் குயில் ஷ்யாமி! இப்போது உங்களுக்கும் தெரிந்துவிட்டதல்லவா? ○



கொழு கொழுப்பு!

"என்ன கொழுப்பா?"

கிண்டலுக்குக் கேட்கப்படும் கேள்விதான்.

ஆனால் அமெரிக்காவில் கிளிவ்லேண்ட் கிளினிக்கின் டாக்டர் எரிக் டோபால் அப்படிக் கேட்க மாட்டார். ஏனென்றால் மாரடைப்புக்கு முக்கியக் காரணியான கொலஸ்ட்ரால், இரத்த அழுத்தம் போன்றவற்றைவிட, அதிக ஆபத்தை விளைவிக்கும் பொருள் ஒன்று இரத்தத்தில் இருப்பதைக் கண்டு பிடித்திருக் கிறார்கள் பாஸ்டனில்.

இருபத்தெட்டாயிரம் பேர்களுக்குச் சோதனை செய்து பார்த்துவிட்டுத்தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

நம் உடலில் காயம்பட்டால் அதை சாக் காக வைத்து உள்ளே நுழைகிற கிருமிகளைத் தடுக்கவும், காயத்தை ஆற்றவும் நம் இரத்தத் தில் சி.ஆர்.பி. என்னும் ரசாயனமிருக்கிறது. இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய்களின் பலமான சுவரை இது பலவீனமாக்கி, வீக் கத்தை ஏற்படுத்துகிறது.

இந்த 'அனுகூலக் சத்ரு'வால் காயங்களை ஆற்றவும் முடியும். இரத்தக் குழாயின் சுவர்களில் பெரிய, வலியற்ற வீக்கத்தை ஏற் படுத்தி, வெடிக்க வைக்கவும் முடியும். இதனால் கொழுப்பும், இரத்த அழுத்தமும் ஏற்படுத்தும் மாரடைப்பைவிட, வேக மாக நம்மை 'மேலே' அனுப்பி வைத்துவிடும் இது.

இந்த சி.ஆர்.பி.யை அளந்து சோதனை செய்ய ஒன்றும் அதிகம் செலவாகாது. ஆனால் இதன் அளவைக் கொண்டு நோயாளி பதினைந்து முதல் இருபத்தைந்து வருடங்கள் வரை, மாரடைப்பை எந்த அளவுக்குத் தாக்குப் பிடிக்க முடியுமென்று நிர்ணயிக்கலாம் என்கிறார் அமெரிக்க ஹார்ட் அசோஸியேஷன் டைரக்டர் டாக்டர் சிட்னி ஸ்மித். "பரிசோதித்துத் தெரிந்து கொண்டால் மீதி இருக்கும் நாட்களில் உணவு, மற்ற பழக்கங்கள் அனைத்திலும் தகுந்த படி மாற்றங்களைச் செய்து கொண்டு மாரடைப்பைத் தவிர்க்கலாமே" என்கிறார்.

ஐம்பது நிபுணர்களை இதற்கென வைத்து ஆராய்ந்து, அந்த அசோஸியேஷன், இந்தச் சோதனையை இதய நோயாளிகளுக்குச் செய்ய வேண்டும் என்று உலகம் முழு தும் வற்புறுத்தலாமே என்று யோசித்து வருகிறது.

ஆராய்ச்சியாளர் ரிட்கெர் ஏறக்குறைய இருபத்தேழா யிரம் பேர்களின் இறுதி ரிப்போர்ட்களை ஆராய்ந்தார் கொலஸ்ட்ரால் கட்டுப்பாட்டில் இருந்தும் இந்த சி.ஆர்.பி. யின் அளவு கூடியதால்தான் அவர்கள் காலமானார்கள் என்று நிரூபித்து, நியூ இங்கிலாந்து மருத்துவ ஜர்ன லில் வெளியிட்டிருக்கிறார்.

இதில் பெண்களுக்குச் சலுகை வேறு அளிக்கிறது, அந்த சி.ஆர்.பி. ஆண்களை விடப் பெண்களுக்கு இதன் அளவு, லிட்டருக்கு ஒன் றரை மில்லி கிராம் குறை வாகவே இருக்கிறதாம். ஆபத்து குறைவு.

சரி, இதயமே இல்லாத நம்மூர் அரசியல்வாதிகளுக் கும் தீவிரவாதிகளுக்கும் இந்த சி.ஆர்.பி.யின் அளவு எவ்வளவு இருக்கும்?

ரிட்கெர்ரைதான் ஆரா யச் சொல்ல வேண்டும்?

- சேனன்

மெல்லிசைக் கனேபரங்கள் இல்லாத ரிசப்ஷனுக்கு மாண்டலின் ஸ்ரீநிவாஸின் கேஸட் அழகு சேர்த்துக் கொண்டிருந்தது. நாகரிக ஆடைகளில் மைதிலியும் மாப்பிள்ளையும், களைப்பு மறைத்து கைகுலுக்கிக் கொண்டிருந்தார்கள். வண்ணக்காகிதப் பரிசுப் பொருட்களைச் சில வாண்டுகள் வாங்கி இரு தரப்பிலும் அடுக்கிக் கொண்டிருந்தார்கள். வீடியோ வெளிச்சம். ஜிகினாத் தோரணம். ஆரத் தழுவிய அன்பு வாழ்த்துகள்.

மினி தொடர் - 4



ஹாய்...!

ஓடிக் களைத்த அனுவின் அப்பா, கூட்டுப் பெருங்காயப் பையுடன் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்தார். அம்மாவுக்கு இன்னும் களைப்பு முற்றவில்லை. தன் சிறந்த பட்டுப் புடைவையில், போட்டோகிராபரின் எல்லா ஃப்ரேம்களிலும் அவளும் இருந்தாள்.

சந்தேகமென்ன? பெண்ணின் திருமணம், சாதனைதான். லட்சம் ஒரு பொருட்டல்ல. தூக்கமற்ற இரவுகளில் இட்டமிட்டு, மஞ்சள் தடவிய ரூல்ட் பேப்பரில் நினைவுக்கு வந்ததையெல்லாம் பிள்ளையார் சுழிப் பாது காப்பில் எழுதிவைத்து, ஒவ்வொரு பூவாய் எடுத்துக் கோத்ததில், இதோ மைதிலி மாலையுடன் புன்னகைக்கிறாள்.

"அடுத்தது நீதாண்டி!" என்றாள் கே.கே.நகர் பெரியம்மா.

அனுவின் பார்வை அவ்வப்போது அந்த ஜெமினி இரட்டையரின் மீது மோதிக் கடந்து கொண்டிருந்தது.

ரிசப்ஷனோடு சரி, கட்டுசாதத்துக்கு இருக்கப் போவதில்லை என்பதை இருவருமே தனித் தனியாக வந்து சொல்லியிருந்தார்கள், முன்னதாக.

அதற்குள் ஏதாவது அற்புதம் நிகழ்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்களா என்ன?

நினைக்கப் பிடிக்கும் நபர்களை எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு சுகம்தான். அதிலும் ஒரு திருட்டு ரகசியம் இணையும்போது ஏற்படும் குறுகுறுப்புக்குள் வடிவம் புரியாத கவிதை ஒன்று ஒளிந்திருக்கிறது. உன் பார்வை. உன் புன்னகை. உன் கன்னம். உன் சொற்கள்.

உன் நடை. உன் நளினம். இவற்றின் மொத்தக் கலவை ஒரு கடுகனவுதான் இருக்கிறது. காலி டப்பாவில் உருளும் ஒற்றைக் கடுகாக அதுதான் உடலெங்கும், மனமெங்கும் உருண்டு சிலிர்ப் பேர்ப்படுத்துகிறது.

அன்றைய தினத்தில் மட்டும் இரண்டு பேரும் பல முறை வலிந்து ஏற்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்களில் அவளைக் கவரப் பல பிரத்யேக முயற்சிகளில் ஈடுபட்டார்கள். வஞ்சனையற்ற புன்னகையில், போலி நாணமற்ற வெளிப்பாட்டில், தோழமை கலந்த அணுகுமுறையில் அவள் இருவரையும் கவர்ந்திருந்தாள்.



பா. ராகவன்

அவளுக்கும் அவர்களில் ஒருவனைப் பிடித்திருந்தது. வாழைப்பழத் தோலை உரிப்பது போல, சகோதரர்கள் எனும் வடிவத்திலிருந்து அவனை மட்டும் தனி மனிதனாகப் பிரித்து வைத்து, ஏழெட்டு முறை சிந்தித்துப் பார்த்தாள். அழகாக இருக்கிறான். துறுதுறுவென்றிருக்கிறான். புத்திசாலியாகவும் கண்ணியம்மிக்கவனாகவும் இருக்கிறான்.

அவனது சகோதரனுக்கும் இவையெல்லாம் இருக்கின்றனதான். ஆயினும் இவனிடம் மட்டும் பிரத்தியேகமாகத் தனக்குத் தென்படுவது எது? அவளுக்குப் பிடிபடவில்லை. மனமெனும் மாயாஜாலக் குரங்கு. சகோதரர்கள் இரண்டு பேரும் மீண்டும் ஒன்றாக அவளிடம் வந்தார்கள்.

"சாப்பிடக் கிளம்பறோம். நாழியாச்சு."

தவிர்க்க முடியாத காரணங்களால் அவர்களது அப்பாவும் அம்மாவும் கல்யாணத்துக்கு

வர முடியவில்லை. அனுவும் அவளது குடும்பமும் மன்னிக்க வேண்டும். அவர்களது பெற்றோர், ஊருக்குப் போகும்போது சொல்லி விட்டுப் போனதால்தான் ஜானவாசத்திலிருந்து ரிசப்ஷன் வரை அங்கே இங்கே நகராமல் முழுக் கல்யாணத்துக்கும் இரண்டு பேரும் இருந்திருக்கிறார்கள்.

"சமத்துப் பசங்க" என்றாள் அனு. அவளது கிண்டலை அவர்கள் சேர்ந்து ரசித்தார்கள். ஆனால் தனித்தனியே இன்னும் ஏதோ எதிர் பார்ப்பதை அவர்களது கண்கள் தெரிவித்தன.

"சாப்பிட வாங்க" என்று அனு அழைத்தாள். பந்தியில் அவர்களைப் பிரத்தியேகமாகக் கவனித்தாள். தன் மனத்தைத் தட்டியவனுக்கு மட்டும் கூடுதலாக ஒரு கரண்டி பாயசம் விட்டாள்.

அப்பா, அம்மாவை அழைத்து அறிமுகப் படுத்தினான். மைதிலியுடன் போட்டோவுக்கு நின்றபோது அவள் கையைக் கிள்ளி, வெளிப் படுத்த முடியாததை உணரச் செய்தான்.

அவர்கள் சற்று நகர்ந்ததும் மைதிலி, "யார் அப்ளிகேஷன் போட்டது?" என்று கண் சிமிட்டி ரகசியமாகக் கேட்டாள்.

"ரெண்டுமே" என்றாள் அனு.

"அடிப்பாவி!"

அனுவுக்கு அந்தக் கள்ளப் பூரிப்பு மிகவும் பிடித்திருந்தது. விரும்பி அனுபவித்தாள்.

சாப்பிட்ட விநாடியே கிளம்பிவிடக் கூடாது என்கிற மரியாதை கருதி, அவர்கள் இருவரும் காற்றுக்கு முகம் நீட்டி வாசல் பார்த்து அமர்ந்தார்கள்.

மண்டபம் தலைகளால் நிரம்பியிருந்தது. வெற்றிபெற்ற கிரிக்கெட் அணியின் மானேஜர் மாதிரி அப்பா யாரிடமோ தன் வெற்றியின் காரணத்தை சாங்கோபாங்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"பிளானிங்தான் சார்! மைதிலி கல்யாணம்ங்கறது ஒரு ஐந்தாண்டுத் திட்டம். முதல் மூணு வருஷம் வெறும் சாத்துமுது சாதம் சாப்ட்டுண்டிருந்து, முக்காவாசி தயாராயிட்டேன். அடுத்த ரெண்டு வருஷமும் எக்ஸிக்யூஷன் மட்டும்தான். கூடவே, அடுத்தவளுக்காக சாத்துமுது சாதம் சாப்பிட ஆரம்பிச்சாச்சு. இன்னும் மூணு வருஷம்... தட்ஸ் ஆல்!"

இந்தப் பேச்சு காதில் விழுந்தபோது அனுவுக்கு அப்பாவின் மேல் பாவமாக இருந்தது. தாங்கள் நல்ல பெண்களாக இருப்பதனால்தான் அப்பாவால் நல்ல தகப்பனாக இருக்க முடிந்ததோ என்று எண்ணிப் பார்த்தாள்.

சேச்சே. கடமை என்பது இருபுறம் சீவிய பென்சில் அல்லவா. மேலும் இது கடமை மட்டும்தானா? மகள் கல்யாணம் என்பது பெற்றவர்களின் இருபதாண்டுக் கனவுத் திட்டமல்லவா.

"அனு..." எங்கிருந்தோ அம்மா கூப்பிட்டாள்.

"எல்லாரும் கிளம்பறா பார். வெத்தலை பாக்கு கவனிச்சுக்கோ. ரூம்ல ஏழு பேஸின் தனியா எடுத்து வெச்சிருக்கேன். அதை பீரோல வெச்சுட்டு வா. சும்மா பேசிண்டு நிக்காதே..."

இறுதிக்கட்ட வேலைகள் நெருங்கும்போது மட்டும் ஏனோ அலுப்பாகிவிடுகிறது. படுத்துத் தூங்கலாம்போல, கால் நீட்டி உட்கார்ந்து கதைபேசலாம் போல.

அவள், ஏழு எவர்சில்வர் பேஸின்களைப் பூட்டி வைக்க அறைக்குச் சென்றபோது, இரண்டு பேரும் எழுந்து வந்தார்கள்.

"ஹாய்..."

"ஹாய்..."

"கிளம்பறோம்."

"உம்."

"கல்யாணம் நல்லா கிராண்டா பண்ணிட்டீங்க."

"தேங்க்ஸ். இதை சம்பந்தி மாமாவும் மாமியும் சொன்னா, எங்கப்பா ரொம்ப சந்தோஷப் படுவா."

"எல்லாரும் அப்படித்தான் ஃபீல் பண்றா. இன்ஃபாக்ட் எங்க அத்திம்பேர் நொடிக்கொருதரம் சொல்லிண்டு தான் இருக்கார்."

அவனுக்கு அத்திம்பேர் யார் என்று ஒரு கணம் உறவுக் கணக்குப் போட்டுப் பார்த்து, மாப்பிள்ளையின் அப்பாவைத்தான் சொல்கிறான் என்று புரிந்து கொண்ட அனு, புன்னகைத்தாள்.

பேரானந்தம்!

ஓர் அமெரிக்கரிடம் "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டால், "ஃபைன்!" என்பார். ஜப்பானியரிடம், "உங்கள் பிசினஸ் எப்படி?" என்றால் "மிக நன்றாக நடக்கிறது!" என்பார். ஜெர்மானியரிடம் "குடும்ப வாழ்க்கை எப்படி?" என்றால் "ஹாப்பி!" என்பார். ஆனால், நம் ஊரில் இதே கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள்! அலுத்துக் கொள்ளுவார்கள். பிசினஸைப் பற்றிக் கேட்டு விட்டாலோ, "ம்... மனுஷன் பண்ணுவானா சார் இந்த பிசினஸ்!" என்பார். யோகா, வாழ்க்கையை ஒரு சந்தோஷமான விஷயமாய்க் கருதுகிறார். தன் புத்தகத்துக்கு அவர் வைத்திருக்கும் தலைப்பு ரொம்பப் பொருத்தம்."



புகைப்படக் கலைஞர் யோகாவின் 'என் வாழ்வே பேரானந்தம்' நூல் வெளியீட்டு விழாவில் லேனா தமிழ்வாணன்.

- மௌலி

"உங்க வீடு எங்க இருக்கு?" என்று மூத்தவன் கேட்டான்.

"திருவல்லிக்கேணி. டி.பி. கோயில் ஸ்ட்ரீட்."

நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று அவள் கேட்கமாட்டாளா என்று காத்திருந்தார்கள்.

அவளுக்கு அது புரிந்தது. அவர்கள் ஆழ்வார் பேட்டையில் வசிப்பதை அவள் அறிவாள். கேட்டுத் தெரிந்து கொள்ள வேறு விஷயங்களா இல்லை?

அண்ணா யுனிவர்சிடிக்குப் பிறகு அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ஆழ்வார் பேட்டையில் சொந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு அமெரிக்கக் கனவு இருக்காதா? அவர்களின் தந்தை நகரில் மூன்று காஃபி பப்கள் வைத்திருக்கிறாராமே? ஏஸி காரில் வந்திறங்கும் ஜீன்ஸ் அணிந்த தமிழ்க்கலாசாரத்துக்கு டி.பி. கோயில் தெரு அச்சுவெல்லக் குடியிருப்புக் கலாசாரம் புரியுமா? அப்புறம் ஐந்தாண்டுத் திட்டங்கள்? மூன்று வேளை ரசம் சாதம்?

ஆனால் நினைத்துக் கிளுகிளுப்படையவோ கண்மூடி, மனத்துக்குள் ரசிக்கவோ இந்த எதுவுமே ஒரு தடை இல்லை. அது நிச்சயம். அவரவர் மனத்துக்கு அவரவரே சர்வாதிகாரி அல்லவா?

"ஆழ்வார்பேட் பக்கம் வந்தீங்கன்னா, அவசியம் வீட்டுக்கு வரணும்."

மூத்தவன் விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினான்.

"உங்க வீட்டு போன் நம்பர் என்ன?"

ஜெமினியின் ஜூனியர் குழந்தை கவனமாகக் கேட்டது.

அனு ஒரு கணம் யோசித்தாள். பிறகு எயிட் ஃபைவ் ஃபோர் சிக்ஸ் ஃபோர் டூ எயிட் என்று சொன்னாள். ஏரியாவில் நம்பர் பல மாறப் போகிறது என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை அவள் சொல்லவில்லை.

அவர்கள், அவர்கள் பக்கத்து உறவினர்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டு, எவர்சில்வர் பாத்திரம் வைத்த தேங்காய்ப் பைகளைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

சுமார் முப்பது மணி நேரத் திரைப் படத்தின் உச்சகட்டக் காட்சி போலிருந்தது அது. அனு வாசலில் தான் இருந்தாள். வேறு யாரிடமோ பேசிக் கொண்டிருப்பது போலான பாவனையில், பார்வை அவர்களின் மீதே இருந்தது. குறிப்பாக, 'அவனி'டம்.

தெரு முனையில் அவர்களின் பைக் மறைந்த பிறகே உள்ளே வந்தாள். காத்திருந்தவள் போல மைதிலி அவளை அருகே அழைத்தாள்.

"என்னடி?"

"வாசல் வரைக்கும் வழியனுப்பிட்டுத்தான் வர்ற உத்தேசமா?"

"சீ போ" என்றாள் அனு.

"அப்பாட்ட சொல்லட்டுமா?"

"உதைப்பேன், ராஸ்கல்."

விலகிப் போனவளைப் பிடித்து இழுத்து, "இதை மட்டும் சொல்லிடு. ரெண்டு பேர்ல நீ யாரை செலக்ட் பண்ணே?"

அர்த்தமற்ற, விளைவுகளற்ற, அந்த க்ஷணத்துடன் கரையப் போகிற சாக்லெட் சந்தோஷங்கள்.

அனு ஒரு கணம் யோசித்தாள். சொல்லி விடலாமா, இவள் தன் புருஷனிடம் சொல்லி, அவர் முனைந்து ஏதாவது நடவடிக்கை எடுத்து, எதிர்பாராத இனிய அதிர்ச்சியாக ஏதாவது நடந்து...

ஒரு கணம்தான். இன்று கல்யாணச் சாப்பாடு. நாளை ரசம் சோறுதான். நாளை முதல் அடுத்த மூன்றாண்டுகள்.

அப்பா பேசியதில் ரசம் சோற்றை விட மூன்றாண்டுகள் என்பதில் ஓர் அழுத்தம் இருந்ததாக அப்போது அவளுக்குத் தோன்றியது.

"சொல்லுடி! நீ யாரை செலக்ட் பண்ணே?"

விடாமல் மீண்டும் கேட்டாள் மைதிலி.

அனு ஒரு முடிவுக்கு வந்தாள். மனத்துக்குள் அவன் குரல் கேட்டது. 'ஹாய்..!' நினைவில் அவன் முகம் நிழலாடியது.

கொப்பளிக்கும் குறும்புடன் சொன்னாள்:

"ரெண்டு பேரையுமே!"

"உதைப்பேண்டி உன்னை!"

வெடித்த சிரிப்பில் எல்லாம் கரைந்து விட்டிருந்தது.

(முற்றும்)

"என் பாட்டுக்கு நானே வாயசைத்தேன்!"





கைகளையும், முகத்தையும் பாவத்தோடு அசைத்துப் பாடிக் கொண்டிருக்க வேண்டிய பின்னணிப் பாடகர், அதிரடியான மேற்கத்திய டிரம் இசைக்குக் கால்களையும், இடுப்பையும், வளைத்து வளைத்து ஆடிக் கொண்டிருந்தார். இடம், சினிமா நடனக் கலைஞர் கலாவின் நடனப்பள்ளி. அந்தப் பாடகர் ஹரிஷ் ராகவேந்திரா! அருண் பாண்டியன் இயக்கும் 'விகடன்' படத்தில் இவர்தான் கதாநாயகன்.

"பாடகன் ஆகணுங்கிறது மட்டும்தான் என்னோட கனவா இருந்தது. பாட வந்தவுடனே, நடிக்கவும் வாய்ப்புகள் வந்தன. ஆனால் திட்டவட்டமா மறுத்துட்டேன். நடிக்கிற எண்ணமே இல்லை. விஜய் தொலைக்காட்சி முதல் வணக்கம் நிகழ்ச்சியில் என்னைப் பார்த்துட்டு, அருண்பாண்டியன் சார் கூப்பிட்டார். ஊமை விழிகள் படத்துலே ஆரம்பிச்சு, அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும்... அப்பாவுக்கும் பிடிக்கும்... நேர்லே போய் 'நோ' சொல்லிட்டு வரலாம்னு போனால், அவரோட ஓபன் ஹார்ட் அணுகு முறையும் கதையும் ரொம்பப் பிடிச்சுப் போச்சு. தவிர, என்னோட ரெக்கார்டிங், இசை, கச்சேரி தேதிகளுக்குக் கொஞ்சம் கூட இடைஞ்சல் வராமல் படப்பிடிப்பை அமைச்சுக்கலாம்னு உறுதி கொடுத்தார். அதைக் கடைசி வரைக்கும் காப்பாற்றி விட்டார்" என்கிறார் ஹரிஷ்.

"உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு" என்று வசனம் பேசி நடிக்கத் தொடங்கியிருக்கும் ஹரிஷின் அப்பா, கோவை கலா மன்றத்தில் பிஸியான நாடக நடிகராக இருந்தவராம்.

"படப்பிடிப்பு தொடங்கின முதல் இரண்டு தினங்கள், கொஞ்சம் தயக்கமாக இருந்தது. அப்புறம் நடிப்பு சகஜமாகி விட்டது" என்கிறார், கதாநாயகி காயத்ரி ரகுராமுடன் டூயட் பாடி விட்டு வந்திருக்கும் ஹரிஷ்.

"கொடைக்கானலில் இருந்து பதினோரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'பேரிஜம்' என்ற மலைப்பகுதிக்குப் படக் குழுவோடு நடந்தே போனோம். சுவிட்சர்லாந்தைவிடப் பல மடங்கு அழகான லேண்ட்ஸ்கேப்கள் அங்கே இருக்கு. அங்கே பாடல்காட்சியைப் படமாக்கினோம். நான் பாடிய பாடலுக்கு நானே வாயசைத்தேன்" என்கிறார் இந்தப் புது ஹீரோ!

ஹரிஷ் தவிர ஜெரோம் புஷ்பராஜ் என்ற புதிய இசை அமைப்பாளரும் விகடன் படத்தில் அறிமுகமாகிறார். சரி. படத்தில் விகடன் யார்? அருண்பாண்டியனா? ஹரிஷா? அது சஸ்பென்ஸ் என்கிறார்கள்!

— ஜே.ஜெ.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd. Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C. Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan. Editor : Seetha Ravi.

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-

Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

